# தமிழரசு

1.3.1994 ரூ.3





பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



ஏழை எளியோர் மற்றும் சாதாரண மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் அரசின் இயக்கம், அவர்களது நியாயமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் தர எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராய் இருக்கிறது.

# இந்த இதழில்...


பல்லாண்டு வாழ்கவெனப் பல்லாயிரக்கணக்கானோர் வாழ்த்து ... 2

விளையாட்டுப் போட்டிகளின் ஒளிமிகுந்த காலம் தமிழ்நாட்டில் உதயமாகிறது! *மாண்புமிகு முதல்வர் உரை* ... 6

புரட்சித்தலைவி வாழிய பல்லாண்டு கவிதை ... 10

அனைவர்க்கும் கல்வி என்னும் குறிக்கோளை அடைய அனைத்து முயற்சிகளையும் எடுப்போம் *மாண்புமிகு முதல்வர் உரை* ... 12

பத்திரிகைத் தொழில் என்பது... *மாண்புமிகு முதல்வர் உரை* ... 19

அரசு தாய்சேய் நல மருத்துவமனை 150-வது ஆண்டு நிறைவு விழா *மாண்புமிகு முதல்வர் உரை* ... 23

தடகளப் போட்டி - சர்வதேச விளையாட்டு வீரர்களின் நன்றிக் கடிதம் ... 32

'எக்ஸ்னோரா' பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 34

புதிய வீராணம் திட்டம் ... 38

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் ... 41

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் ... 49

பேசின் பாலம் எரிவாயு மின்திட்டம் அடிக்கல் நாட்டு விழா ... 57



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025

மாசித் திங்கள் - 17

மலர்:24 இதழ்:17

1-3-1994

64 பக்கங்கள் விலை: ரூபாய் மூன்று







# மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாள்:

# பல்லாண்டு வாழ்கவெனப் பல்லாயிரக் கணக்கானோர் வாழ்த்து!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1994 அன்று காலை 9.30 மணி அளவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியினை அனுப்பியிருந்தார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு எம்.சென்னா ரெட்டி அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியினை, மலர்ச் செண்டுடன் அனுப்பி வைத்துத் தெரிவித்திருந்தார்.

முன்னதாக முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்டராமன், மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு வி.சி. சுக்லா, மாண்புமிகு மத்திய நலத் துறை இணை அமைச்சர் திரு கே.வி.தங்கபாலு, மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு வீரப்பமொய்லி ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியினை அனுப்பியிருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அதிகாலை முதலே, அரசியல் பிரமுகர்கள், கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் முதலானோர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் இல்லத்தருகே கூடத் தொடங்கினர்.

அன்று காலை 10.00 மணியிலிருந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு சட்டப் பேரவைத்

தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு முக்கியப் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் முதலானோர் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து தங்களுடைய பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், காவல் துறை இயக்குநர் திரு எஸ் ஸ்ரீபால், அரசு உயர் அதிகாரிகள், காவல் துறை உயர் அதிகாரிகள், தமிழ்நாடு தேர்வாணைக்குழுத் தலைவர் திரு எஸ்.ஆர். கருப்பண்ணன் முதலியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை நகர ஷெரீப் டாக்டர் கே. சொக்கலிங்கம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் திரு குன்னக்குடி வைத்தியநாதன் அதன் செயலாளர் திரு ஆர்.எஸ். மனோகர், திரைப்பட நடிகை ஸ்ரீவித்யா, சுகன்யா, திரைப்பட நடிகர் திரு சரத்குமார், திரு ஹாஜா ஷெரீப், நடன இயக்குநர் திரு எஸ். ரகுராம், திரைப்பட இயக்குநர் திரு ஸ்ரீதர் ராஜன் மற்றும் திரைப்படத் துறையைச் சேர்ந்த பல்வேறு திரைப்படக் கலைஞர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தங்களது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். மேலும், திரைப்படத் தயாரிப்பாளர் திரு பாலாஜி, திரைப்பட நடிகர் திரு எஸ்.வி. சேகர் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தியினை அனுப்பி வைத்திருந்தார்கள்.

மேலும் மக்கள் குரல் பத்திரிகையின் ஆசிரியர் திரு எம் சண்முகவேல், நியூஸ் டுடே பத்திரிகையின் ஆசிரியர் திரு டி.ஆர். ஜவகர், 'மெட்ராஸ் டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் திரு பிலிப் தாமஸ், திரு நல்லி குப்புசாமி, தொழில் அதிபர் திரு ராமசாமி உடையார் அவர்களின் துணைவியார், அப்பலோ மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்களின் புதல்வியார், ஆற்காடு இளவரசர் மற்றும் அவரது துணைவியார் முதலியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து தங்கள் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை அண்ணா சாலை தர்காவிலிருந்து, வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப் அவர்கள் தலைமையில், இஸ்லாம் மக்கள் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப்பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. அன்னை வேளாங்கன்னி தேவாலயத்திலிருந்தும், நாகூர் தர்காவிலிருந்தும், சிக்கல் சிங்கார வேலன் திருக்கோயிலிலிருந்தும், சென்னை அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலிலிருந்தும், சென்னை அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயிலிலிருந்தும், திருப்பதி அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயிலிலிருந்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி விசேஷ பிரார்த்தனைகள் செய்யப்பட்டு பிரசாதங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கப்பட்டன.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு திருக்கோயில்களிலிருந்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி விசேஷ பூஜைகள் செய்யப்பட்டு பிரசாதங்கள் அக்கோயில்களின் குருக்களால் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கப்பட்டன.

மேலும், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், பல்லாயிரக்கணக்கானோர் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து, தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

## வாழ்த்துக்கள் குவிந்தன!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1994 அன்று காலை 6 மணி முதலே அவரது போயஸ் தோட்டத்து வீட்டிற்கு அருகில் பொது மக்களும், கட்சித் தொண்டர்களும் பெருந்திரளாகக் கூட ஆரம்பித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலை 9.30 மணி முதல் வாழ்த்துச் சொல்ல வந்திருந்த அமைச்சர்கள் உட்பட, கட்சிப் பிரமுகர்களையும் பொதுமக்களையும் நேரில் சந்தித்தார்.

தமிழகத்தின் பல்வேறு முக்கியமான கோயில்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயரில் அர்ச்சனை செய்து, அந்தக் கோயில் பிரசாதங்களுடன் நூற்றுக்கும் மேற்





பட்ட கோயில் குருக்கள் ஒரே நேரத்தில் வந்து மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியே பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

கிழக்குப் பிராந்திய கப்பற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் திரு பி. குஹா மற்றும் அவரது துணைவியார் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தியும் மலர்ச் செண்டையும் அனுப்பி வைத்திருந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளின்போது அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டு நடைப் பயணமாகவும், சைக்கிள் பயணமாகவும், செவ்வாடை அணிந்து கொண்டும், மஞ்சளாடை அணிந்து கொள்ளும் 27 குழுக்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்தித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு குழுவையும் தனித்தனியே சந்தித்து அவர்களுக்குத் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

தாம்பரம் விமானப் படை நிலையத்தின் **Commanding Officer Air Commodore** எச்.எம்.சிங், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியை அவரது சார்பாகவும் தாம்பரம் விமானப் படை நிலையத்தில் பணி புரியும் அனைவரது சார்பாகவும் அனுப்பி வைத்திருந்தார்கள்.

அது மட்டுமின்றி, பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கங்கள், அரசு அலுவலர் சங்கங்கள், மேலும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சாரை சாரையாக வந்திருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்தார்கள்.

மேலும், CRPF கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு டி.ஆர்.கார்த்திகேயன், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் விமானப்படையைச் சேர்ந்த Wing Commander திரு கே.என்.ஜி. நாயர், தொழில் அதிபர் திரு டி.பி. சந்தானம், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையில் இயக்குநர் டாக்டர் டி.அகர்வால் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துச் செய்திகளையும், மலர்ச் செண்டுகளையும் அனுப்பி வைத்திருந்தார்கள்.

திரைப்பட நடிகை அஞ்சு, 'தினத்தூது' பத்திரிகை ஆசிரியர் திரு ஜி.ராஜ்குமார், 'நியூஸ் டுடே' பத்திரிகை ஆசிரியர் திரு டி.ஆர்.ஜவகர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி ஜெ. லோகாம்பாள், எம்.எல்.ஏ., ஆகியோரும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள், சி மற்றும் டி பிரிவுத் தலைவர் திரு சி.கா. மோகன், மற்றும் இதர நிர்வாகிகள், இன்னொரு சி மற்றும் டி பிரிவின் தலைவரான திரு கோபால கிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள், அலகு குத்திக் கொண்டு வந்த இரண்டு கட்சித் தொண்டர்கள் ஆகியோர் நேரில் வந்திருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

## தடகளப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் பரிசு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 24.2.1994 அன்று மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிப்ரவரி மாதம் 2-ஆம் நாளன்று ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற பன்னாட்டுத் தடகளப் போட்டிகள் மற்றும் 33-வது தேசிய தடகளப் போட்டிகளின் தொடக்க நாள் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு கண்கவர் கலைநிகழ்ச்சிகளைச் செய்து காட்டிய பள்ளிக் குழந்தைகளுக்கும், வீரம் செறிந்த மோட்டார் சைக்கிள் சாகஸ நிகழ்ச்சிகளைச் செய்து காட்டிய காவல் துறையினருக்கும், மாணவ, மாணவியர்களுக்குப் பயிற்சி அளித்த ஆசிரிய, ஆசிரியைகளுக்கும், கரகம், காவடி மற்றும் தீப்பந்தம் ஏந்திச் சென்ற நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்ட காவல் துறையினருக்கும் பரிசு அளித்துப்பாராட்டினார்.

பிப்ரவரி 2-ஆம் நாளன்று நடைபெற்ற தொடக்க விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் வெள்ளியிலான பதக்கம் ஒன்றும், அவர்களின் உபயோகத்திற்காக ஒரு லிட்டர் கொள்ளவு கொண்ட, 'வாட்டர் ப்ளாஸ்க்' ஒன்றும் வழங்கினார். மாணவ, மாணவியர்களுக்குப் பயிற்சி அளித்த ஆசிரிய, ஆசிரியைகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 3000 ரூபாயும், வெள்ளிப் பதக்கம் ஒன்றினையும், ஒரு லிட்டர் 'வாட்டர் ப்ளாஸ்க்' ஒன்றினையும் பரிசாக வழங்கினார்.

அன்றைய தினம் நடைபெற்ற

காவல்துறையினரின் கரகம் காவடி ஆட்ட நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட ஆண் மற்றும் பெண் காவலர்கள் ஒவ்வொருவருக்கும் 1000 ரூபாயும், வெள்ளிப் பதக்கம் ஒன்றினையும், ஒரு லிட்டர் 'வாட்டர் ப்ளாஸ்க்' ஒன்றினையும் பரிசாக வழங்கினார். காவல்துறையினரால் நிகழ்த்தப்பட்ட வீரசாகஸ மோட்டார் சைக்கிள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட காவலர்கள் ஒவ்வொருவருக்கும் 5000 ரூபாயும், வெள்ளிப் பதக்கம் ஒன்றினையும், ஒரு லிட்டர் 'வாட்டர் ப்ளாஸ்க்' ஒன்றினையும் பரிசாக வழங்கினார்.

ரயில்வே பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட TARCH TATTOO தீப்பந்த அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் 1000 ரூபாயும், வெள்ளிப் பதக்கம் ஒன்றினையும், ஒரு லிட்டர் 'வாட்டர் ப்ளாஸ்க்' ஒன்றினையும் பரிசாக வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விளையாட்டரங்கத்திற்குள் நுழைந்தவுடன் 12,500-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவரும் எழுந்து நின்று கைதட்டி வரவேற்றார்கள். பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நேரு விளையாட்டரங்கில் உள்ள ஓடுகள பாதை அமைப்பு போன்றும், ஓடுகள அமைப்பின் மேல் இளம் சிங்கம் உள்ளது போன்றும், ஒரு பெரிய அழகான கேக்கினைப் பிறந்த நாள் பரிசாக வழங்கினார்கள். அதனை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, மாணவ, மாணவியர்களின் வேண்டுகோளிற்கு இணங்க, பிறந்த நாள் கேக்கினை அனைவரின் முன்னிலையில் வெட்டினார். அப்போது, மாணவ, மாணவியர்கள் அனைவரும் பிறந்த நாள் வாழ்த்துக்கூறியதுடன், பிறந்த நாள் வாழ்த்துப் பாடலையும் பாடினார்கள்.

இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பிப்ரவரி 2-ஆம் தேதி அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட சுமார் 15,000 பேர்களுக்கு வெள்ளியிலான பதக்கங்களையும், வாட்டர் ப்ளாஸ்க்குகளையும், மேற்சொன்னவாறு பரிசுத் தொகையையும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிப்ரவரி 2-ஆம் நாளன்று தொடக்க விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் தேநீர் விருந்து அளித்தார். தேநீர் விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பள்ளிக் குழந்தைகளின் அருகில் சென்று அவர்கள் நலம் குறித்து விசாரித்தார். பள்ளிக் குழந்தைகள் அனைவரும் பெரு மகிழ்ச்சியுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தங்களது மகிழ்ச்சியையும், பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த மகிழ்ச்சியான விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக, விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள்வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர், கல்வித்துறைச் செயலர் மற்றும் மாணவ மாணவிகள் மலர்ச் செண்டும், பொன்னாடையும் வழங்கினார்கள்.

விழா முடிவில், அண்மையில் நடந்த தடகளப் போட்டியின்போது சட்டம் ஒழுங்கை நன்கு பராமரித்ததற்காக, சென்னை நகரக் காவல் துறை ஆணையர் திரு ஆர். இராஜகோபாலன் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு ஜே.சி.

## மாண்புமிகு முதல்வர் பிறந்த நாள்: 46 இடங்களில் 46 ஆயிரம் மரக்கன்றுகள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 46-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் 46 இடங்களில் 46,000 மரக்கன்றுகள் நட்டு, 'மாண்புமிகு புரட்சித்தலைவி வனச் சோலை' உருவாக்குவதென வனத்துறை திட்டமிட்டுள்ளது. இது ஒரு 'மாதிரிக் காடாக' அமையும்.

சாலை ஓரங்களிலும், கிராமங்களில் உள்ள மக்களுக்கு நிழல் தரும் நல்ல இடங்களைத் தேர்வு செய்து, இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு நல்ல இடங்களைத் தேர்வு செய்து, இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு இடங்களிலும் இது ஒரு எக்டேர் (2½ ஏக்கர்) நிலப் பரப்பில் அமையும். எதிர்காலத்தில் பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் பயன்படுமாறு இது அமையும்.

வனத்துறை எல்லா இடங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த மிகப்பெரும் விழாக்கள் எடுக்கப்படும். இத்துடன், இவ்வாண்டு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளை ஒட்டி, இவ்வாண்டு முழுவதும் வனத்துறையினர் 'மலை வாழ் மக்கள் ஆண்டாக' அனுசரிப்பார்கள். மலைவாழ் மக்களுடைய சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு, அவர்களின் பாதுகாப்பிற்கு முழுமையாக வனத்துறையினர் உதவுவார்கள்.

இதன் மூலம், வனத்துறையினர் வனப் பகுதியில் மலை வாழ் மக்களை நேரடியாகச் சந்தித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா எடுத்து இனிப்பு வழங்கி, அவர்களுக்கு உடுக்க உடை, உண்ண உணவு வழங்கி இவ்விழாவினை சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.



# விளையாட்டுப் போட்டிகளின் ஒளி மிகுந்த காலம் தமிழ்நாட்டில் உதயமாகிறது!

**சர்வதேச அழைப்பு தடகளப் போட்டி மற்றும் 33-வது தேசிய தடகளப் போட்டி களின் தொடக்க விழாவில், அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொண்ட பள்ளி மாணவ, மாணவி யரைப் பாராட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் (24.2.94) அன்று ஆற்றிய உரை.**



இது ஒரு மகிழ்ச்சியான அழகான விழாவாகும். அகில உலக அழைப்பு தடகளப் போட்டி, மற்றும் 33-வது தேசிய தடகளப் போட்டிகளை மாபெரும் வெற்றிகரமாக நடத்திக்கொடுத்தமைக்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் - குறிப்பாக குழந்தைகளுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பதற்காகவே இவ்விழாவினை ஏற்பாடு செய்ய விரும்பினேன். ஆனால் இன்று என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட நீங்கள் முடிவு செய்ததின் மூலம், இதை மறக்க முடியாத விழாவாக மாற்றிவிட்டீர்கள்.

நான், கடைசியாக, பிறந்த நாள் கேக்கை வெட்டியது, 23 வருடங்களுக்கு முன்பு, 1971-ஆம் ஆண்டுதான். 1971-இல் என் தாயார் உயிரோடு இருந்தபோது எனக்குப் பிறந்த நாள் விழா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார். என் அன்னையுடன் நான் கொண்டாடிய கடைசிப்பிறந்த நாள் அதுதான். ஏனெனில் அந்த வருடக் கடைசியில் என் அன்னை மறைந்து விட்டார். என் தாயாரின் மறைவுக்குப் மின் நான் என் பிறந்த நாளைக் கொண்டாடுவதை நிறுத்தி விட்டேன். என் பிறந்த நாளன்று புத்தாடை அணிவதை நான் நிறுத்தி விட்டேன். எந்த விதமான பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கும் ஈடுபடுவது கிடையாது. ஆனால் நான் அரசியலில் இறங்கி, பெரியதோர் அரசியல் கட்சிக் குத் தலைவரானதும், கட்சிப் பிரமுகர்கள், தலைவரானதும், கட்சிப் பிரமுகர்கள், தொண்டர்கள், என் ஆதரவாளர்கள், என் நலத்தில் அக்கறை கொண்டோர், என் பிறந்த நாளன்று என்னுடைய வீட்டில் குவியத் தொடங்கினர். ஆரம்பத்தில் ஓரிரு ஆண்டுகளுக்கு, என் பிறந்த நாளன்றுகூட நான் சந்திக்கவில்லை. ஆனால், பின்பு, அப்படிச் செய்வது சரியல்ல என நான் உணர்ந்தேன். என் பிறந்த நாளன்று

என்னை வாழ்த்த வருபவர்களின் உணர்வு களைக் காயப்படுத்த எனக்கு உரிமை யில்லை. நான் எந்த விருந்தும் தர வில்லையென்றாலும் கேக் வெட்டவில்லை யென்றாலும், என் பிறந்த நாளன்று என்னை வாழ்த்த வருபவர்கள் அனை வரின் வாழ்த்துக்களை நான் ஏற்று வந்தேன். எனவே 23 ஆண்டுகளுக்குப் பின்னர், என் அன்னையின் மறைவுக்குப் பின்னர் இப்பொழுதுதான் முதன்முறை யாக ஒரு பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு, கேக் வெட்ட ஒப்புக்கொண டேன். ஏனெனில், நீங்கள் என்மீது வைத்துள்ள இதயபூர்வமான பாசத்தால் எவ்வளவு தூரம் நான் உணர்ச்சி வசப் பட்டேன் என்பதை நான் உங்களுக்குக் காட்ட விரும்பினேன்.

உங்களது அன்பான வாழ்த்துக்களை யும் நல்லெண்ணத்தையும் என் வாழ் நாள் முழுவதும் நெஞ்சில் நிறுத்தி மகிழ்வேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் பலப்பல நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1994 பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாளன்று மாலை, தொடக்க விழாவின் போது, அற்புதமான முறையில் உங்கள் திறமைகளை வெளியிட்டபோது, கவர்ந் திழுக்கும் உங்கள் சாதனைகளை இந்த விளையாட்டரங்கில் கூடி நேரடியாகக் கண்டுகளித்த ஆயிரக்கணக்கானோர் தொலைக்காட்சியில் கண்டுகளித்த இலட்சக்கணக்கானோர் இதயங்களைக் கொள்ளைக் கொண்டபோது, நான் மிகவும் பெருமைப்பட்டேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பெருமை மிகவும் நியாயமானதே. ஏனெனில் தொடக்க விழாவிற்குத்தயார் செய்ய உங்களுக்குக்குறுகிய கால அவ காசமே இருந்தது. ஆனால் நீங்கள் உங்களை இந்த நிகழ்ச்சிகளில் முழுமை யாக ஈடுபடுத்திக் கொண்டீர்கள். நீங்கள் காட்டிய தாளலயம், அசைவுகளின் அழகு, நிறைவாகச் செய்த அழகு ஆகியவை இவையெல்லாம் உங்கள் தரம், உங்கள் அர்ப்பணிப்பு உணர்வு, உங்கள் கலைத் திறன் ஆகியவற்றைக் காட்டியுள்ளன.

தொடக்க நாளன்று நாம் அழைத் திருந்த ஒவ்வொரு விருந்தினரும், அன்று அற்புத நிகழ்ச்சிகளை நீங்கள் நிகழ்த்திக் காட்டிய பாங்கினை புகழ்ந்து பாராட்டி னார்கள். அத்தனை பாராட்டுக்களையும் உங்களுக்கே நான் உரித்தாக்குகிறேன். கிராமியக் கலைகளை வியத்தகு வகையில் நடத்திக் காட்டிய இத்துறையில் அகில இந்தியப்புகழ்பெற்ற காவல்துறை ஆட வர்க்கும், மகளிர்க்கும் என் மனப்பூர்வ மான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது கண்கவர் நிகழ்ச்சிகளும், பாதங்களைத் தாளம் போட வைக்கும் அவர்களது இசையும் அனைவரையும் மயக்கியது.

காவல்துறையைச் சேர்ந்தவர்களின் அதிதீர மோட்டார் சைக்கிள் சாகசங்கள் அதிகபட்ச பாராட்டுதல்களுக்கு உரிய வர்கள் ஆவர். இரயில்வே பாதுகாப்பு அணியினரின் தீப்பந்த நடனம், வழக்கம் போல் அழகிய கண்கொள்ளாக் காட்சி யாக விளங்கியது.

தொடக்க விழா நிகழ்ச்சிகள் மாபெரும் வெற்றியடைய அருமையாகப் பங்காற்றிய தமிழ்நாடு காவல்துறை மற்றும் இரயில்வே பாதுகாப்புப் படை ஆகியவற்றைச் சார்ந்த ஆடவர், மகளிர்க்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

ஒரு மைல்கல்லாக விளங்கும், இந்த மகத்தான ஜவகர்லால் நேரு விளை யாட்டரங்கினை ஒரு வருடத்திற்கு முன்பு நாம் தொடங்கி வைத்தோம். தொடக்க விழாவினை தொடர்ந்து வந்த அகில உலக ஜவகர்லால் நேரு அழைப்பு கால் பந்தாட்டப் போட்டிகள் பெரும் வெற்றி யடைந்தன.

சமீபத்தில் நாம் நடத்திய தடகளப் போட்டிகள், தமிழகத்தில் நம்மால் என்ன சாதிக்க முடியும் என்பதைக்காண இந் நாட்டு மக்களின் கண்களைத் திறந்தன. வெளிநாட்டிலிருந்து வந்து இப்போட்டி களில் கலந்து கொண்டவர்கள், இப் போட்டியை நடத்தியதின் தரத்தை வெகுவாகப் பாராட்டி எனக்குத் தனிப் பட்ட முறையில் கடிதம் எழுதியுள்ளனர். ''அகில உலக ஓட்டப்பந்தய வீரர்களை அழைத்ததிலிருந்து தங்களது தொலை நோக்குப் பார்வையும், அருமையான ஏற்பாடுகளும், இந்திய தடகளத் துறை யில் தமிழகம் முன்னணியில் நிற்கும் என்பதை உறுதிசெய்யும்'' என்று கூறி யிருக்கிறார்கள். மேலும் அவர்கள் எழுது கையில் ''தங்களின் விருந்தோம்பல் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருந்தது. இந்தியாவின் சிறந்தவைகளின் அனைத்தின் உருவக மாகதமிழகம் விளங்குவது தெளிவாகிறது. இந்தியாவின் மதிப்பும் சிறந்து விளங்கு





கிறது'' என்று குறிப்பிட்டுள்ளனர். வேறு பல தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ள விரைவில் சென்னை வருவதாக வும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

''ஒரு சுற்றுலாப் பயணியை வர வேற்று ஒரு நண்பனைத் திரும்பி அனுப்பு'' என்பது பழமொழி, அகில உலக அழைப்பு தடகளப் போட்டிகளின் காரணமாக, தலைசிறந்த ஒட்டப்பந்தய வீரர்களை வெளிநாட்டிலிருந்து அழைத்து வந்தோம். அவர்கள் அருமையான சாதனைகள் பல செய்து காட்டினர். அவர்களைத்தமிழ்நாட்டுக்கும் சென்னைக் கும் நிரந்தர நண்பர்களாக்கி அனுப்பி வைத்தோம். ஆனால் அதைவிட முக்கிய மாக, விரைவில் அகில உலக தரத்துடன் கூடிய ஓட்டப்பந்தய வீரர்களாக உருவாக ஆர்வம் கொண்ட இளைஞர்களைத் தங்கள் பின்னால் விட்டுச் சென்றுள்ளனர். சீனாவில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுகளில் தடகளப் போட்டியில் தங்க மெடலை வென்ற அமுதா நம் மிடையே உள்ளார். நமது இளைஞர் குற்றாலீசுவர்ன் இங்கிலாந்துக்கணவாயை (English Channel) கடக்கத் தயாராகி வருகிறார். ஏதாவதொரு விளையாட்டுத் துறையில் முன்னேற நமது இளைஞர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

என் பள்ளி நாட்களில் விளை யாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந் தேன். நமது குழந்தைகளின் விளை யாட்டை மேம்படுத்தத் தகுந்த சூழ் நிலையை உருவாக்குவதில் நானும் ஓரளவு பணியாற்றியுள்ளேன் என்பதில் மகிழ்ச்சியடைந்துள்ளேன். தேசிய மற்றும் உல்களவில் ஒரு நல்ல நிலையை அடைய, உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நாங்கள் செய்து கொடுப் போம். நம்பிக்கையூட்டும்வண்ணம் திறமைகள் வெளிப்படுத்தி, அவற்றை





# ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்

பொது வாழ்வு என்பது மக்கட் பணி. அந்தப் பணியை யார் உண்மையாகச் செய்கின்றார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியும். உண்மையிலேயே தங்களுக்காகப் பாடுபடுபவர்கள் யார் என்பதை, தமிழக மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பேற்றது; சாதனை மேல் சாதனையாக, வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறது!

மக்கள் சக்தி என்ன என்பது, புரட்சித் தலைவருக்கும் எனக்கும், மற்றவர்களைவிட மிக நன்றாகவே தெரியும். அந்த மகா சக்தி தான் எனக்குப் பேராதரவாய், பக்க பலமாய், ஊக்கப் பொருளாய் இருக்கின்றது, என்பதை எண்ணும்போது, பெருமிதமும், பூரிப்பும் அடைகின்றேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றாரே, பேரறிஞர் அண்ணா; இன்று நான், ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே, வாழ்வின் அர்த்தத்தையே காண்கின்றேன். அவர்களது மகிழ்ச்சியில், எங்கள் அரசின் நோக்கத்தையும், அதன் நிறைவையும் காண்கின்றேன். அந்த மகிழ்ச்சியை ஏழை எளியவர்களிடம், நிரந்தரமாக நிலைக்க வைப்பதே, எனது தலையாய கடமையாகும். என்று உணர்ந்தவள் நான்.

அந்த நம்பிக்கையை எந்நாளும், உங்களுக்கு வழங்குகின்ற உங்கள் சகோதரியாக, உங்கள் பிரதிநிதியாக, உங்களுக்காக, அல்லும் பகலும் அயராமல், உறங்காமல், தொடர்ந்து பாடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்'
தொகுதி-2-விருந்து.

வளர்த்துக் கொள்ளும் மலரும் இளைஞர்களை நாங்கள் தத்து எடுக்கக் கொள்வோம். நீங்கள் உங்கள் கவலைகளையெல்லாம் மறந்து விளையாட்டில் முழுக் கவனம் செலுத்தி, குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைவதற்காக, உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புகிறோம்.

கிராமப்புறங்களில் விளையாட்டுக்களை வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். கிராமப்புறங்களில் காணப்படும் திறமைகளை அடையாளங்கண்டு அவற்றை வளர்த்து, தேசிய அளவில் அவர்களைப் பங்குபெறச் செய்ய விரும்புகிறோம்.

விளையாட்டுகள், ஒழுக்கத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. உண்மையான விளையாட்டு வீரர் இயல்பு எல்லைகளைக் கடந்து நிற்கிறது. வேற்றுமைகளை வேரறுக்கிறது. வெற்றி பெறுவதிலும் தோல்வியுறுவதிலும் காட்டுகின்ற ஒழுக்கம், நடந்துகொள்ளும் முறை, ஆகியவற்றுக்காக உண்மையான விளையாட்டு வீரன் அல்லது வீராங்கனையை உலகம் விரும்புகிறது. வாழ்க்கையின் போர்க்களங்களில் எவ்வாறு ஒரு மனிதன் வெல்கிறான் என்பது அவனது நடத்தையின் ஒரு பகுதியைக் காட்டும் என்றும் எவ்வாறு தோற்கிறான் என்பது நடத்தையின் முழுப்பகுதியையும் காட்டுகிறது என்றும் சொல்லப்படுவதுண்டு. மேலும், தோல்வி உண்மையான விளையாட்டு வீரனை அல்லது வீராங்கனையை வெற்றி பெறத் தூண்டுகிறது. ஏனெனில் விடா முயற்சிக்கு நிச்சயம் பலன்கள் உண்டு.

விளையாட்டுப் போட்டிகளில் ஒரு ஒளிமிகுந்த காலம் தமிழ்நாட்டில் உதயமாகிறது என்று நான் நினைக்கிறேன். இவற்றில் விஞ்சி நிற்க வேண்டும் என்னும் புத்துணர்ச்சியும் விருப்பமும் மாணவர்களிடையே தற்போது விளங்குவதை நான் பார்க்கிறேன். இந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அனைத்து வசதிகளையும் அளிக்க வேண்டுமென்பது என் விருப்பமாகும். 1995-ஆம் ஆண்டின் இறுதியில் மிகப்பெரும் நிகழ்ச்சியாக தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னை மாநகரம் நடத்தும். இங்கு, சென்னையிலேயே தலைசிறந்த தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்கள், போட்டிகளில் கலந்து கொள்வதை நீங்கள் பார்க்கலாம். இதே இடத்தில் மறுபடியும் இதேபோன்ற புகழ்மிகு கலைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

விளையாட்டுக்களிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் நீங்கள் ஒவ்வொருவரும் தீவிர ஆர்வம் காட்ட வேண்டுமென்றும் அண்மைக் காலத்திலேயே மிகச் சிறப்பாக விளையாடி புதிய வாகைகளைத் தேசத்திற்குப் பெற்றுத் தரவேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். எனவே நாம் மறுபடியும் சந்திப்போம்.

நீங்கள் இவ்விழாவில் கலந்து கொண்டமைக்காக உங்களுக்கு மறுமுறையும் நன்றி செலுத்துகிறேன். இந்த மாலைப் பொழுதை இனிய மாலைப்பொழுதாக எனக்கு நீங்கள் ஆக்கித் தந்தமைக்காக தனித்தனியாக உங்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# புரட்சித் தலைவி வாழிய பல்லாண்டு!

புன்னகை பூக்கும் தென்னவர் வாழ்த்தப்
புலர்ந்தது பாரீர் கீழ்வானம்!
புரட்சித் தலைவியின் எழுச்சித் திருநாள்
பூமியில் எங்கும் ஊர்கோலம்!

பெரியார் அண்ணா புரட்சித் தலைவர்
பெருமைகள் சேர்ந்தொரு பெண்ணாச்சு!
'பெண்மைக் கரசி புரட்சித் தலைவி'
என்னும் தமிழர் கண்ணாச்சு!

மகத்தில் பிறந்தவர் ஜெகத்தை ஆள்வது
மாநிலம் சொல்லும் பழஞ்செய்தி
மகமே இங்கு மாமகள் ஆக
வந்து பிறந்தது புதுச்செய்தி!

தங்கத் தமிழ்மகள் வடிவினி லேஒரு
தாரகை வந்தது மண்மீது!
தத்தித் தவழ்ந்த தமிழக வளர்ச்சி
தாவி எழுந்தது விண்மீது!











காவிரி தந்த கலைமகள் என்று
கண்கள் புகழ்ந்தன அப்போது!
காவிரி யேஇத் தாய்கொடை' என்று
காவியம் பாடுவ திப்போது!

புதுமைப் பெண்ணே வாழிய என்று
பொங்கி எழுந்தது புதுப்பாட்டு!
புரட்சித் தலைவி வாழிய என்று
பூக்களைத் தூவுது பூங்காற்று!

பெண்ணின் பெருமை பேண நினைக்கும்
பெரியவர் எல்லாம் வாருங்கள்
பெருமைக் குரிய கருணைத் திருமகள்
வாழிய என்றே கூறுங்கள்!

உரிமைக் குரலே உயிரென எண்ணும்
உயர்ந்தவர் எல்லாம் வாருங்கள்!
உலகம் வாழ்த்தும் தங்கத் தலைவி
ஓங்குக என்றே கூறுங்கள்!

**கவிஞர் இளந்தேவன்**





**24.2.94**
**மாண்புமிகு முதல்வர் அவர்கள்**
**பிறந்த நாள்**





# அனைவர்க்கும் கல்வி என்னும் குறிக்கோளை அடைய அனைத்து முயற்சிகளையும் எடுப்போம்!

## புதுடில்லியில் 15.2.94 அன்று நடைபெற்ற கல்வி பற்றிய முதல்வர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

'அனைவருக்கும் கல்வி' என்னும் இலட்சியத்தை நிறைவேற்றுவது குறித்த பொருத்தமான எல்லாச் செய்திகளையும் ஆய்ந்து ஆலோசிப்பதற்கு முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டியமைக்காக, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தொடக்கத்தில் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாடு வளர்ச்சி பெற அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பது முதன்மையானது. அவ்வாறு முதலிடம் தரவேண்டியதன் அவசியத்தை நாடு தற்போதாவது உணர்ந்து கொண்டிருப்பதுகுறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதை, மாநில அரசின் வழிகாட்டும் கோட்பாடாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஆக்கியுள்ளது. அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய 10 ஆண்டுக் காலத்திற்குள் எல்லாக் குழந்தைகளுக்கும் பதினான்கு வயதை அவர்கள் அடையும்வரை இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க மாநில அரசு முயலவேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது.

நாற்பதாண்டுக் காலத்திற்கு மேலான திட்டமிட்ட வளர்ச்சிக்குப் பிறகும் 'அனைவருக்கும் கல்வி' என்னும் நழுவிச் செல்லும் குறிக்கோளையே நாம் இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கிறோம் என்பது. எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதில் நமக்குச் சரியான பார்வை இல்லை என்பதையே பிரதிபலிக்கிறது.

கல்வியைக் குறித்த ஆய்வுகளும் பரிந்துரைகளும் அவ்வப்போது நடந்து கொண்டிருந்தாலும், இன்றியமையாத குறிக்கோளை நிறைவேற்றுவதில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஈடுபாடு பலவீனமாகவே இருந்துவந்திருக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைவதற்கான



நடவடிக்கைகளும் அரைகுறையாகவே எடுக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்பான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட வளர்ச்சிகளும் மெத்தனமாகவே இருந்துள்ளன.

மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் மாநிலத்துக்கு மாநிலம், வட்டாரத்துக்குப் வட்டாரம், சாதிக்குச் சாதி, வேறுபடும், குறிக்கோளை அடைவதில் ஏற்பட்டுள்ள வித்தியாசங்கள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் இந்தக் குறிக்கோளை அடைவதிலுள்ள வேறுபாடுகள் ஆகியவற்றால், கல்வி தொடர்பான விஷயங்கள் பெருமளவில் சிக்கலாகி உள்ளன. இந்தச் சிக்கல்கள் மேலும் சிக்கலாகிப் போயிருப்பதற்குரிய காரணங்கள்; கல்விப் பணியை வலுப்படுத்த வேண்டிய தேவை எதன் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டுமோ, அந்த நிர்வாக அமைப்பின் வகையோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. எதற்கும் மிகவும் இன்றியமையாதது மக்களின் ஒத்துழைப்பு. அந்த ஒத்துழைப்பைத் திரட்டுவதற்கு எத்தகைய ஓர் அமைப்புத் தேவை என்பதில் நமக்கும் தெளிவில்லாமல் இருக்கிறது. எனவே, இலக்கை எய்துவதற்கான செயல்திட்டத்தை வடிவமைப்பதற்காகவும், குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் அதை நிறைவேற்றுவதற்காகவும், தேவையான, முக்கியமான மாநில முதல்வர்களின் கருத்துகளுக்குச் செவிகொடுக்க மாண்புமிகு பிரதமர் அவர்கள் முன் வந்தமைக்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதில் மதிப்பிற்குரிய இந்தப் பேரவை மகிழ்வடையும். அரசியல் அமைப்புச் சட்டத்தின் இந்தக் கோட்பாட்டை உடனே நிறைவேற்ற வேண்டியது நம் தலையாய கடமை என்று நான் நம்புவதால், நீண்ட நெடிய காலம் பயனளிக்கும் இந்த முயற்சியை எடுக்கும் துணிவு எனக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குழந்தைகளின் கல்வி மகளிரின் எழுத்தறிவு இவை இரண்டும் சேர்ந்த ஒருங்கிணைந்த செயல்திட்டமாகிய புதுமையான, பதினைந்து அம்சக் குழந்தைகள் நலத் திட்டத்தையும் நாங்கள் நிறைவேற்றி இருக்கின்றோம். மாநில அரசுகள் குறிப்பிடத்தக்க அளவு தொடக்க முயற்சிகள் எடுக்க முடியும் என்றும், மாநில அரசின் எதார்த்தப் பார்வை, இணங்கும் தன்மை, புதுமைப்போக்கு, ஆகியவற்றுக்கு ஆதரவு நல்க மத்திய அரசு முன்வரும் என்றும் நாங்கள் நம்புகிறோம். நாட்டை உருவாக்க அடிப்படையாக விளங்கும் அனைவர்க்கும் கல்வி என்னும் புனிதமிகு குறிக்கோளை அடைய நம்மை நாமே மறு அர்ப்பணிப்புச் செய்யும் மாபெரும் வாய்ப்பாக இதனை நான் கருதுகிறேன்.

நம் முன்னாலுள்ள நிகழ்ச்சி நிரலில் காணப்படுபவை:

அனைவருக்கும் கல்வி என்னும் இலக்கை அடைவது பற்றிய பிரச்சினைகள் தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கமிட்டி, எழுத்தறிவுபற்றி அளித்த அறிக்கை மீது பரிசீலனை, மத்திய கல்வி ஆலோசனை வாரியம், கல்வி நிர்வாகத்தைப் பரவலாக்குவது குறித்து அளித்த அறிக்கை ஆகியவை ஆகும். அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை அடைவதிலுள்ள பிரச்னைகள் பற்றிய எனது கருத்தை முதலில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1990-ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கல்விக் கருத்தரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, "கி.பி.2000-இல் அனைவருக்கும் கல்வி" என்னும் பிரகடனம் சில முக்கியமான பொறுப்புகளை நமக்கு வழங்கியிருக்கிறது. தொடக்க நிலை குழந்தைப் பருவத்தில் அளிக்கப்பட வேண்டிய பராமரிப்பை வளர்த்தல் மற்றும் விரிவுபடுத்துதல், ஆரம்பக் கல்வியை அனைவருக்கும் உரியதாக்குதல்; எழுத்தறிவின்மையைக் குறைத்தல் குறிப்பாக 15-விருந்து 35 வயது வரை உள்ள வகுப்பினரிடையே எழுத்தறிவின்மையைக் குறைத்தல் - தொடக்கக் கல்விக்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்துதல் பெண்களின் சமத்துவத்திற்கு உரிய ஒரு கருவியாகக் கல்வியை ஆக்கி, பெண்களை வலுப்படுத்தும் வகையில், அவசியமான கட்டமைப்புகளையும் வழிமுறைகளையும் உருவாக்குதல் ஆகியவை அதில் அடங்கும். அடிப்படைக் கல்வியை அளிப்பதில், ஏற்படும் நுட்பமான பலன்கள் ஒருபுறமிருக்க அடிப்படைக் கல்வியில் நாம் முதலீடு செய்வதை விரைவான வளர்ச்சிக்கான ஒரு வழிமுறையாக நாம் கருத வேண்டும்.

சமூக நலம், நல வாழ்வு ஆகியவற்றின் மீது அடிப்படைக் கல்வி மற்றும் அதனுடைய கூட்டுப் பலன்கள் ஏற்



**புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடன் மற்ற மாநில அமைச்சர்கள்.**

படுத்தும் தாக்கம் என்பது நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னுக்குத் தள்ளும் ஓர் அவசியத் தேவை என்பதற்கு ஆவணச் சான்றுகள் அதிகம் உள்ளன. இதைக் கருத்தில் கொண்டு நாங்கள் தமிழகத்தில் ஒரு முழுமையான அணுகு முறையைக் கடைப்பிடித்திருக்கிறோம். இது 'அனைவருக்கும் கல்வி' என்னும் இலக்கை அடைவதிலுள்ள சிக்கல்களின் ஒவ்வொரு அம்சத்தையும் கருத்தில் கொள்கிறது. கி.பி.2000-இல் தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்வியை எல்லோர்க்கும் உரியதாக்கும் இலக்கை அடைவதற்காக, 1993-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட எங்கள் செயல் திட்டத்தில் இதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை நாம் என்ன சாதித்தோம் என்பதையும், இனி நாம் எவ்வாறு முன்னேற விழைகிறோம் என்பதையும் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பிறந்ததிலிருந்து குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி ஆகியவற்றிற்கான இயக்கத்தில் தமிழகம் முன்னணியில் உள்ளது. குழந்தைகளைப் பேணிக் காப்பது, கல்வி ஆகியவை உள்ளிட்ட ஒருங்கிணைந்த திட்டம், தமிழகம் முழுவதும் இவ்வாண்டு அமல்படுத்தப்படவுள்ளது. உலக வங்கி உதவியுடன் கூடிய சத்துணவுத் திட்டத்தாலும் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டங்களின் உதவியுடனும் மாநிலம் முழுவதும் ஆறு மாதம் முதல் ஆறு ஆண்டு வரை உள்ள அனைத்துக் குழந்தைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படும் ஒரு மகிழ்ச்சிகரமான நிலையை நாங்கள் எய்தியிருக்கிறோம். மேலும், தமிழ்நாடு அரசின் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ், ஆறிலிருந்து பதினான்கு வயது வரை உள்ள பள்ளி செல்லும் குழந்தைகள் அனைவரும் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். வளர்ந்துவரும் பல நாடுகளில் செயல்படுத்தப்பட்டுவரும் மாபெரும் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த மையங்களில் எல்லாம் கல்வி என்னும் அம்சத்தையும் உடன் இணைத்திருக்கிறோம். இதன் விளைவாக இவை சத்துணவு மையங்களாக மட்டுமல்லாமல் தொடக்கப் பருவக் கல்வி மையங்களாகவும் செயல்படுகின்றன.

'அனைவருக்கும் கல்வி' என்னும் இலக்கை நோக்கிய நமது பயணத்தில் இது உண்மையிலேயே குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். மேலும், தொடக்கக் கல்வி முறையோடு இளங்குழந்தைகளைப் பராமரிக்கும் முறையையும் இணைத்து ஒரு சிறப்புத் திட்டத்தை இந்தக்கோடை முதல் நான் தொடங்கக் கருதியுள்ளேன். பிரதான குறிக்கோளை அடைய, மாறுபட்ட இந்தத் துணைத்திட்டம் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று அரணாக விளங்குவதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

500 பேர் மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு கி.மீ. தொலைவுக்குள் ஒரு தொடக்கப்பள்ளி என்ற நிலையை உறுதிப்படுத்தியதன் மூலம், பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பை ஏற்கெனவே மேம்படுத்தியிருக்கின்றோம். மிக அண்மையில், பள்ளியை விட்டு நின்றுவிடுவதற்கான பல்வேறு காரணங்களை ஆராய்ந்தேன். மாணவர் பள்ளிக்குத் தொடர்ந்துவரும் நிலையை உறுதிப்படுத்த ஒரு பலமுனைத் திட்டத்தையும் விரைவாகத் தொடங்க எண்ணியுள்ளேன். இலவச மதிய உணவு, இலவச பாடப் புத்தகம், இலவச பஸ் பயணம், இலவசச் சீருடை, இலவசக் காலணி போன்றவற்றைக் கொண்ட கவர்ச்சிகரமான சலுகைகளின் தொகுப்பாக அது அமையும்.

நிதி ஆதாரங்களில் சிக்கல்கள் இருந்தபோதும், இந்த ஒட்டு மொத்தமான சலுகைகளின் தொகுப்பை நாங்கள் தொடர்ந்து வழங்குவோம்.

பெண்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியைச் சார்ந்த குழந்தைகள் நலிந்த பிரிவினர் ஆகியவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும். பெண் குழந்தைகளுக்கு உதவும் புதுமையான தொரு திட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். இத்திட்டத்தின்கீழ் பள்ளிப்பருவம் முழுவதும் அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படும். இந்த மாபெரும் பணிக்கு நாங்கள் செலுத்துகிற கவனம், ஒதுக்கியுள்ள நிதி ஆகியவற்றால் பள்ளியை விட்டு, பாதியில் நின்றுவிடும் சிக்கலுக்குக் குறிப்பிடத்தக்க ஒரு பரிகாரத்தை நாங்கள் காணமுடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

1994-95-ஆம் ஆண்டில் ஓராசிரியர் பள்ளிகள் தமிழ்நாட்டில் இருக்காது. அடுத்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் அதிக ஆசிரியர்களை எனது அரசு பணியில் அமர்த்த முடிவு செய்திருக்கிறது. இதன் விளைவாக 'ஒரு வகுப்பு; ஓராசிரியர்' என்ற இலக்கை நாங்கள் இறுதியாக எய்தி விடுவோம். ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்துவோம். அப்போது பலதரப்பட்ட கற்கும் தரங்கள், பலதரப்பட்ட கற்பிக்கும் தரங்கள், தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர் போன்ற சமூகத்தில் பிற்பட்ட பிரிவினரையும், பெண்களையும் மற்ற்வர்களுக்குச் சமமாகக் கல்வி கற்கும் திறனுடையவர்கள் என்று ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் மீதும் கவனம் செலுத்தப்படும். பெண்களை வலுவுள்ளவர்களாக ஆக்க அவர்களுக்குக் கல்வி அளிப்பது என்பது மிகமிக அவசிய

மாகும் என்று ஆணித்தரமாகக் கூறு வேன். அவ்வாறு எழுத்தறிவு பெற்று வலிமையுடன் விளங்கும் பெண் தனது சமூகக் கடமைகளைப் பெருத்த ஈடு பாட்டுடனும் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் நிறைவேற்ற முடியும். ஐந்தாம் வகுப்பு வரை பெண்களை மட்டுமே ஆசிரியர் களாக நியமிப்பது என்னும் திட்டத்தை நாங்கள் செயல்படுத்திவருகிறோம்.

ஆசிரியர்களின் அளப்பரிய ஆற்ற லில் எனது அரசாங்கம் நம்பிக்கை வைத்துள்ளது. முற்போக்கான எல்லாப் பணிகளுக்கும் அவர்களை எப்போதும் பயன்படுத்தி வருகிறது. பாடப்புத்தகத் தயாரிப்பில் தொடக்கப் பள்ளி ஆசிரியர் களையும் பங்கு பெறச்செய்யும் மிகச்சில மாநிலங்களில் ஒன்றாக எங்கள் மாநிலம் விளங்குகிறது. பாடத்திட்டம் தயாரிப் பிலும், அதைப்போலவே கல்வி சம்பந்த மான பல்வேறு பிரச்சினைகளுக்குரிய சாத்தியமான தீர்வுகளைக் காண்பதிலும் அவர்களைப் பெருமளவிற்கு ஈடுபடுத்த விரும்புகிறோம்.

கல்விப் பணிகளில் சமூகம் பங் கெடுத்துக்கொள்வது, திட்டம் வெற்றி பெற மிக முக்கியமான ஒன்று என்று நான் நம்புகிறேன். அன்னை-ஆசிரியர் கழகங்களை எல்லாப் பள்ளிகளிலும் ஏற்படுத்துமாறு நான் கேட்டுக் கொண்டி ருக்கிறேன். தமிழகத்தின் எல்லாத் தொடக்கப்பள்ளிகளிலும் அத்தகைய அன்னை-ஆசிரியர் கழகங்கள் ஏற்படுத் தப்பட்டுள்ளன என்பதையும் பள்ளி வசதிகளை மேம்படுத்துவதில் அவை ஆக்கப்பூர்வமான பங்கு வகிக்கின்றன என்பதையும் கூறிக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் சேர்ப்பதை உறுதிப் படுத்துதல், எல்லா நாட்களிலும் அவர்கள் பள்ளிக்கு வருவதை உறுதிப்படுத்துதல். பள்ளிகளில் மழலையர் பிரிவுகளை ஏற்படுத்துதல். ஆசிரியர்கள் விடுப்பில் செல்லும்போது தன்னார்வலர்களான ஆசிரியர்களை அமர்த்துதல் ஆகியவை இவற்றின் பணிகளில் அடங்கும்.

முறைசாராக் கல்வியின் தேவையைக் கருத்தில் கொண்டு படித்த தன்னார்வலர் பணி என்ற புதிய ஒருங்கிணைந்த திட்டத்தை நாங்கள் தொடங்கியுள்ளோம். பள்ளியிலிருந்து பாதியிலே நின்றுவிட்ட குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற் காக, படித்த-வேலையில்லாத இளைஞர்கள் இந்தத் திட்டத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். பள்ளியிலிருந்து பாதியில் நின்றுவிடும் மாணவர் பிரச் சினைகளைச் சமாளிப்பதற்காக ஒரு



**புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடன் மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதல்வர் திரு பைரான் சிங் செகாவாட் அவர்கள்.**

மாபெரும் முயற்சியில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இளைஞர்களை ஈடுபடுத்தும் திட்டமாகும் இது. இந்த முயற்சி சிறந்த பலன்களை அளிக்கும் என்றும் பள்ளித் திட்டத்திற்குள்ளேயே நாம் தொடங்கி யிருக்கும் பெருமுயற்சிக்கு உறுதுணை யாக இருக்குமென்றும் நான் நம்புகிறேன். பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதும் மாணவர் வருகையைத் தக்கவைத்துக் கொள்வதும் மட்டுமே போதாது என்னும் கருத்தை நான் முழுக்க ஏற்றுக் கொள் கிறேன். பள்ளிக்கல்வி முறையின் தரத்தை உயர்த்துவதும், உறுதுணையாக இருக்கும் முறைசாராக் கல்வித் திட்டங் களை அமைப்பதும் அவசியமாகும்.

தமிழகத்தில் அண்மையில் பள்ளிக் கல்வி முறையின் தரத்தை மேம்படுத்த பிரம்மாண்டமான முயற்சி ஒன்றை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். குறைந்தபட்ச கற்கும் நிலைகள், பலபடித் தான கற்பிக்கும் முறைகள் என்னும் கருத்துக்களை நாங்கள் ஏற்றுக் கொண்டி ருக்கிறோம். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றிய ஓர் ஆய்வை நடத்த நான் ஆணையிட்டிருக்கிறேன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரை வாக இந்த வசதிகளை வழங்க நாங்கள் கருதியிருக்கிறோம். பாடத்திட்டத்தையும், தேவையான பாடப்புத்தகங்களையும் ஒருங்கிணைந்த மறு ஆய்வு செய்யும் முயற்சியை நாங்கள் மேற்கொள்வோம். கல்வியில் ஆண், பெண் பிரச்சினை யையும் நாங்கள் கருத்தில் கொள்வோம். உயர்ந்த சாதனைகளைப் படைக்கூ பெண்

குழந்தைகள் கல்வியறிவுடன் வளர்க்கப் படவேண்டுமென்பது எனது வேட்கை யாகும். இதைச் சாதிக்க முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அனைவருக்கும் கல்வி என்ற பிர கடனம், எழுத்தறிவின்மைப் பிரச் சினையை ஒழிக்கப் பெருமுயற்சி தேவை என்று எதிர்பார்க்கிறது. எழுத்தறிவு பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் அறிக்கையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. தொடக்கக் கல்வியை எல்லோர்க்கும் உரியதாக்குதல், எழுத் தறிவு இயக்கங்கள் நடத்துதல், முயற்சியை இடைவிடாது செயல்படுத்தவேண்டிய அவசியம் ஆகிய அனைத்து அம்சங்களை யும் பரிசீலிக்கும் இந்தக் கமிட்டியின் பரிந் துரைகளைப் பொதுவாக நாங்கள் முழுதும் ஏற்றுக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் நடத்தப்பட்டு 45 இலட்சம் மக்கள் எழுத்தறிவு பெற் றுள்ளார்கள். 1995-க்கு முன்பாகவே தமிழ்நாட்டில் அனைவர்க்கும் எழுத்தறிவு வழங்க உறுதியாக முடிவெடுத்திருக் கிறோம். எழுத்தறிவு இயக்கத்தால் 83 இலட்சம் மக்களுக்கு எழுதப்படிக்கக் கற் பிக்கும் இமாலய முயற்சி இது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், நாங்கள் தொடர்ந்து முனைப்போடு இதில் ஈடுபட்டு வருகிறோம். எழுத்தறிவு இயக்கத்திற்குப் பிந்திய முயற்சியிலும் நான் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறேன். பெற்ற பலன்களை நிலை

நிறுத்திக்கொள்ள அது பெரிதும் உதவும். முழு எழுத்தறிவு பெறும் இயக்கத்தின் முக்கியக் கருத்தாகிய பொதுமக்களை ஒன்று திரட்டுதல் என்னும் கருத்து வளப்படுத்தப்படவேண்டும். அறிவொளி இயக்கத்தை வலுப்படுத்த சமூகத்தின் முழு ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். அதற்காக 'அன்னை-ஆசிரியர் குழுக்களை' நாங்கள் அமைத்திருக்கிறோம்.

நாங்கள் இன்னுமொருபடி சென்று 1,363 மக்கள் கல்வி நிலையங்களை அமைத்திருக்கிறோம். இந்த மக்கள் மன்ற அமைப்பை மாநில முழுவதும் விரிவுபடுத்துவோம். அரசு சாரா நிறுவனங்களையும், தொண்டு நிலையங்களையும் ஈடுபடுத்தும்-குறிப்பாக அறிவொளி இயக்கத்தில் ஈடுபடுத்தும். தமிழ்நாடு அரசின் உத்தி பலனளிக்கும் ஆக்கப்பூர்வமான ஓர் அனுபவமாக அமைந்துள்ளது. அறிவொளி திட்டத்திற்கு உதவவரும் தொண்டு நிறுவனங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை முறை சாராக் கல்வி, முதியோர் கல்வி, மற்றும் மாநில கல்விக் கருவூலத்துறை மூலமாக வழங்குகிறோம். சென்னை, திருச்சி, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் மட்டும் 9 சமூக சேவை நிறுவனங்கள் அறிவொளி இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் சமூக சேவை நிறுவனங்களுக்கு, உதவித் தொகைகளும், மானியங்களும் மத்திய அரசால் நேரிடையாக வழங்கப்படுகின்றன. இந்த் சமூக சேவை அமைப்புகளின் பணிகளை மதிப்பீடு செய்வதிலும், கண்காணிப்பதிலும் இவற்றிற்கு நிதி அளிப்பதிலும் மாநில அரசுகள் ஈடுபடுத்தப்படவேண்டும் என்ற என் யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடக்கக்கல்வி என்பது அடிப்படையிலேயே மாநில அரசு சம்பந்தப்பட்டது. இந்தப்பணி மிகவும் பெரியதாக இருப்பதால், இதற்கு மத்திய அரசாங்கத்தின் தூண்டுதல் தேவைப்படுகிறது. ஆகவே, இதை நிறைவேற்ற மாநில அரசுக்குப் போதுமான அளவு அனுமதி அளிக்கப்படவேண்டும் என்று நான் கருதுகிறேன். ஒரு சிறந்த நிர்வாக அமைப்பை உருவாக்க மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உதவவேண்டும். அந்தப் பணியை அமலபடுத்தும் திட்டங்களை வடிவமைக்கும் பொறுப்பு மாநில அரசுகளுக்கு விடப்படவேண்டும்.

தொலைக்காட்சி உள்ளிட்ட அனைத்துத் தகவல் தொடர்புச் சாதனங்களையும் இந்த முயற்சியில் இன்னும் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன். கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளுக்காக அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒதுக்கும் நேரம் மாநில அரசுகளின் பொறுப்பில் விடப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன் மூலமாக அந்தந்த மாநிலங்களில் பயிலும் மாணவர்களின் தேவைகளுக்கு முழுதும் தகுந்தவாறு கல்வி நிகழ்ச்சிகளை மாநிலங்கள் தயாரிக்க முடியும்.

தமிழ்நாட்டில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் ஒன்று மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படவுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்

## சென்னையில் அனைத்துலக மகளிர் மாநாடு:

## மாண்புமிகு முதல்வருக்கு திரு வசந்த் சாத்தே பாராட்டு:

"இவ்வாண்டு மார்ச் திங்கள் 9-ந் தேதி சென்னையில் சர்வதேச மகளிர் மாநாடு நடைபெறுகிறது அல்லவா? இன்றைய தேதியில் முன்னணியில் இருக்கும், தலைசிறந்த அரசியல் வாதியாகத் திகழும் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் இந்த மாநாடு நடைபெறவிருப்பது மிகவும் பொருத்தமாகும்" என்று இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான குழுவின் தலைவர் திரு வசந்த் சாத்தே அவர்கள், சமூகநலத்துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி புலவர் இந்திரகுமாரி அவர்களுக்கு எழுதியிருக்கும் ஒரு கடிதத்தில் மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்.

"துரதிர்ஷ்டவசமாக தாழ்வுமனப்பான்மையோடு ஒடுங்கியிருக்கும்மகளிருக்கு சமுதாயத்தில் ஆணுக்கு நிகராகச் சம அந்தஸ்து, வாய்ப்புகள், கண்ணியம், கவுரவம் உருவாக்க முயற்சிகள், நடவடிக்கைகள் இந்த மாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்" என்று அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த உத்தேச சர்வதேச மகளிர் மாநாடு வெற்றிபெற அனைத்துத் தார்மீக ஆதரவையும் அளித்திடத்தான் தயார் என்றும், மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கும் 5 பிரதிநிதிகள், சென்னைக்கு வந்து செல்லவும், ஓட்டலில் தங்கியிருக்கவும் ஆகும் செலவைத் தனது கலாச்சார உறவுகளுக்கான குழு ஏற்கும் என்றும் திரு வசந்த் சாத்தே அவர்கள் அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.

"தமிழக முதல்வர் ஜெயா-ஜீயின் தலைமையிலான இந்த சர்வதேச மகளிர் மாநாடு மாபெரும் வெற்றி பெறும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை!" என்றும் திரு வசந்த் சாத்தே அவர்கள் உறுதிபடக் கூறியிருக்கிறார்.

**கல்வியும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.**

**— தந்தை பெரியார்**



கொள்ள விரும்புகிறேன். இத்திட்டம் முதலில் மூன்று மாவட்டங்களில் அமல் படுத்தப்படும். இதற்காக ரூ.1200/- கோடி மதிப்பீட்டில் முழுமையான திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள மத்திய அரசு உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய அரசிடம் உள்ள எங்களது இந்தத் திட்டம் உலக வங்கியின் உதவிக்காக அனுப்பப் படவேண்டும். மூன்று மாவட்டங்களில் தற்போது இத்திட்டம் தொடங்கப்பட்டாலும், மாநில முழுவதும் இம்முயற்சியை மேற்கொள்ளும் திறன் எங்களிடம் உள்ளது. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தை மேற்கொள்வதில் நாங்கள் காட்டியுள்ள ஆர்வத்தின் அடிப்படையில் மாநிலம் முழுவதிலும் இத்திட்டத்தை நிறைவேற்ற எங்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

அனைவருக்கும் கல்வி என்னும் குறிக்கோளை அடையும் முயற்சியில் முக்கியப் பிரச்சினையாக உள்ள கல்வியை நிர்வகிப்பது பற்றி தற்போது நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பக் கல்வியை நிர்வகிப்பதை மீண்டும் வலுவூட்டுவது, குறிப்பாக இந்தத் தருணத்தில் தேவை - என்பதை நான் முற்றிலுமாக ஒப்புக் கொள்கிறேன்.

கல்வியை நிர்வகிப்பது, பரவலாக்குவது தொடர்பாக மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவின் கமிட்டி (Committee of the Central Advisory Board of Education) செய்த பரிந்துரைகளை நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும். அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 73-வது மற்றும் 74-வது திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு குறிக்கோள்களை உள்ளடக்கிய விரிவான புதிய சட்டத்தை அடுத்துவரும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவர உள்ளோம் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதும், திருத்தியமைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான அடிப்படை நமக்குக் கிடைத்து விடும்.

சி.எ.பி.ஈ.இன் (CABE) முக்கிய ஆலோசனை, கிராமக் கல்விக் குழு அமைப்பது பற்றியது தான் அது. கல்வியைப் பற்றி பஞ்சாயத்து நிரந்தரக் குழுவாகவும் (Panchayat Standing Committe on Education) அமையும். கிராம அளவில் ஆரம்பக் கல்வியை மேற்பார்வையிட, இதுபோன்ற குழுக்களை நாங்கள் நிச்சயம் அமைப்போம். சி.எ.பி.இ. (CABE) குழு, கிராமக் கல்விக் குழு, அதைப் போன்றேவுள்ள, நலவாழ்வு போன்ற குழுக்களுடன் கூட்டுக் கூட்டங்கள் நடத்த சிபாரிசு செய்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அப்போதுதான் சிறிய அளவில் நமது முயற்சிகளின் கூட்டுச் சக்தி இணைப்பு கிடைக்கும்.

ஆரம்பக் கல்வியில் உள்ளூர் அமைப்புகளின் மூன்று பிரிவுகளின் பங்கை நாங்கள் அதிகரிப்போம். அதே நேரத்தில், முறைசாராக் கல்வி முதியோர் கல்வி போன்றவற்றிலும் அவற்றிற்கு அதிகப் பங்கை நாம் அளிப்போம். பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு நிதி மாற்றுவது தொடர்பாக, கல்வி நிர்வாகத்தைப் பரவலாக்குவது பற்றியகுழு செய்துள்ள பரிந்துரைகளின் பின் உள்ள உணர்வுகளை நான் பாராட்டுகிறேன்.

நமது 1958 பஞ்சாயத்துச் சட்டத்தின் மூலம் இதைச் சாதிக்க எண்ணியிருந்தோம். காலப்போக்கில் கல்வியில் தேர்ச்சியென்பது முக்கியத்துவம் அடைந்து விட்டது. எனவே, கல்வியை நிர்வகிப்பதின் பொறுப்பு முழுவதும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வி நிர்வாகத்தைப் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு மாற்றுவது குறித்து தீவிரமாகச் சிந்திப்பது கொள்கையளவில் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில், பல ஆண்டுகளாக ஏற்பட்டு வரும் மாற்றங்களின் காரணமாக, தேவையான நிர்வாக முறையை மிகக் கவனமான முறையில் கொண்டு வரவேண்டும். பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்குப் போதுமான பணிகளையும் கடமைகளையும் தந்து, அதே நேரத்தில் கல்வியின் தரத்தையும், தேர்ச்சியையும் மேம்படுத்தத் தேவையான தகுந்த சூழ்நிலையையும் உருவாக்க வேண்டும். இந்த மாற்றத்தை உறுதி செய்வதில் வளைந்து கொடுக்கும் தன்மை நிச்சயம் நமக்குத் தேவை. குறிப்பாக, ஆசிரியர்களை நிர்வகிப்பதில் கவனமாகச் செயல்பட வேண்டும். அடிப்படைச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, இந்த விஷயத்தில், மாநிலங்களே தங்களது கொள்கையே வகுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என ஆலோசனை கூற விரும்புகிறேன்.

கல்வியை நிர்வகிப்பதிலுள்ள மற்றுமோர் முக்கிய அம்சம், ஆதாரங்களைப் பற்றியதாகும். கட்டமைப்புகளை மாற்றி அமைத்து ஸ்திரத் தன்மையைக் கொண்டு வருவதிலுள்ள சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதில் பல மாநிலங்கள் கஷ்டப்பட்டுள்ளன. சமூகப் பிரிவுகளுக்கான நிதி ஒதுக்கீட்டைப் பாதுகாப்பது மிகவும் கடினமான காரியமாகவுள்ளது. சமூகப் பிரிவுகளிலும், தரங்களை உயர்த்துவது என்பது மிகுந்த சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில், சம்பளச் செலவுகளைச் சீர்படுத்துவதில் மிகக் குறைந்த அளவே சாதிக்க முடிகிறது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில்தான் ஆரம்பக் கல்விக்கான ஆதாரங்களைப் பற்றி நாம் ஆராய வேண்டியுள்ளது. நமது கவனமும் குறிக்கோளும் ஆரம்பக் கல்வி மீது இருக்க வேண்டும் என்ற யோசனையை நான் வரவேற்கிறேன், எனவே, ஆரம்பக் கல்விக்கு அதிக பட்ச ஆதாரங்களை வழங்குவதே நமது முயற்சியாக இருக்கவேண்டும். மேற்படிப்புக்குத் தேவையானவைகளை அதுவே தேடிக்கொள்ள வேண்டும். கூடுதல் ஆதாரங்களைத் திரட்டுவதைப் பற்றி சி.எ.பி.இ. சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் ஆதார நிலைமைகளைப்பற்றியும் கோடிட்டுக் காட்டியுள்ளது. இருக்கின்ற நிலைமைகளைத் தொடர்ந்து காப்பாற்றத் தேவையான ஆதாரங்களைத் தேடவே மாநிலங்களும் உள்ளாட்சி அமைப்புகளும் போராடவேண்டிய சூழ்நிலையில், ஆதாரங்களின் பிரச்சினையை மாநிலங்களிலிருந்து உள்ளாட்சி அமைப்பு ஆதாரங்களை மாற்றுவதென்ற அளவில் பிரச்சினையை முடித்துவிட முடியாது. நாம் பங்கேற்றுள்ள, நாட்டை உருவாக்கும் பணியின் பின்னணியில், தொடக்கக்கல்வியின் தேவைகளைக்



**• மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக்கூடிய வளர்க்கக் கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே.**

**• போற்ற வேண்டியவை உண்மை-உழைப்பு-உயர்வு; பின்பற்ற வேண்டியவை கனிவு-பணிவு-துணிவு; பேணப்பட வேண்டியவை கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு.**

**• செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வம் கருத்துச் செல்வம். அடுத்து வரும் தலைமுறையினருக்கு அத்தகைய செல்வத்தை நாம் விட்டுச் செல்ல வேண்டும். அதற்கான பணியில் ஈடுபட்டால் சமுதாயம் நன்கு வாழ முடியும்.**

கருத்திற்கொண்டு பத்தாவது நிதிக்குழு தனது பரிந்துரைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளலாம் எனக் கருதுகிறேன். பத்தாவது நிதிக்குழு 1995-2000-ஆம் ஆண்டுகளை உள்ளடக்கி பரிந்துரைகளைச் செய்துள்ளதையும், 2000-ஆம் ஆண்டுக்குள் ''அனைவருக்கும் கல்வி'' எனும் இலக்கை வைத்துள்ளதையும் கருத்திற்கொண்டு, ஆதாரங்கள் பற்றிய பிரச்சினையைத் தீவிரமாக ஆராயவேண்டும்.

கல்வி வரி விதிக்க வேண்டுமென ஒரு யோசனை எழுந்துள்ளது. பல மாநிலங்களில் நிலவரியின் மீது பொதுவாகக் கல்வி வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நிலவரியின் மீது கூடுதல் வரி வசூலிக்க பஞ்சாயத்து யூனியன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும் பஞ்சாயத்து யூனியன்களிடம் உள்ளன. வரி வசூலின் மீது கூடுதல் வரிக்கேற்ப மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாறாக, எங்கள் மாநிலத்தில் கூடுதல் வரி வசூலிப்பு ஒரு வடிவத்திலுள்ளது. இதற்கும் மேலாகக் கல்வியின் முழுச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. இதற்கு மேலும், ஒரு வரி கல்விக்காக விதிப்பது மிகவும் கடினமாக மட்டுமல்லாமல், கிராம மக்களின் மீது மிகுந்த பாரத்தையும் சுமத்துவதாகும். மாநகராட்சிகளும், நகராட்சிகளும், வரி விதிப்பது சாத்தியமாகக் கூடும். ஆனால், கிராமப்புறங்களில் இது சாத்தியம் அல்ல; மேலும் பல மாநிலங்களில் நிலவரி தன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. வரி வசூலும் அதிகமாக வராது.

குழுக்களின் அறிக்கைகளில் தரப்பட்டுள்ளதுபோல், நம்முன் உள்ள பல்வேறு பொருள்களின் மீது பரவலாக என் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளேன். நமக்குக் கல்விக்கான தேசியக் கொள்கை உள்ளது (NPE 1992). பள்ளி முறைக்குச் செல்வதை நிர்மானிப்பதில் நாம் நீண்ட தூரம் வந்துவிட்டோம். நமது பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை சிறப்பாகவுள்ளது.

நமக்குக் கவலை தரக்கூடிய பிரச்சினை என்னவென்றால், ஏராளமான குழந்தைகளுக்கு ஐந்து ஆண்டுப் பள்ளிப் படிப்பை உறுதிசெய்ய இயலாமைதான்.

மேலும், நம்மைப் பாதிப்பது என்னவென்றால், ஐந்து ஆண்டுப் படிப்பை முடித்தவர்கள் கூட, குறைந்தபட்ச அளவு படிப்பறிவைக் கூடப் பெற்றிருக்கவில்லை என்பதுதான். நமது நாட்டின் மக்கட் தொகையையும், இப்பிரச்சினையிலுள்ள ஏராளமான குழந்தைகளின் எண்ணிக்கையையும் கருத்திற்கொண்டு பார்த்தால், இந்த முறையை மாற்றவேண்டிய மிகப் பெரிய கடமை நம்முன் உள்ளது தெரியவரும். மேலும், கல்வி முறையில், முழு அமைப்பிலும் தரத்தை உயர்த்தவேண்டிய கடினமான காரியம் நம் முன்னே உள்ளது. இது சுலபமான பணியாக இருக்கப் போவது இல்லை. நாம் அமைத்துக் கொண்டுள்ள குறைந்தபட்சக கல்வியறிவினை உறுதிப்படுத்தும் பொது நோக்கத்திற்கு உதவிடும் வகையில், இத்துறையில் இணக்கமான அணுகுமுறையை நாம் உருவாக்க வேண்டும். ஆரம்ப நிலையில் புதுமையான செயல் திட்டங்களை உருவாக்குவது துரிதமான வளர்ச்சிக்கு ஒரு திறவுகோலாக விளங்கும்.

நாங்கள் அண்மையில் தொடங்கியுள்ள குழந்தைகளுக்கான 15 அம்சத் திட்டத்தில் அடங்கியுள்ள ''அனைவருக்கும் கல்வி'' என்ற குறிக்கோளை தமிழ் நாட்டில் நாங்கள் எய்தத் தனிப்பட்ட முறையில் நான் உறுதி பூண்டுள்ளேன்.

நாங்கள் தொடங்கியுள்ள ஒருங்கிணைந்த திட்டங்கள், நம் குறிக்கோளை அடைய தைரியமாகவும், வளமான சிந்தனையுடனும் எடுக்கப்பட்ட முயற்சியைப் பிரதிபலிப்பதாகும் என்று உறுதி கூறுகிறேன். இக்குறிக்கோளை அடைய எங்கள் அனைத்து ஆதாரங்களையும் திறமைகளையும் மக்களது ஆதரவையும் திரட்டிவருகிறோம். எங்கள் செயல் திட்டத்தில் குறிப்பிட்டதைப் போல், இக்குறிக்கோளை 1998-ஆம் ஆண்டுக்குள் அடைய முயற்சிக்கிறோம். நாங்கள் ஏற்கெனவே எடுத்த முக்கிய நடவடிக்கைகள் - இந்த ஆண்டு எடுக்கவுள்ள புதிய நடவடிக்கைகளாலும், இக்குறிக்கோளை நாங்கள் அடைய முடியும் என நாங்கள் நம்புகிறோம்.

நம்முன் உள்ள பல்வேறு பிரச்சினைகளை நான் அறிவேன். ஆனால், அடிப்படைக் கல்வியை, நமது செயற்குறிப்பிலிருந்து இனிமேலும் தள்ளிப் போட முடியாது என உறுதியாக நம்புகிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, நாட்டை உருவாக்குவதில் இது முதல் கூட்டம். இதை ஒதுக்கி விடுவது அபாயமாகும். தமிழ்நாட்டில், அனைவருக்கும் கல்வி என்னும் இந்தக் குறிக்கோளை அடைய நாங்கள் எங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறோம். இந்தக் குறிக்கோளை அடைய அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுப்போம்.

நாட்டை உருவாக்கும் இப்பணியில் மக்கள் முழுமையாக ஈடுபடுவதற்கு நாங்கள் அனைத்து முயற்சிகளையும் எடுப்போம். நாங்கள் தொடங்கியுள்ள பல்வேறு புதிய திட்டங்களினால், இந்தக் குறிக்கோளை, இதுவரை இருந்தது போன்று ஒரு கனவாக இல்லாமல், குறிப்பிட்ட ஐந்தாண்டுக் காலக் கட்டத்தில் உண்மையிலேயே அடைய முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன். ●



# பத்திரிகைத் தொழில் என்பது ஒரு தொழில் மட்டுமன்று; அது ஒரு பொதுப் பணியாகும்!

## மாண்புமிகு முதல்வர் உரை

சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்க சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில், கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவை நடத்துவதற்காகத் தேதி குறித்துத் தருமாறு உங்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் அடிக்கடி என்னோடு தொடர்புகொண்டு வந்தார்கள். வேலைப்பளு காரணமாக இந்த விழாவை முன்னரே நடத்த தேதி வழங்க இயலவில்லை. நீண்ட காலம் காத்திருந்தமைக்காகத் தனிப்பட்ட முறையில் என் நன்றியினை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னைப் பத்திரிகை குடியிருப்புக்காக வீட்டு வசதி வாரியத்துக்குச் சொந்தமான 5.5 ஏக்கர் நிலத்தை தமிழக அரசு வழங்கியிருப்பதை அறிகிறேன். மேலும் உங்கள் வேண்டுகோளின் பேரில் நிலத்திற்கு வழங்குவதற்காக ரூ.20 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அறிகிறேன். இதைக் கொண்டு கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தி, சங்கத்தின் உறுப்பினர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன்.

ஜனநாயகத்தில் பத்திரிகைத்துறை என்பது முக்கியமான அமைப்பாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு மக்கள் தங்களது ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தவும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றவும் அவர்களுக்குப் பாரபட்சமற்ற பண்பட்ட முறையில் விளங்குவதே பத்திரிகைத்துறையின் முக்கியப் பணியாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மக்களுக்கு உரிய பலவகைச் சுதந்திரங்களை உண்மையாக்கவும், ஜனநாயக இயந்திரம் சரிவர இயங்க உதவவும் பத்திரிகைத்துறை, அடிப்படை தார்மீகப் பண்புகளை மக்களிடையே பரப்புவதில் தன்னைத்தானே ஈடுபடுத்திக்கொள்ள ேண்டும். மேலும் அரசாங்கத்தின் பங்கையும் அதன் செயல்பாட்டையும் சரிவரப் புரிந்துகொள்ள உதவி, நாட்டின் சிறந்த நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். ஜனநாயகத்தின் நான்காம் அங்கமாகிய பத்திரிகைத்துறையின் ஆற்றலும் வலிமையும், நாட்டில் நடமாடும் நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையில் மட்டுமே அடங்கி இருக்கவில்லை. அவற்றின் தரம் மற்றும் மக்கள்



வாழ்வில் அவை ஏற்படுத்தும் முழுமையான தாக்கம் மக்களின் அறிவை வளர்க்கும் பணியில் அவற்றின் ஈடுபாடு, குடியாட்சிக் கோட்பாடுகளுக்குத் தங்களை அர்ப்பணித்தல் ஆகியவற்றிலும் அவை வெளிப்படுகின்றன. சுதந்திரத்திற்குப் பிறகு பத்திரிகைத்துறை பெரிதும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்திய பத்திரிகைத்துறை சுதந்திரமாகச் செயல்பட்டிருக்கிறது. ஜனநாயகத்தின் காவலன் என்னும் முறையில் தன் பங்கைச் சரிவர நிறைவேற்றியிருக்கிறது. மக்களின் குரலை எதிரொலிப்பதில் வெற்றி பெற்றிருக்கிறது. இந்தியப் பத்திரிகைத்துறை சுதந்திரத்தோடும் தூய்மையோடும் தன் பணியைச் செய்து வருவதையும் மக்கள் பத்திரிகைகளுக்குச் சிறப்பான ஆதரவு அளித்துவருவதையும் கண்டு மேலை நாடுகளிலிருந்து வருபவர்கள் மகிழ்ச்சி கலந்த ஆச்சரியம் அடைகிறார்கள்.

இது பத்திரிகைத்துறையின் மீது பெரும் பொறுப்பைச் சுமத்துகிறது. தற்போது கல்வி அறிவு பெற்றவர்கள் தற்கால விஷயங்கள் பற்றி மேலும் மேலும் அறிய விருப்பப்படும் சூழ்நிலையில் பத்திரிகைகளுக்குப் பொதுமக்களிடையே இருக்கும் பொறுப்பு அதிகரித்திருக்கிறது. இந்தியப் பத்திரிகைகள் அரசியலுக்கே அதிக முக்கியத்துவம் தருவதாகவும் அன்றாட அரசியலுக்கே அவை அதிகக் கவனம் செலுத்துகின்றன என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இந்தக் கருத்து முழுவதும் தவறு என்று நாம் சொல்ல முடியாது. அரசியல் முக்கியம்தான் ஆனால் அறிவியல், தொழில் நுட்பம், பொருளாதாரம், சமூகவியல், வரலாறு ஆகியவையும் அவை போன்றவையும் சமமான முக்கியத்துவம் உடையவைதான். இந்தத் துறைகளிலும் மக்கள் அறிவு பெற பத்திரிகைகள் உதவி செய்வதால் ஜனநாயகத்தின் அடிப்படைகளை வலுப்படுத்த அது உதவும்.

அடிப்படை ஜனநாயகப் பண்புகளிடத்தில் இந்தியப் பத்திரிகைத் துறை மதிப்பும் மரியாதையும் காட்டுவதும், உண்மையை நேர்மையுடன் உரைத்துப் பொதுமக்கள் தாங்களாகவே முடிவெடுக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டு, வணிக நோக்கிலிருந்தும் உணர்ச்சிகரமான

**காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.**

**- பேரறிஞர் அண்ணா**

செய்திகளைப் பிரசுரிப்பதிலிருந்தும் விலகிநின்று, அடக்கத்துடன் தன் பொறுப்பை நிறைவேற்றுவதும் அவசியமாகும். எல்லாவிதமான நாளிதழ்களும், சஞ்சிகைகளும், பருவ இதழ்களும் தற்போது நாட்டில் அதிகமாக விற்பனை ஆகின்றன. ஆனால் புதிதாகக் கற்றவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த வளர்ச்சி அமையவில்லை.

இருந்த போதிலும் ஜனநாயக நெறிகளில் பத்திரிகை துடிப்போடு பங்கு பெற்று வருவதை நிரூபித்து வருகிறது. மக்களது எண்ணங்களில் தன் செல்வாக்கைப் பதிக்கவும் அவற்றை உருவாக்கவும் தொடங்கி இருக்கிறது. பொறுப்பு தொடங்குமிடம் அதுதான். பத்திரிகைச் சுதந்திரம் என்பது சில கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரமாக இருப்பது என்பது மட்டுமல்ல. சில குறிக்கோள்களுக்காகச் சுதந்திரத்தோடு விளங்குவது என்பதும் ஆகும். அந்த நோக்கங்கள், வாசகர்களுக்கு முறையான, சரியான, உண்மைச் செய்தியையும், கல்வியையும் வழங்குவதும் ஆகும். பத்திரிகை ஒன்றைப் பற்றிய மதிப்பீட்டை வழங்க உரிமை உடையது. ஆனால் அதனோடு தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் ஆலோசித்த பிறகே அவ்வாறு செய்ய வேண்டும்.

எனவே பத்திரிகைத் தொழில் என்பது கைவினைத்திறன் மட்டுமே அன்று. பொறுப்புணர்வுடன் கூடிய படைப்பு முயற்சியாகும் அது. ஜனநாயகத்தின் முறையான செயல்பாட்டிற்கு மக்களுக்குத் தகவல் அளிப்பதும் அவர்களுக்குக் கற்பிப்பதும் அந்தத் தொழிலின் கடமையாகும். மக்களுக்குச் செய்தி வழங்கும் சுதந்திரம் என்பது தவறான தகவலைத் தருவது அல்ல; அவதூறு பரப்புவது அல்ல. மக்களிடம் உள்ள கீழ்த்தர உணர்வுகளைக் கிளறிவிடுவது அல்ல. ஜனநாயகப் பண்புகளைச் சரிவரப் புரிந்துகொள்ள , பொறுப்புள்ள பத்திரிகைத் தொழிலே நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும்.

உங்களைப் போன்ற பத்திரிகையாளர்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. 'பத்திரிகையும் ஒரு தொழில்தான் என்றும் அத்தொழிலைப் புரிவோர் நாம் என்றும்' நீங்கள் நினைப்பது சரிதான். ஆனால் பத்திரிகைத் தொழில் என்பது ஒரு வித்தியாசமான தொழில் ஆகும். அதன் திறன்களை ஒரு குறிப்பிட்ட அளவுதான் கற்கலாம். ஏனைய திறன்கள் அனுபவத்தில் இருந்து வரவேண்டும். பத்திரிகைத்துறையில் அடையும் அனுபவம், இந்தத் தொழிலை, மனோபாவம், அணுகுமுறை இரண்டிலும் தன் வயப்பட்டதாகவே ஆக்கும். நாட்டைப் பொறுத்த விஷயங்களில் உங்களது சொந்தக் கருத்தை நீங்கள் உருவாக்கிக்கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அதனை வெளியிடும் முறையில் நீங்கள் உண்மை உள்ளவராக விளங்க வேண்டும். செய்திகள், உண்மையுடனும், நேர்மையுடனும் வெளியிடப்படும் போது பொதுமக்கள் பத்திரிகைச் சுதந்திரத்தை மதிப்பார்கள். எந்தப் பண்புகளை நீங்கள் பாதுகாக்கவேண்டுமென்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்களோ, அதே பண்புகளைக் கட்டிக்காக்க நீங்கள் முன்னிற்க வேண்டும். இந்த வகையில் பார்க்கும் போது, பத்திரிகைத் தொழில் என்பது ஒரு தொழில் மட்டுமல்ல, ஒரு பொதுப் பணி ஆகும். பத்திரிகைச் சுதந்திரத்தின் மீதான அமெரிக்கக் குழு, பத்திரிகைத் தொழிலை ஒரு பொதுச் சேவையாகவே கருதுகிறது என்று நான் அறிகிறேன். இந்தியாவின் முதலாவது பத்திரிகைக் கமிஷன் (Press Commission) கூறியபடி, பத்திரிகை வெறும் தகவலை மட்டும் வழங்கவில்லை. அது கற்பிக்கவும் செய்கிறது. அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத்துறைகளில் செயல்பாடுகளை அது உருவாக்கவும் பாதிக்கவும் செய்கிறது. செய்திகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மிகச் சரியாகவும், நேர்மையாகவும் நீங்கள் வெளியிட வேண்டுமென்பதில் பொதுமக்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள். எனவே ஒரு பத்திரிகையாளரின் சிந்தனை, உந்தூக்கம் மற்றும் செயல்பாடுகளை நெறிப்படுத்த வேண்டி

பது மக்கள் நலனே ஆகும்.

தமிழகப் பத்திரிகையாளர்களுக்கு ஒரு பெரும் பாரம்பரியம் உண்டு. புகழ் பெற்ற தலைவர்கள் இந்தத் தொழிலை அலங்கரித்திருக்கிறார்கள். பத்திரிகை தர்மத்தின் உயரிய தரக் கோட்பாடுகளை அவர்கள் பின் பற்றினார்கள். உங்களில் ஒவ் வொருவரும் அந்தக் கோட்பாடு களைப் பின்பற்ற வேண்டும். குடிமகனின் மதிப்பை உயர்த்து வதும், மக்களின் மனோபாவங்கள் மற்றும் நடத்தையின் தரத்தை உயர்த் துவதும், சமுதாயத்தில் மோதலை யும், பதற்றத்தையும் தணிப்பதும் நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். பத்திரிகைத் தொழிலின் உயர்ந்த தரத்தை இங்கு கூடியிருக் கும் நீங்கள் அனைவரும் தொடர்ந்து கடைப்பிடிப்பீர்கள் என்ற உறுதி எனக்கு உண்டு. சமுதாயத்தில் வள மான ஜனநாயக மரபுகளை உண் டாக்க உதவுவதன் மூலம் மக்களிடம் நின்று நிலவும் பயன்களை அதுதான் ஏற்படுத்தும்.

இங்கு 'மக்கள் குரல்' ஆசிரியர் எம். சண்முகவேல் பேசும்போது சில கோரிக்கைகள் விடுத்தார். அந்தக் கோரிக்கைகளை நான் பரிசீலித்து, பெரும்பாலான கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில்களை அளிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரி யர் சப்ரூ பேசும்போது, விமரிசனங் களை ஏற்றுக்கொள்ள வேண்டும். முகஸ்துதி செய்பவர்கள் பற்றிக் கவனமாக இருக்க வேண்டும் என்று கூறினார். முகஸ்துதியினால் ஏற் படும் அபாயத்தையும் கேட்டையும் நான் உணர்ந்திருக்கிறேன். விமர் சனங்கள் வரவேற்கத்தகுந்தவை என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன். ஆனால், இந்த விமர் சனங்கள், உண்மையின் அடிப்படை யில் அமைந்த ஆக்கபூர்வ விமர்சனங் களாக இருக்க வேண்டும். உண்மை யற்ற, முற்றிலும் ஆதாரமற்ற, உள்நோக்கத்துடன் கூறப்படும் விமர்சனங்களைத் தாங்கிக் கொள் வது வேதனையாக உள்ளது.

ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள வீட்டு மனைகளில் வீடுகட்டுவதற்கு உதவும் வகையில் உறுப்பினர் களுக்கு நிதி உதவி வழங்கவேண்டும் என்று உங்களது சங்கம் வேண்டு கோள் விடுத்திருக்கிறது. நான் இந்த வேண்டுகோளைப் பரிசீலித்தேன். உங்கள் மீதுள்ள நல்லெண்ணத் தின் அடையாளமாக வீடு கட்டுவதற்காக ஒரு சதுர அடிக்கு ரூ50 என்ற அடிப்படையில் ஒரு வீட்டுக்கு உயர்ந்த பட்சமாக ரூபாய் 40 ஆயிரம் அளவுக்கு மானியம் அளிக்க நாங்கள் முடிவுசெய்திருக்கிறோம்.

உங்கள் சங்கத்தின் 136 உறுப் பினர்களுக்கு நாங்கள் இந்த உத வியை வழங்குகிறோம். இதனால் ரூ.50 இலட்சத்திற்குச் சற்றுக் கூடுதலாக அரசாங்கத்திற்குச் செல வாகும். இந்த நல்லெண்ணத்தை நீங்கள் வரவேற்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இந்தப் பத்திரிகை யாளர் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டுவதில் நான் பெரிதும் மகிழ் கிறேன். உங்களது புது இல்லங் களில் அமைதியும் ஆனந்தமும் விளங்க என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 9 புராதன வைணவத் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள்!

### மாண்புமிகு முதல்வர் உத்தரவு

சிதம்பரனார் மாவட்டத்தில் அமைந்துள்ள 'நவதிருப்பதி' என வழங்கப்படும் 9 புராதன வைணவத் திருக்கோயில்களுக்கு ஒருங்கிணைந்த திருப்பணித் திட்டத்தின் கீழ் இரண்டு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய் செலவில் திருப் பணிகள், சாலைகள் பராமரிப்பு பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கீழ்காணும் 9 வைணவத் திருத்தலங்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

1. அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில், ஆழ்வார் திருநகரி கிராமம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், சிதம்பரனார் மாவட்டம்.

2. அருள்மிகு கள்ளபிரான்சுவாமி திருக்கோயில், ஸ்ரீவைகுண்டம் நகர் - வட்டம்.

3. அருள்மிகு விஜயாசனப்பெருமாள் திருக் கோயில், நத்தம்.

4. அருள்மிகு காய்சினவேந்தர் திருக்கோயில், திருப்புளியங்குடி.

5. அரவிந்தலோசனன் திருக்கோயில், இரட்டை திருப்பதி.

6. அருள்மிகு தேவர்பிரான் திருக்கோயில், இரட்டை திருப்பதி.

7. அருள்மிகு மாயக்கூத்தன் திருக்கோயில், பெருங்குளம்.

8. அருள்மிகு மகரநெடுங்குழைக்காதர் திருக் கோயில், தென்திருப்பேரை.

9. அருள்மிகு வைத்தமாநிதிப்பெருமாள் திருக் கோயில், திருக்கோவிலூர்.

இப்பணிகளை மேற்கொள்வதற்காக டி.வி.எஸ். நிறுவனத்தைச் சார்ந்த திரு வேணுசீனிவாசன் அவர்களைத் தலைவராகவும், மதுரை தொழில் அதிபர் திரு டி. கண்ணன், சென்னை திரு டி.எஸ். செட்டியார், எட்டயபுரம் ஜமீன்தார் திரு கந்தசாமி ராஜூ, சிவகாசி திரு எஸ். அசோக், கோவை திரு என். ரவிசன், மற்றும் மதுரை திரு என். மணிமொழியன் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு திருப்பணிக் குழுவையும் நியமித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.



# சென்னை பத்திரிகையாளர் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டு விழா

திருவான்மியூர் அருகே அமைய வுள்ள சென்னப் பத்திரிகையாளர் குடியிருப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டு விழா, சென்னை மியூசிக் அகாடெமியில் 21.2.94 அன்று நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்தக் குடியிருப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி, 'மக்கள் குரல்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. எம். சண்முகவேல், 'இந்து' பத்திரிகையின் தலைமை நிருபர் திரு. சி. ராகவன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங் கினார்கள்.

முன்னதாக, சென்னைப் பத்திரி கையாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க உறுப்பினர் திரு. ஆர். ரங்கராஜ் அவர்கள் தமது வரவேற்பு ரையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசியல் பிரவேசத் தால் பத்திரிகை உலகம் ஒரு நல்ல பத்திரிகையாளரை இழந்து விட்டது'' என்று கூறினார். பத்திரிகைகள் மீதான அவதூறு . வழக்குகளை வாபஸ் பெற்றதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட் டினார். இந்த வீட்டு வசதித் திட்டத் தின் கீழ், 5.5 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 5.5 கோடி செலவில் 136 வீடுகள் கட்டப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரி கையின் பொறுப்பாசிரியர் திரு. பிரபு சாவ்லாவின் வாழ்த்துச் செய்தியை, சென்னை பதிப்பின் ரெசிடெண்ட் ஆசிரியர் திரு. சப்ரூ வாசித்தார்.

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில், ''இன்று தமிழகப் பத்திரிகையாளர்களின் பொன்னாள். 1988-இல் இந்தப் பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சி யில்தான் கால்கோள் விழா நடை பெறுகிறது. பத்திரிகைகள் நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறுவதோடு அரசுக்கு நல்ல ஆலோசனையையும் தரவேண்டும். அரசுத் திட்டங் களைப் பாராட்டி, நல்ல சாதனை களை மக்களுக்கு எடுத்து கூற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றுப் பேசுகையில், சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சியினர் சொற்ப மாக இருப்பதால் பத்திரிகைத் துறையினரே எதிர்க்கட்சியாகச் செயல்படலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்பு கூறியதை நினைவுகூர்ந்தார். இவர் மேலும் பேசுகையில், பத்திரிகைத் துறை யினரின் இந்த நல்ல திட்டம் விரை வில் இன்னும் பலருக்கு வாய்ப்பும் வளமும் வழங்கும் என்றார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், திருவான்மியூரில் அமைய விருக்கும் பத்திரிகையாளர் குடி யிருப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி விழாப் பேருரையாற்றினார். விழாமுடிவில், சென்னைப் பத்திரி கையாளர் கூட்டுறவு வீட்டுவசதி சங் கத்தின் உறுப்பினர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

பின்னர், இந்தச் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர். ஆகியோருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

—நிகழ்ச்சித்தொகுப்பு
ஜோ. சந்திரன்.

அரசு தாய்சேய் நல மருத்துவமனை 150-வது ஆண்டு நிறைவு விழா:

# ரூ 7 கோடியே 11 இலட்சத்திற்கான திட்டங்கள்

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கிவைத்தார்!

**செ**ன்னையில் உள்ள அரசினர் தாய்சேய் நல மருத்துவமனையின் 150-வது ஆண்டு நிறைவு விழா, 21.2.94 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், முக்கிய விருந்தினர்களுக்கும் — மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், நிலைய மருத்துவ அதிகாரி டாக்டர் ஏ. சுந்தரவல்லி, அரசு பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் (மேஜர்) டி. ராஜா ஆகியோரும் மருத்துவமனை தொடர்பான பலவேறு சங்கத்தினரும் நினைவுப் பரிசுகள் வழங்கி மகிழ்ந்தனர்.

விழா முடிவில் - அரசினர் தாய்சேய் மருத்துவ மனை கண்காணிப்பாளர் டாக்டர் டி.எஸ். மதுராம்பாள் நன்றி கூறினார்.

விழா நிகழ்ச்சிகளை, டாக்டர் சுதா சேஷய்யன் தொகுத்து வழங்கினார்.








**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

அலங்காரப் பந்தலும், ஆங்காங்கே வண்ண விளக்குச் சரங்களும், வரவேற்பு வாசகத் தட்டிகளுமாகத் திகழ்ந்தது விழா நிகழ்ந்த மருத்துவமனை வளாகம்.

அரசு உயர் அதிகாரிகள், வாரிய - கழகத் தலைவர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், ஏராளமான மருத்துவர்கள், எண்ணற்ற செவிலியர், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டிருந்த இந்த விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் வரவேற்புரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''இரண்டாண்டுக் கால ஆட்சியில், நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிவரும் அரிய பணிகளுக்குப் பாராட்டு விழா போல இந்த விழா நடைபெறுகிறது. இது ஏழை எளிய மக்களுக்கு உதவும் துறை என்பதால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருத்துவத் துறை மீது தனி அக்கறை கொண்டிருக்கிறார். அவர்கள் ஆலோசனைப்படி பள்ளிகளிலே படிக்கும் மாணவ மாணவிகளுக்கு வரும் ஜூன் மாதத்திலிருந்து இலவச மருத்துவப் பரிசோதனை நடத்தப்படவிருக்கிறது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மருத்துவம் பயிலும் மாணவ மாணவியர் மட்டுமன்றி - மருத்துவர்களும் பயன்பெறும் வகையிலான நூலகம் ஒன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனைப்படி நிறுவப்படவிருக்கிறது. கஷ்டத்தோடு வரும் நோயாளிகளிடம் கனிவோடு பழகவேண்டும் என்கிற தூளுரையை இன்றுமுதல் ஒவ்வொரு மருத்துவரும் செவிலியரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்''.

**மருத்துவத் துறைச் செயலாளர்**

இவ் விழாவில், மருத்துவத் துறைச் செயலாளர் திரு எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் தம் வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

''தாய்சேய் நல மருத்துவமனையின் 150-வது ஆண்டு நிறைவு விழா நடக்கின்ற இந்த நாள் மருத்துவ துறை வரலாற்றில் ஒரு பொன்னாள் ஆகும். நோயற்ற வாழ்வை உறுதி செய்யும் நல்ல நோக்கத்தோடு பாடுபட்டு வரும் முதல்வர் அவர்களுக்கு - அந்த நோக்கத்தை அயராது ஈடேற்றிவரும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் துணை நிற்போம்.

**கைத்தறித்துறை அமைச்சர்**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் தம் வாழ்த்துரையில் கூறியதாவது:

''சமுதாயத்தில் உள்ள ஒடுக்கப்பட்டவர்கள் — ஒதுக்கப்பட்டவர்கள் நலனில் கருத்து வைத்து, அவர்கள் நலன் காக்கத் தாயுள்ளத்தோடு பல நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி வருபவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்த மருத்துவமனைக்கு, அவர்களுக்குப் பின்வந்த வேறுஎந்த முதலமைச்சரும் இவ்வளவு பெருந்தொகையை ஒதுக்கி, ஆக்கபூர்வமான திட்டங்களை அறிவித்ததில்லை. அந்த அளவிற்கு மனிதநேயத்தின் தலைவியாக விளங்கி வருகிறார், நமது புரட்சித்தலைவி அவர்கள்''.

**நிதியமைச்சர்**

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுடைய வாழ்த்துரை விவரம் வருமாறு:

''மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டுக்கு எது எது தேவை என்று கருது கிறாரோ; அது அதைச் செய்து பெரும் புகழ் ஈட்டி வருகிறார்; குறிப்பிட்டுச் சொல்லுவதென்றால் மருத்துவத் துறைக்குப் பல நல்ல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியிருக்கிறார். வெற்றிகரமாக அரசாண்டு வருகிறார்; இதைக் கண்டு பொறாதவர்கள் எரிச்சலைக் கொட்டுகிறார்கள்; சிரங்கு பிடித்தவன் சொறியத்தானே செய்வான்? கி.பி. 2000-இல் இந்தியா எந்த இலக்கை அடைய வேண்டும் என்று மத்திய அரசு கூறியிருக்கிறதோ, அந்த இலக்கைச் சென்ற ஆண்டே, புரட்சித் தலைவி அவர்களின்

திறமையால் தமிழகம் அடைந்துவிட்டது''.

சட்டப்பேரவைத் தலைவர்

தம்முடைய தலைமை உரையில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் பேசியதாவது:

''பசியற்ற வாழ்வுகூட சிலருக்கு அமைந்துவிடக் கூடும் நோயற்ற வாழ்வு அமையாது; ஆனால், நோயற்ற நல்வாழ்வும் பசியற்ற வாழ்வும் எல்லோருக்கும் அமைய வேண்டி அரியபல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார் நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். விலைமதிப்பற்ற உயிரைக் காப்பாற்றுகிற துறை இது என்பதால்தான் சி.டி. ஸ்கேன் இரண்டு இடத்திற்குக் கேட்கப்பட்டும், ஏழு இடத்திற்கு அனுமதித் திருக்கிறார், புகழ்மிக்க முதல்வராம் நம் புரட்சித் தலைவி அவர்கள்.

முதல்வர் பேருரை

சென்னை எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனையின் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த முதல் இந்தியர் என்ற பெருமை பெற்ற டாக்டர் சர் ஏ. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்களின் திருவுருவச் சிலையும், மருத்துவ மனையின் 150-வது ஆண்டு நிறைவு நினைவுத் தூணும் இவ்விழாவையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

தீவிரக் கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவு, இரத்த சேமிப்பு வங்கியின் எலிசா பிரிவு, சி.டி. ஸ்கேன் நிலையம், ஆம்புலன்ஸ் உதவியாளர் பயிற்சி நிலையம் ஆகியவைகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டன; விபத்து அவசரச் சிகிச்சை மற்றும் இருதய - நெஞ்சக அறுவைச் சிகிச்சைப் பிரிவையும் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், மகளிர் நல அறுவை அரங்கத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

அதன்பின் - மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அரசு தாய்சேய் நல மருத்துவமனையின் 150-வது ஆண்டு நிறைவு விழாப் பேருரையாற்றினார். அதன் முழு விவரம் வருமாறு:

## முதல்வர் சிறப்புரை

ஒன்றரை நூற்றாண்டுகளாக, எனது அன்பிற்குரிய தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும், மழலைச் செல்வங் களுக்கும், சிறப்பான மருத்துவ சேவையைத் தொய் வின்றித் தொடர்ந்து ஆற்றி, தமிழக 'அரசு மருத்துவ மனைகளின் தாய்' என்று, அனைவராலும் போற்றப் படும், எழும்பூர் தாய்-சேய் நல அரசினர் மருத்துவ மனையின், 150-வது ஆண்டு விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன்.

'ஆர்க்காடு இரட்டையர்கள்' என்று, தமிழக மக்கள் அனைவராலும் பெருமையுடன் போற்றப்படும், அறிவுலக மேதைகளில் ஒருவரான, டாக்டர் சர்.ஏ. இலட்சுமண சுவாமி முதலியார் அவர்கள், எழும்பூர் தாய் சேய் நல அரசினர் மருத்துவமனையின், கண்காணிப்பாளராகப் பணியாற்றிய முதல் இந்தியர் என்ற பெருமை படைத்



தவர். அது மட்டுமின்றி, 25 ஆண்டுகள் இந்த மருத்துவ மனையில் அயராது பணியாற்றினார். மகப்பேறு மருத்து வத்தில், ஈடு இணையற்ற, மாபெரும் மருத்துவராக விளங்கிய, டாக்டர் சர்.ஏ. இலட்சுமணசுவாமி முதலியார், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும், 27 ஆண்டுகள் உயர் கல்வித் துறையின் உன்னத வளர்ச்சிக்கு, மகத்தான கல்விச் சேவை புரிந்த பெருந் தகையாளர்.

மகப்பேறு மருத்துவத்தைப் பற்றி, டாக்டர் சர்.ஏ.எல். முதலியார் அவர்கள், எழுதிய மருத்துவ நூல், உலக அளவில் உள்ள, அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும், மருத்துவம் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூலாகப் பயிற்றுவிக்கப்படுவது, தமிழ் கூறும் நல்லுலகம், என் றென்றும் பெருமை கொள்ளத்தக்க சாதனையாக விளங்கு வதை, இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன். நம் அனைவரின் போற்றுதலுக்கும், பாராட்டுதல்களுக்கும் உரிய, மாபெரும் மருத்துவ மேதை, டாக்டர் சர்.ஏ.எல். முதலியார் அவர்களின் திருவுருவச் சிலையை, இன்று திறந்துவைக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, நான் மிக்க மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

இதே விழாவில், இந்த மருத்துவமனையில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் அமைய இருக்கும், தீவிர சிகிச்சைப் பிரிவினையும், 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் 'AIDS' நோயாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க சிகிச்சை அளிக்கத் துணை புரியும், ELISA - Enzyme Linked Immune Assay மருத்துவப் பரிசோதனைக் கூடத்தினை யும், இன்று நான் திறந்து வைத்ததில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 2 கோடி ரூபாய் செலவில், நான் இப்போது அடிக்கல் நாட்டிய, அடுக்குமாடி அறுவைச் சிகிச்சை அரங்கம், அதாவது: Multi-Storeyed Operation Theatre Complex, இந்த மருத்துவமனையின் வளர்ச்சிக்கு, மேலும் ஒரு மைல் கல்லாக அமையும், என்பதில் சந்தேகம் இல்லை. இதே விழாவில், சென்னைப் பொது மருத்துவ மனையில், 1.3 கோடி ரூபாய் மதிப்பில் இயங்கவுள்ள, Whole body Scanner; 65 இலட்சம் ரூபாய் செலவில், அங்கு அமையவுள்ள, ஆம்புலன்ஸ் பயிற்சி நிலையம்; 2.5 கோடி ரூபாய் மதிப்பில், Cardio-thoracic and Accident and Trauma Care Centre, ஆகியவற்றையும் இன்று துவக்கிவைத்ததில், நான் பேருவகையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

''நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்'', என்ற வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தில், நமது முன்னோர்கள் மிகுந்த நம்பிக்கையை வைத்திருந்தார்கள். மனிதனின் நல்வாழ்க்கைக்கு அடிப்படையான, நோயற்ற வாழ்வை, பட்டி தொட்டிகளில் வாழும் பாமர மக்களுக்கும் பெற்றுத் தரவேண்டும் என்ற எண்ணம், பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே, என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துவிட்டது. பிணியால் வாடுவோரைக் காணும் போதெல்லாம், என் மனதில், அவர்களது பிணியையும், துன்பத்தையும் ஒரு நொடிப்பொழுதில், தீர்த்துவைக்கும் ஒரு மாபெரும் சக்தி, நமக்கு உடனடியாகக் கிடைக்க வேண்டும் என்று ஏங்குவது உண்டு. பிணியால் ஏற்படும் துன்பங்கள், அனைவருக்கும் ஒன்றுதான் என்று எண்ணும்போது, பொருளாதார பேதங்களுக்கு அப்பாற்பட்டு, நோயற்ற வாழ்வும், பிணி அகற்றும் மருத்துவ சேவையும், அனைவருக்கும் பாகுபாடு இன்றிக் கிடைக்க வேண்டும் என்ற கொள்கையில், எனக்கு மிகுந்த உறுதி ஏற்பட்டது.

மருத்துவ சேவை ஒரு உன்னதமான, புனிதமான மக்கள் பணி என்பதை, நான் பல்வேறு தருணங்களில் எடுத்துரைத்து இருக்கிறேன். அந்த எண்ணங்களின் கூட்டுப் பிரதிபலிப்பாக, எங்களது தேர்தல் அறிக்கையில், தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும், நோயற்ற நல்வாழ்வினைப் பெற்றுத் தருவது தான், எங்கள் அரசின் தலையாய கடமை, என்று குறிப்பிட்டு இருந்தோம். நகரங்களில் மட்டுமின்றி, மூலை முடுக்குகளிலுள்ள கிராமங்களிலும், பட்டி தொட்டிகளிலும், ஏழைகளுக்கும், பாமரர்களுக்கும், மருத்துவ வசதி செய்து தருவோம் என்றும்; கிராமப்புறத்தில் அமைந்துள்ள மருத்துவமனைகளில், மருத்துவர்களும், மருத்துகளும் நிச்சயமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்வோம் என்றும் அறிவித்

## எத்தனை கோடி செலவானாலும் சரி; இன்னுயிர் காத்திடுவோம்!

''இந்த விழாவைக் காண வந்திருக்கின்ற செவிலியர்களை நர்ஸ்களை நான் பார்க்கின்றபோது உண்மையிலேயே என் உள்ளம் பூரிப்பு அடைகின்றது. நர்ஸ்களின் பணி Nursing Profession என்பது ஒரு தியாகம்தான். சேவை மனப்பான்மையுடன் மனிதநேயம் மிக்கவர்கள்தான் இந்தத் தொழிலுக்கு வருவார்கள். இன்றைய நவீன உலகத்தில் எத்தனையோ விரும்பத்தக்க, இலாபம் அளிக்கக்கூடிய தொழில்கள் இருக்கும்போது, பெண்கள் இன்று நுழையாத துறையே இல்லை என்ற நிலை உலகில் இருக்கின்றபோது, விரும்பி ஒரு கடமை உணர்வுடன் இந்த Nursing தொழிலில் ஈடுபட வேண்டும் என்று முன்வரும் பெண்களுக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். I Salute all the women, who have willingly undertaken the nursing profession not only in Tamil Nadu but all over India.!

இன்று இந்த அரசினர் மருத்துவமனைக்காக அரசு ஒதுக்கி உள்ள நிதியினைப் பற்றியும் எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று விரும்புவது என்னவென்றால் தனியார் மருத்துவமனைகளில் இன்று எல்லா நவீன வசதிகளையும் நாம் காண முடிகிறது. அதற்குக் காரணம் இருக்கின்றது. நவீன மருத்துவக் கருவிகளை நாம் தருவிக்க வேண்டுமென்றால், அதற்குப் பல கோடிகள் செலவாகின்றன. தனியார் மருத்துவமனைகளில் அவர்கள் இவற்றை ஒரு முதலீடாகக் கருதி இந்த நவீன கருவிகளை வாங்கி வைக்கின்றார்கள். அதற்கு அவர்களுக்கு ஒரு Return-ம் வருகிறது; வருமானம் வருகிறது. ஆகவே அவர்கள் எளிதில் இதுபோன்ற நவீன latest கருவிகளை வாங்கி அங்கே பயன்படுத்த முடிகிறது. ஆனால் அரசு துறையைப் பொறுத்தவரை இங்கே எந்த Return-ம் கிடையாது. இங்கே பொருளாதார அடிப்படையில் நாம் சிந்தித்தோம் என்று சொன்னால் Whatever we invest is a dead investment அதில் எந்தவிதமான Return-ம் கிடையாது.

''ஆனால், இதுவரை கவனிப்பாரற்றுக் கிடந்த இந்த மருத்துவத் துறையை நாங்கள் பொறுப்பேற்ற பின்பு, ஒரு புதிய சிந்தனையோடு ஒரு புதிய அணுகுமுறையோடு நாங்கள் நோக்குகின்றோம்!

நாங்கள் எத்தனை கோடிகள் செலவானாலும் பரவாயில்லை, தனியார் இயக்குகின்ற மருத்துவமனைகளுக்கு ஈடாக, இணையாக, ஒப்பாக அரசுத் துறையில் இயங்குகின்ற மருத்துவமனைகளுக்கு எல்லா நவீன வசதிகளையும், கருவிகளையும் பெற்றுத்தர வேண்டும் அதற்கு எத்தனைக் கோடிகள் செலவானாலும் பரவாயில்லை என்று நாங்கள் நினைப்பதற்குக் காரணம் எங்களுக்குக் கிடைக்கின்ற Return என்பது, நாங்கள் வெறும் பணத்தில் கணக்கிடுவதில்லை. We consider it valuable investment in human resource.

''நம் நாட்டில் உள்ள குழந்தைகள், நாளை ஆரோக்கியமான நல்ல குடிமக்களாக வளர வேண்டும் என்பதற்காக எத்தனை கோடிகள் செலவானாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன்தான், இந்த அரசு, நிதிப் பற்றாக்குறையையும் மீறி, நிதி நெருக்கடியிலும் இத்தனைக் கோடிகளை மருத்துவத் துறைக்காக இன்று ஒதுக்கி வருகிறது. இப்படி எல்லா நவீன வசதிகளையும் அரசினர் மருத்துவமனைகளில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நினைக்கும் இந்த அரசு, இந்த மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களிடமும், செவிலியர்களிடமும், பணியாளர்களிடமும் என்ன எதிர் பார்க்கிறது?

''இந்த வசதிகளை நல்ல முறையில் பயன்படுத்தி, இங்கே வருகின்ற நோயாளிகளை வெறும் நோயாளிகளாகக் கருதாமல், உங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரைப்போல் கருதி, ஒரு சகோதரப் பாசத்துடன், அன்புடன் அவர்களை நடத்தி, அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை நீங்கள் அளிக்க வேண்டும். இந்த அரசுக்கு ஒரு நல்ல பெயரை நீங்கள் பெற்றுத்தர வேண்டும் என்றுதான் நாங்கள் உங்களிடம் எதிர்பார்க்கிறோம்; இதை நீங்கள் நிச்சயமாகச் செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது''

**—தாய்சேய் நல மருத்துவமனையின் 150-வது ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**



திருந்தோம். மாவட்டத் தலைமையிடத்து மருத்துவமனை களிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், அயல் நாடுகளுக்கு நிகரான மருத்துவ உத்திகளைக் கையாண்டு, மருத்துவ சிகிச்சை கிடைக்க வழி வகுப் போம், என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

மற்ற துறைகளில், நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் போது, ஒரு வெற்றி மனப்பான்மை மட்டும்தான் ஏற்படும். ஆனால் நல்வாழ்வுத் துறையில், நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் போது, ஒரு மனிதாபிமான மிக்க , மகத்தான மக்கள் சேவையை ஆற்றி இருக்கிறோம், என்ற மன நிறைவு எங்களுக்குக் கிடைக்கின்றது. எனவேதான், தொடர்ந்து மக்கள் சேவையை ஆற்றி இருக்கிறோம், என்ற மன நிறைவு எங்களுக்குக் கிடைக்கின்றது. எனவேதான், தொடர்ந்து மக்கள் நல்வாழ்விற்கான பல திட்டங்களைத் தீட்டி, தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறோம். Health for All by 2000 A.D. என்பதே, எங்கள் தாரக மந்திரம். 21-ஆம் நூற்றாண்டில் நுழைவதற்கு முன், மக்கள் அனைவருக்கும், நோயற்ற நல்வாழ்வு கிடைக்கச் செய்யப் பாடுபடுவதே, இப்போதைய எங்கள் இலட்சியம்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி, மருத்துவத் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தோடு, மக்கள் உயிர் காக்கும் பணிக்குப் புதிய பரி மாணங்களையும் கொடுத்துள்ளதென்றால், அது மிகை யாகாது. வளர்ச்சியடைந்த மேலை நாடுகளில், மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள வசதிகளை, நமது நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இன்னும் நாம் பின் தங்கிய வர்களாக இருக்கிறோம். அந்த நாடுகளில், தனி நபர் நல் வாழ்வுக்குச் செலவிடும் தொகை, நமது நாட்டுத் தனி நபர் செலவீட்டுத் தொகையைவிட, அதிகமாகவுள்ளது. எனவேதான், நமது மாநிலத்தைப் பொருத்தவரை, கடந்த 2½ ஆண்டுகளாக, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, கடுமையான நிதி நெருக்கடி யிலும், மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டினை, ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக்கொண்டு வந்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990-91-ஆம் ஆண்டு, 343 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. 1991-92-ஆம் ஆண்டு, நாங்கள் அந்த நிதி ஒதுக்கீட்டினை, 411 கோடி ரூபாயாக உயர்த் தினோம். 1992-93-ஆம் ஆண்டு, 469 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தினோம். நடப்பு நிதியாண்டில், எப் போதும் இல்லாத அளவிற்கு, 557 கோடி ரூபாயை, மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்கென, ஒதுக்கிக் கொடுத் துள்ளோம் என்பதைத் தெரிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆண்டொன்றுக்கு, 39 கோடி ரூபாய் மட்டுமே, மருந்துகளின் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததை, இந்த நடப்பு நிதியாண்டில், 79 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளோம். கிட்டத்தட்ட இரண்டு மடங்குகளாக, மருந்துகளுக்கான செலவினம் உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமப்புற மருத்துவமனைகள் உட்பட, எல்லா மருத்துவமனைகளிலும், உயிர் காக்கும் மருந்துகள், தொடர்ந்து எப்போதும் கிடைத்திடவேண்டும், என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில், மருந்துகளை வாங்கவும், அவற்றினைச் சீராக அனைத்து மருத்துவமனைகளுக்கும் விநியோகிப்பதற்காகவும், ''தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகம்'' என்ற ஓர் அமைப்பினை, இந்த அரசு உங்கள் அரசு ஏற்படுத்தியுள்ளது என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசாங்க மருத்துவமனை களுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், தேவை யான வசதிகளை மட்டும் அதிகப்படுத்தினால் போதாது. அந்த மருத்துவமனைகளின் சேவைகள், எல்லா மக்களுக் கும் சென்றடைய வேண்டுமென்பதில், எனக்குத் தனி ஈடுபாடு உண்டு. மக்கள் மருத்துவமனைக்குச் சென்றால் தான், மருத்துவ சிகிச்சையும் மருந்துகளும் கிடைக்கும், மருந்துகளும், மக்கள் இருக்கும் இடத்திற்கே சென்ற டையச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, ஒரு திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இந்தப் புதுமையான 'மருத்துவ நலத் திட்டத்தை', 18.1.1992 அன்று, நான் துவக்கி வைத்தேன். கிட்டத் தட்ட 10,000 மருத்துவ முகாம்கள், கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் நடத்தப்பட்டு, 55 இலட்சம் பேர், இலவசமாகப் பரிசோதனை செய்யப்பட்டு இருக் கிறார்கள். இந்த முகாம்களில், நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்ட 2 இலட்சம் பேர், தீவிர மருத்துவச் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டு, அவர்களுக்கு இலவசச் சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்த முகாம்கள், பொதுமக்கள் மத்தியில், நலவாழ்வு, சுகாதாரம் ஆகியவற்றைப் பற்றி, ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறியும் போது, உண்மையில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழகத்தின் பல்வேறு கிராமங்களுக்கு நான் செல்லும்போது, அங்கே வசிக்கின்ற எனது அன்பிற்குரிய தாய்மார்களும், சகோதரிகளும், தங்கள் பிணியைத் தீர்த்துக் கொள்வதற்கு, தூரத்திலுள்ள மருத்துவமனை களுக்கு சென்று, மருத்துவச் சிகிச்சை பெற, அவர்களது ஏழ்மையும், குடும்பச் சூழ்நிலையும், தடையாக இருப் பதைக் கண்டேன். ஒருபுறம் மருத்துவர்களின் சேவையும், மருந்துகளும், இலவசமாகக் கிடைத்தாலும், அவற்றைப் பயன்படுத்துகின்ற வாய்ப்பை இழந்து, விதி வகுத்த வழி என்று, எனது அன்பிற்குரிய தாய்மார்கள், தங்கள்

வாழ்க்கையை அமைத்துக்கொண்டதைக் கண்டபோது; அத்தகையோர் அனைவருக்கும், மருத்துவ வசதிகளையும், மருந்துகளையும், அவர்கள் இருப்பிடத்திற்கே கொண்டு சேர்க்க வேண்டும் என்று விரும்பினேன். அந்த எண்ணம், இந்தத் திட்டத்தின் மூலம், ஈடேறிக் கொண்டு இருக்கிறது.

''ஆதரவற்ற பெண் குழந்தைகள் திட்டம்''; ''அனாதைக் குழந்தைகள் திட்டம்''; ''மகளிர், தாய் சேய் நலத் திட்டம்''; சமீபத்தில் என்னால் துவக்கி வைக்கப்பட்ட, ''ஒருங்கிணைந்த 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டம்'', ஆகியவற்றின் செயல்பாட்டை, ஏதோ ஒரு சாதாரண கடமை என்று கருதாமல்; மக்களுக்குச் செய்கின்ற ஒரு மனிதாபிமான அடிப்படைத் தொண்டு, என்கின்ற அடிப் படையில் தான், இந்த அரசு, உங்கள் அரசு இவற்றைச் செயல்படுத்தி வருகின்றது.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்போது, ஏற்படுகின்ற சங்கடங்களையும் சவால்களையும்; நிதிப் பற்றாக்குறைகளை எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலை களையும், சமாளிக்க, கோடிக்கணக்கான தமிழகத்து மக்கள், என்மீது தனிப்பட்ட முறையிலும், முதலமைச்சர் என்கின்ற முறையிலும், சகோதர பாசத்துடன் அளித்து வரும் ஆதரவு, ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்து எல்லாச்சோதனைகளையும் எதிர்கொண்டு, வெற்றி பெறு கின்ற ஓர் அசுர பலத்தை, எனக்குக் கொடுத்துள்ளது.

மக்களிடையே பொருளாதாரத்தில் வேறுபாடு இருந் தாலும், அவர்களுக்குக் கிடைக்கின்ற மருத்துவ வசதி களில், மாறுபாடு இருக்கக் கூடாது என்பதுதான், எனது உறுதியான முடிவு.

பணம் இல்லாத காரணத்தினால், தங்கள் குழந் தைக்கு, நல்ல மருத்துவ சிகிச்சை அளிக்க முடிய வில்லையே என்று, ஓர் ஏழைத் தாயும் தந்தையும், தமிழகத்தில் எங்காவது ஒரு மூலையில், மருத்துவ வசதிக் காக ஏங்கும் குரல் கேட்டால்; அந்த ஏங்கும் குரல், சமுதாயத்தை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பது, எனக்குத் தெரியும். எனவேதான், ''15 அம்சக் குழந் தைகள் நலத் திட்டத்தின்'' ஓர் அம்சமாக, தமிழகத் திலுள்ள, நலிந்த பிரிவினைச் சேர்ந்தவர்களின் குழந் தைகள் அனைவருக்கும், இலவசமாக அரசாங்கமே மருத்துவப் பரிசோதனை செய்து; இருதய நோய் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து; அவர்களது பிணியைத் தீர்ப்பதற்கு; அரசாங்கமே முழுப் பொறுப்பேற்று, அறுவைச் சிகிச்சையையும் செய்து, மருத்துவ வசதியையும் இலவசமாகக் கொடுத்துவருகின்றது என்பதை, நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய அளவில், வசதியின்மையால் தனது குழந்தைக்கு, இருதய நோய்க்கான அறுவைச் சிகிச்சை செய்ய முடியவில்லையே என்று, யாரும் ஏங்கக் கூடாது என்ற எனது கனவு, நனவாகி வருவதைக் கண்டு, நான் மகிழ்ச்சியடைகிறேன். எதிர்காலத்தில், இந்திய நாட்டிற்குச் சிறந்த குடிமக்களை உருவாக்குகின்ற, ஒரு தொலைநோக்குப் பார்வையுடனும், புனிதமான எண்ணத்துடனும்தான், நாங்கள் இந்தத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.





மற்ற பணிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இன்னமும், மருத்துவர்களின் பணி, புனிதமானதாகவும்; பிணி தீர்க்கும் மருத்துவர்களை, வழி காட்டும் மாமனிதர் களாகவும் எண்ணி, அவர்களுக்கு மரியாதை காட்டும் பாங்கினைக் காண்கின்றோம். மக்களது பிணியையும், வலியையும் தீர்த்து வைக்கும் மருத்துவர்களை, மக்கள், கடவுளின் வடிவமாகக் காண்பதில், தவறு ஒன்றும் இல்லை.

நன்றியும், நல்லொழுக்கமும் நிறைந்த தமிழக மக்கள்; உலகத்திற்கு நாகரீகத்தை சொல்லிக் கொடுத்த மக்கள்; அதே உணர்வுடன் தான் மருத்துவர்களையும் மதிக் கின்றார்கள்.

பொருளாதாரத்திற்கு முதன்மையான இடத்தை கொடுக்கின்ற, இன்றைய சமுதாய சூழ்நிலையில், சில மருத்துவர்கள், சேவை மனப்பான்மையை விட, பொருளா தார எதிர்பார்ப்புகளில் அதிகமாக நாட்டம் செலுத்துவதையும் காண்கின்றோம். இத்தகைய மனப் பாங்கு, மருத்துவத் துறையின் மகத்துவத்தைக் குறைத்து விடும் என்று நான் அஞ்சுகிறேன். பணம் படைத் தோருக்குத்தான் மருத்துவ வசதி; வசதி படைத்தோருக்குத் தான், உயிர் காக்கும் மருந்துகள் என்ற நிலையை, எந்தவொரு நாடும், எப்போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. வசதியற்றோரும், ஏழைகளும், நலிந்தோரும், எல்லா வசதிகளையும் பெறவேண்டும். அப்படி அவர் களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதில், மருத்து வர்கள், ஒரு கருணை மனத்தோடு சகோதர பாசத்தோடு நடந்துகொள்ள வேண்டும். வசதியற்றோருக்கு இலவச மாகவும், குறைந்த கட்டணத்திற்கும், அதே தரமான மருத்துவ சிகிச்சையையும், வசதிகளையும் வழங்க வேண்டும் என்றும், நான் எல்லா மருத்துவர்களையும், இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மக்கள் பிணி அகற்றும் உங்கள் பணி, மகத்தானது; புனிதமானது. அந்தப் புனிதத்திற்கு, நீங்கள் மேலும் புனிதத்தைச் சேர்க்க வேண்டும் என்று, இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நம் அனைவரின் பாராட்டுதல்களையும் ஒருங்கே பெற்ற, தமிழக மருத்துவத் துறைக்குச் சிறப்பைச் சேர்க்கும், இந்தத் தாய்-சேய் நல அரசினர் மருத்துவமனை, பல தனிச் சிறப்புகளையும், தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை அறியும்போது, நான் மிக்க பெருமை அடைகின்றேன். Endocrinology, Genetics, Ultrasonography, Fertility Research Centre, Micro-surgery, Endoscopic Training Centre மற்றும் Cancer Block, போன்ற சிறப்புப் பிரிவுகள், மருத்துவ அறிவியல்- தொழில் நுட்பத்தோடு, மகளிர், குழந்தைகளுக்கான நோய்களைக் கண்டறிந்து; தக்க சிகிச்சையும் அளித்துவருகின்றன. மேலும், கடந்த 8 ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்த மருத்துவமனை, குடும்ப நலத் துறையில், மெச்சத் தகுந்த சாதனையை புரிந்து, விருதுகளைப் பெற்று வந்திருக்கின்றது என்பதை அறிந்து; அந்தப் புகழுக்கும் பெருமைக்கும் பின்னணியாக விளங்கும், இந்த மருத்துவமனையின் மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும், என் மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மனிதாபிமான சேவை, நல்ல மருத்துவச் சிகிச்சை, சேவை மனப்பான்மையுடன், நோயாளிகளை அணுகுகின்ற முறை போன்றவற்றைப் பொது மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதை, அரசு மருத்துவமனைகளில் பணி புரியும் மருத்துவர்களும், இதர பணியாளர்களும், புரிந்துகொண்டு செயல்படவேண்டும் என்று, இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கிரேக்க மருத்துவ மேதை, Hippocrates தந்த சென்ற உறுதிமொழியை, எடுத்துக்கொண்ட மருத்துவர்கள்; அந்த உறுதிமொழியை உண்மையாக நடைமுறைப்படுத்தி, செயல்படுத்தி, அவர்களது ஆற்றல், திறமை, நேரம், உழைப்பு ஆகிய அனைத்தையும், சமுதாயக் கடமை உணர்வோடு, சாதி, மத, சமய, பொருளாதார ஏற்றத் தாழ்வு ஏதும் இன்றி, பயன்படுத்தவேண்டும் என்று, உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விழாவினைச் சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், அன்புச் சகோதரர், திரு. எஸ். முத்துசாமி அவர்கள், மிகுந்த திறமைசாலி; நிர்வாக ஆற்றல் படைத்தவர்; கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். எந்தவொரு துறையின் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தாலும், அதில் ஒரு சாதனை புரிந்து காட்டவேண்டும், என்ற எண்ணம் படைத்தவர். தான் பொறுப்பு ஏற்றுக் கொண்ட துறையில், தனது தனி முத்திரையைப் பதித்துக் காட்டும் ஆற்றல் படைத்தவர், அன்புச் சகோதரர் திரு. முத்துசாமி அவர்கள். முன்பு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, சிறப்பாகப் பணியாற்றி, அத்துறையில் பல சாதனைகள் நிகழ்த்திக் காட்டினார். அதேபோன்று, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த உங்கள் அரசின், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டவுடன், அதே முனைப்புடன், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட, மக்கள் நல்வாழ்வுத் துறையின் வளர்ச்சிக்கு, அயராது உழைத்து, தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை என்பது, தமிழக அரசின் துறைகளில் கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு துறை ஆகும்.



அன்புச் சகோதரர் திரு. முத்துசாமி அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, அந்த நிலையை மாற்றி, தனது செயலாற்றலாலும், கடுமையான உழைப்பாலும், அந்தத் துறைக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துவருகிறார் என்றால், அது மிகையாகாது. தனது துறையைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும், நன்கு புரிந்துகொண்டு, தனது பணியைச் செவ்வனே, திறம்பட ஆற்றி வருகின்ற, அன்புச் சகோதரர் திரு. முத்துசாமி அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா இவ்வளவு சிறப்புடன் நடைபெறுவதற்கு அவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர், திரு. இ. மதுசூதனன் அவர்களுக்கும், எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். அன்புச் சகோதரர் திரு. இ. மதுசூதனன் அவர்கள், ஆரம்பகாலத்தில் இருந்தே, இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, பல தியாகங்களைச் செய்து, உண்மையுடனும் திறமையுடனும் பணியாற்றி வரும், ஒரு சிறந்த செயல்வீரர் ஆவார். இயக்கத்தில் படிப்படியாக வளர்ந்து, பல பொறுப்புக்களை வகித்து, இன்று அமைச்சராக உயர்வு பெற்றுள்ளார். சலியாத மனதுடனும், ஆர்வத்துடனும், அயராது பாடுபட்டு, எந்த எதிர்பார்ப்புமின்றி, தனக்குக் கொடுத்த பணிகளைச் சிரமேற்கொண்டு, செயல்பட்டு வந்துள்ளார். ஆகவே, அவருக்கு இன்று கிடைத்திருக்கும் இந்த உயர்வு, ஒரு நியாயமான உயர்வுதான் என்பதில் சந்தேகம் இல்லை.

சென்னையில் எந்த ஒரு விழா சிறப்பாக நடந்தாலும், அதற்குப் பின்னணியில், அன்புச் சகோதரர் திரு. மதுசூதனனின் பங்கு நிச்சயமாக இருக்கும். தனது நிர்வாகத் திறமையால், அனைவரையும் ஒருங்கிணைத்துப் பணியாற்றுவதில் வல்லவர், அன்புச் சகோதரர் திரு. மதுசூதனன் அவர்கள்; சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்களிடம், மிகுந்த பாசத்தை வைத்திருப்பவர், சகோதரர் மதுசூதனன் அவர்கள். அவர் பார்ப்பதற்கு எளியவர்; பழகுவதற்கு இனியவர், அமைச்சர் ஆவதற்கு முன்பு எப்படி இருந்தாரோ, அதே போன்றுதான் இப்போதும், அமைச்சரான பின்பும் இருந்து வருகிறார் என்பதையும், பதவி எந்த விதத்திலும், அவரது நல்ல குணங்களைப் பாதிக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுவதில், நான் உண்மையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



# பிறந்த குழந்தைகளுக்கான மருத்துவப் பிரிவு

சரியான எடை மற்றும் முழுவளர்ச்சியின்றிப் பிறந்த குழந்தைகள் மற்றும் குறை மாதத்தில் பிறந்த குழந்தை களைக் காப்பதற்காக, சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை நலவாழ்வு மையத்திலும், புதுவண்ணை நலவாழ்வு மையத்திலும் ''அண்மையில் பிறந்த குழந் தைகள் பிரிவு'' (Neo natal ward) மற்றும் ......... குழந்தைகள் பிரிவு (Paediatric Ward) மொத்தம் ரூ.30 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டு உள்ளது. இதில் குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளைக் குறிப்பிட்ட காலம் வரையில் பாதுகாக்க இன்குபேலட்டர் (Incubator) பிறந்த குழந்தைகளின் உடல் வெப்பத்தை ஒரே மாதிரி யாக பாதுகாக்கும் பேபி வார்மர் (Baby Warmer), பிறந்த குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை நோய் வராமல் தடுக்கும் போட்டோ தெரபி (Photo Theraphy) போன்ற கருவிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்தப் பிறந்த குழந்தை உயிர்க்காப்புப் பிரிவு களில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் நேரடிக் கண்காணிப்பு இருப்ப தால், இம்மையங்களில் குறைபாடுகளுடன் பிறக் கின்ற குழந்தைகள் எளிதில் காப்பாற்றப்படு வதற்குத் தற்பொழுது வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுவரை ''அண்மையில் பிறந்த குழந்தைகள் பிரிவு மற்றும் குழந்தைகள் பிரிவு'' அரசு மருத்துவ மனைகளில் மட்டும் இயங்கி வந்தது. இப்பொழுது சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்களிலும் இப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் ஏழை எளிய தாய்மார்களின் குழந்தைகள் பாதுகாக்கப்படுவதற் குப் பெரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

---

கடந்த ஆண்டு சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டபோது, அந்தத் துறைக்கும் தனக்கும் தொடர்பு இல்லையென்றாலும், சகோதரர் மதுசூதனன், சென்னை மாநகரின் பல பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் பணியில், முழுமையாக ஈடுபட்டு, நல்லதொரு சேவை புரிந்தார்.

ஆரம்ப காலத்திலிருந்தே, கொண்ட கொள்கை மீது உறுதியுடனும், ஏற்றுக்கொண்ட தலைமையின் மீது விசுவாசத்துடனும், இயக்கத்தின் பல சோதனையான காலகட்டங்களிலெல்லாம், தெளிவான ஒரு முடிவுடன், சற்றும் சலனமின்றிச் செயல்பட்ட காரணத்தால்தான், இந்த அளவிற்குப் பொதுவாழ்வில் உயர்ந்துள்ளா ரென்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா, ஏற்பாடுகளை, அமைச்சர்களுடன் துணை இருந்து செய்த, அரசு அலுவலர்களுக்கும், மருத்துவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல் களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாய் சேய் நலத்தைப் பொறுத்தவரை, மற்ற மாநிலங் களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகம் முன்னணி யில் இருக்கின்றது. ஒரு காலத்தில் பிரசவத்தின்போது, பல சகோதரிகள், மருத்துவ வசதியும், உயிர்காக்கும் மருந்துகளும் கிடைக்காத காரணத்தினால், தங்கள் எஞ்சிய வாழ்நாளில், உடல்நலம் இழந்ததோடு, பல நேரங்களில் உயிரையும் இழந்திருக்கிறார்கள், என்ற துயரமான சூழ்நிலை, இன்று முழுமையாக மாற்றிய மைக்கப்பட்டிருக்கிறது. தாய் சேய் நலம் காப்பதில், நாம் மற்றவர்களுக்கு இளைத்தவர்கள் அல்ல; சளைத்தவர்கள் அல்ல; அகில இந்திய அளவில், 2000-ஆவது ஆண்டில், எந்த ஓர் இலக்கை அடைய வேண்டும் என்று, மத்திய அரசு நிர்ணயித்து இருக்கின்றதோ, அந்த இலக்கை, மற்ற மாநிலங்களுக்கு முன்பு, இப்போதே நாம் அடைந்து விட்டோம் என்பதை மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், நமது சாதனைகளை நினைத்து நாம் மகிழ்ச்சியடைந்து, நமது கடமையை மறந்துவிட முடியாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பொது மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தினால், ஒருவர் கூட அவதியுறவில்லை என்கின்ற, உன்னதமான நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதே, என் இலட்சியம், குறிக்கோள்.

அந்த இலட்சியத்தை நோக்கி, நாங்கள் மேற்கொள் ளும் புனிதப் பயணத்தில், இதுபோன்ற மருத்துவ மனைகளில் பணி புரியும், மருத்துவர்களும், பணி யாளர்களும், உறுதியுடன் துணை நின்றால், எத்தகைய ஒரு சாதனையையும் எங்களால் படைக்கமுடியும்.

150-வது ஆண்டு விழாவினைக் கொண்டாடும், பெருமைமிக்க இந்த மருத்துவமனை, மேலும் மக்கள் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, இந்தியா விலேயே; ஏன், உலகத்திலேயே தலைசிறந்த மருத் துவமனை, என்ற பெயரையும் புகழையும் பெறவேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்து; இந்த மருத்துவமனையில் பணிபுரியும் அனைத்து மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுதல்களையும், உளங் கனிந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்.

— தொகுப்பு: இல. இராசேந்திரன்



இந்த அகல்விளக்கைக்
குன்றிலிட்ட விளக்காக்கிய
அன்னையே!



தங்கள் பிறந்தநாள்
தமிழர்க்குத் திருநாள்!
வாழ்த்த வயதில்லை...
வணங்குகிறேன்.


பல்லாவரம்
J. பீர் முகைதீன்
உறுப்பினர்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
24/D, காசிம் சாகிப் தெரு,
பல்லாவரம் சென்னை-43
போன்: 402267 402133

# தங்களின் தொலைநோக்குப் பார்வை விளையாட்டுத்துறையில் தமிழகத்துக்கு முதலிடம் வழங்கும்!

**சென்னையில் 1994 பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை நடைபெற்ற பன்னாட்டு அழைப்பு தடகளப் போட்டிகளில் கலந்து கொண்ட சர்வதேச விளையாட்டு வீரர்களும், விளையாட்டுக்குழு மேலாளர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றிப் பெருக்கோடு எழுதிய கடிதம்:**

Dr. J. Jayalalitha
Honourable Chief Minister of Tamilnadu
Madras
India.

5th February 1994

Re. International Invitation Meet and 33rd Open National Athletic Championships in Madras
2-5 February 1994.

Dear Chief Minister,

The beauty and benevolent demeanour of India and the Indian people is known and envied thoughout the world. It was with this preconceived notion that we athletes and managers grasped vigorously the opportunity to visit and experience India and, in particular Tamilnadu.

Your foresight in inviting International Athletes coupled with the spectacular facilities and unparalleled organisation will ensure that Tamilnadu will trust to the forefront of Indian athletics.

The hospitality of you and your people has met and surpassed anything for which we could have wished. It is clear that Tamilnadu personifies all the best of India and that the Indian reputation is well founded.

We will leave Madras and Tamilnadu with fond memories and a yearning to return in the near future for some other athletic competition.

Yours sincerely,



The International Invited Team of athletes and managers from Ghana, Nigeria, Zambia, USA, Jamaica, Sweden, Great Britain, Ireland, Kenya, Russia, Ukraine, Germany, U.A.E., Denmark, Italy, New Zealand, Burundi, China, Bahamas, Iceland, Austria.



# “பெண்கள் அனைவரும் சமுதாய நலப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் போதுதான், பாரதி கண்ட புதுமைப் பெண்களைக் கொண்ட தமிழகத்தை உருவாக்க முடியும்!”

## ‘எக்ஸ்னோரா’ பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

சென்னை மாநகரின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் உன்னதக் குறிக்கோளுடனும்; சுற்றுப்புறச் சூழலைப் பற்றி ஒரு விழிப்புணர்ச்சியை, மக்களிடையே ஏற்படுத்த வேண்டும், என்ற உயர்ந்த இலட்சியத்துடனும் செயல்பட்டு வரும் Exnora International என்ற அமைப்பின் மகளிர் பிரிவு ஏற்பாடு செய்துள்ள, இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, இங்கு குழுமியுள்ள உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.




### சமுதாய நலப்பணி இயக்கம்

புதுமையைச் செயல்பாட்டிலும், பெயரிலேயும் தாங்கியுள்ள எக்ஸ்னோரா அமைப்பு, சென்னை நகரின் சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்புக்கும், மேம்பாட்டிற்கும், கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும், ஒரு சமுதாய நலப்பணி இயக்கம் ஆகும். இந்த அமைப்பின் ஆரம்ப காலத்தில் இருந்தே, இதன் செயற்பாடுகளை நான் நன்கு அறிவேன். அதன் பணிகள் என்னைக் கவர்ந்த காரணத்தால் தான், ஒரு கால கட்டத்தில், இந்த இயக்கத்தில் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. இந்த அமைப்பின் செயல்பாட்டையும், அதன் படிப்படியான வளர்ச்சியையும், நான் துல்லியமாகக் கவனித்துக் கொண்டு தான் வருகிறேன். ஆக இந்த அமைப்பு, ஏற்கெனவே எனக்கு அறிமுகமான அமைப்பு ஆகும்.

‘எக்ஸ்னோரா’ நிறுவனர் திரு. M.B. நிர்மல் அவர்கள், ‘எக்ஸ்னோரா’ மகளிர் பிரிவு, என்னைச் சிறப்பிக்கும் வகையில் பாராட்டு விழா நடத்த, ஆர்வமாக உள்ளனர் என்ற கோரிக்கையை, எனக்கு அனுப்பி வைத்தபோது, நானும் ‘எக்ஸ்னோரா’-வின் அழைப்பினை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். ‘எக்ஸ்னோரா’ எனக்காக ஒரு பாராட்டு விழாவினை நடத்துகின்றதே என்பதல்ல, எனது மகிழ்ச்சிக்குக் காரணம். ஆனால், அமைதியோடும், உறுதியோடும், தெளிவோடும், தீவிரத்தோடும், சென்னை மாநகரில் சுற்றுப்புறச் சூழல் பற்றி, ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, செயலாற்றிக் கொண்டிருக்கும் இந்த ‘எக்ஸ்னோரா’ அமைப்பின் நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், எனது பாராட்டுக்களை நானே நேரில் தெரிவிக்க, ஒரு வாய்ப்பு கிடைத்ததை எண்ணித் தான், நான் இந்த விழாவில் கலந்து கொள்ள ஒப்புக் கொண்டேன் என்பதுதான் உண்மை!

### சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காக்க...

நமது நாட்டைப் பொறுத்தவரை, மக்கள் தொகைப் பெருக்கம், எழுத்தறிவின்மை, அறியாமை, ஏழ்மை போன்றவற்றினால் ஏற்படுகின்ற பாதிப்புகளை விட, சுற்றுப்புறச் சூழல் சீர்குலைவினாலும், சுகாதாரக் கேட்டினாலும் விளைகின்ற அபாயங்கள், வருங்காலத்தில் மிகப் பெரிய அளவில், பாதிப்பினை ஏற்படுத்தக் கூடும் என்ற கருத்தினைப் பல அறிவியல் அறிஞர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

பொதுவாகவே சுற்றுப்புறச் சூழல், பெரிய தொழிற்சாலைகளிலிருந்து ஏற்படும் கழிவுகள், வேதியியல் பொருட்களின் தாக்கம், போன்றவற்றினால் தான் பாதிக்கப்படுகின்றது, என்ற ஒரு மேலோட்டமான கருத்து- நிலவி வருகின்றது. இந்தக் கருத்து ஏற்புடையதாக இருந்தாலும், அதே நேரத்தில், பொதுமக்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில், சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சி இல்லாத காரணத்தினால் ஏற்படுகின்ற மாசுகள் விளைவிக்கும் தீமைகளும், எந்த விதத்திலும் குறைந்தது அல்ல என்பதும் உண்மையாகும்.

சென்னையைப் போன்ற ஒரு பெரிய நகரத்தைப் பாதிக்கின்ற மாசுகளுக்கு, அதாவது, Pollution-க்கு, பெரிய தொழிற்சாலைகளைப் போலவே, சாதாரண தனி மனிதர்களும்தான் காரணமாக இருக்கிறார்கள் என்பதையும், நாம் புரிந்து கொண்டாக வேண்டும். வேறு வகையில் இதைச் சொல்ல வேண்டுமென்றால், இந்தப் பூமியில் வசிக்கின்ற ஒவ்வொருவரும், தங்களால் இயன்ற அளவிற்கு, மாசுகளை ஏற்படுத்தாமல், சுற்றுப்புறச் சூழலை நன்முறையில் பேணிக் காக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டால், இப்போதுள்ள பிரச்சினைகளில் பாதி குறைந்து விடும் என்பது தான் உண்மை.

**விழிப்புணர்ச்சியுடன் செயல்பட....**

'சுத்தம் சோறு போடும்' என்றும்; 'கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு' என்றும் நமது முன்னோர்கள், நாம் தனிப்பட்ட முறையில் கடைப்பிடிக்க வேண்டிய, சுகாதார அடிப்படைத் தத்துவத்தைச் சொல்லிவிட்டுச் சென்றிருந்தாலும்; தனி மனிதச் சுகாதாரமும், தனி மனித நற்பண்புகளும் தான், நமது சமுதாய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன என்பதன் அடிப்படையில் தான், அவ்வாறு கூறியிருக்கிறார்கள். அறிவியலும், தொழில் நுட்பமும், போட்டி போட்டுக் கொண்டு, படிப்படியாக வளர்ந்து வரும் இந்தக் கால கட்டத்தில், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும், நாம் மேற்கொள்கின்ற பல முயற்சிகள், சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்றவையாக இல்லாமல், இருக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

சுற்றுப்புறச் சூழலைக் கட்டுப்படுத்துவதற்கும், பேணிக் காப்பதற்கும், அதே அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதும், நாம் உணர வேண்டிய ஒன்று. இருப்பினும், பெருகி வருகின்ற மக்கள் தொகைப் பெருக்கமும், நகர்ப்புற வளர்ச்சியும், சுற்றுப்புறச் சூழலுக்குச் சவால் விட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, ஒவ்வொரு தனி மனிதனும், தன்னால் இயன்ற வரை, சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காத வண்ணம், ஒரு விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய கால கட்டத்தில், நாம் வாழ்ந்து வருகின்றோம்.

**சமுதாய உணர்வுடன் செயல்பட....**

நாம் வசிக்கும் பகுதி, இருக்கும் ஊர், வாழும் நகரம் ஆகியவற்றைச் சுத்தமாகவும், தூய்மையாகவும், சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவிக்காமல், பேணிக் காக்க வேண்டும் என்ற ஒரு விழிப்புணர்வை, சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, 'எக்ஸ்னோரா' அமைப்பு தான் ஒரு பெரிய அளவில், மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு, நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை, யாரும் மறுக்க முடியாது. சுற்றுப்புறச் சூழலை, நன்முறையில் பேணிப் பாதுகாப்பது, ஏதோ உள்ளாட்சி அமைப்புகளின் கடமை என்ற ஒரு ஆழமான கருத்தும், நாம் நினைத்தால் கூட, தனிப்பட்ட முறையில் எதுவும் செய்து விட முடியாது என்ற எண்ணமும், சென்னை மாநகர மக்களிடையே இருந்து வந்தது. அத்தகைய ஒரு சூழ்நிலையில், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை, தனி மனிதன் கூட, ஒரு சமுதாய உணர்வுடன், புரிந்து செயல்பட்டால், அந்த இலக்கினை அடைய முடியும் என்று நிரூபித்து காட்டியவர்கள் தான், இன்று நம் பாராட்டைப் பெறுகின்ற, 'எக்ஸ்னோரா' அமைப்பைச் சார்ந்தவர்கள்.

## 'எக்ஸ்னோரா' என்ன செய்கிறது?

**'எக்ஸ்னோரா' என்னும் சமூக சேவை இயக்கம், சென்னையில் தொடங்கப்பட்டு 750 கிளைகளுடன் கடந்த 5 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றது.**

***சுற்றுப்புறத் தூய்மை, சென்னையை அழகுபடுத்துவது, குடிசைப் பகுதி மக்களுக்குக் கல்வி கற்பித்தல், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி ஆகியவற்றை இந்த இயக்கம் செய்து வருகிறது.***

தமிழக அரசு செயல்படுத்தி வரும், முற்போக்கு நடவடிக்கைகளுக்கும், முயற்சிகளுக்கும், ஆதரவாகத் தங்களை இணைத்துக் கொண்டு, 'எக்ஸ்னோரா' அமைப்புக்கள், சென்னை மாநகர மக்களிடையே, ஒரு Civic Sense-ஐ ஏற்படுத்த முயன்று வருகின்ற நேரத்தில், சென்னை மாநகராட்சி நிர்வாகமும், தமிழக அரசின் முழு உதவியுடன், சென்னை மாநகரத்தை அழகுபடுத்தவும்; சாதாரண ஏழை, எளிய மக்களும் நிம்மதியாக வாழும், ஒரு IDEAL மாநகரமாக, சென்னையை மாற்றிப் பராமரிக்கவும், எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பற்றி, இந்த இடத்தில் குறிப்பிடுவது அவசியம் என்றே நான் கருதுகிறேன்.

**எழில்மிகு சென்னை 2000**

சரித்திரச் சிறப்பு மிக்க சென்னை மாநகரத்தை, அழகுபடுத்தும் நோக்கத்துடன், 'எழில்மிகு சென்னை 2000' என்ற ஒரு திட்டத்தை, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு அறிவித்தேன். 1991-ஆம் ஆண்டு முதல், ஐந்து ஆண்டுகளுக்குள், 1,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர் வடிகால் வசதிகள், கழிவு நீரகற்றும் பணிகள், தங்கு தடையற்ற மின்சார வசதி, அழகிய தெரு விளக்குகள், மழை நீர் வடிகால் வசதி, போக்குவரத்து வசதி போன்ற வளர்ச்சிப் பணிகள், இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின்சார வாரியம் போன்ற பலவேறு அரசு நிறுவனங்கள், இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டிருப்பதை, சென்னை மாநகரப் பெருமக்கள் கண்டு வருகிறார்கள்.

பேருந்துகள் செல்லும் அனைத்துச் சாலைகளிலும், SODIUM VAPOUR விளக்குகளை நிறுவ முடிவு செய்யப்பட்டு, அத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டும் வருகின்றது. சென்னையின் புகழ் மிக்க மெரினா, எலியட்ஸ் கடற்கரைகளிலும், நகரத்தின் முக்கிய சந்திப்புகளிலும், 'HIGH MAST LIGHTS' என்னும் கோபுர மின் விளக்குகள், பொருத்தப்பட்டு வருகின்றன. மாநகரின் முக்கிய பகுதிகளில், பாலங்கள், வணிக வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவை கட்டப்பட்டு வருகின்றன.

# திருவண்ணாமலை தலைமை மருத்துவமனையில் புதிய மருத்துவப் பிரிவு!

**தி**ருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் தலைநகரான திருவண்ணாமலை நகரில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில், 48 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்த 35 இலட்சம் ரூபாய் நிதியினை வழங்கி மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்து உள்ளார்.

திருவண்ணாமலை நகர்வாழ் மக்களின் பெருகி வரும் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அமைக்கப்படும் இந்தப் புதிய மருத்துவப் பிரிவுக் கட்டடம், ஏற்கெனவே உள்ள அரசு மருத்துவமனைக் கூட்டத்தில் முதல் மாடியில் நிறுவப்படும்.

**நான்கு முக்கியப் பணிகள்:**

சென்னையில், இந்த ஆண்டு பெரு மழை பெய்திருந்தாலும், எந்த இடத்திலும் நீர்த்தேக்கம் ஏற்படாததற்குக் காரணம், மழைக் காலத்திற்கு முன்பே, வடிகால் அமைப்புகள் அனைத்தும், சீர் செய்யப்பட்டு விட்டன என்பது பலருக்குத் தெரியாது. சென்னையின் மிக முக்கிய சாலையான அண்ணாசாலையில், நான்கு வழிப் போக்குவரத்துப் பாதை, நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த மேம்பாட்டுப் பணிகளின் ஒரு அங்கமாகவும், தொடக்கமாகவும், சென்ற ஆண்டு, 40 கோடி ரூபாய் செலவில், ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் கட்டி முடிக்கப் பட்டு, தமிழக விளையாட்டுத் துறைக்கு ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும்.

சென்னை மாநகர மேம்பாட்டுப் பணிகளில் ஒன்றாக, அடுத்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள, தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு வசதியாக, சர்வதேசத் தரத்தில் நீச்சல் குளங்களும், புதிய விளையாட்டுத் திடல்களும் அமைக்கப்படவுள்ளன.

இவ்வாறு பலவேறு வளர்ச்சிப் பணிகளையும், மேம்பாட்டுப் பணிகளையும், செயல்படுத்தி முடிக்கும்போது, எழிலார்ந்த சென்னை மாநகரை, நாம் நிச்சயமாகக் காண முடியும். என்னைப் பொறுத்த வரையில், சென்னை மாநகரத்தை எழிலார்ந்த மாநகரமாக ஆக்க வேண்டும் என்றால், நான்கு முக்கிய பணிகளை நாம் உடனடியாக மேற்கொண்டு முடித்தாக வேண்டும்:

1. குடிசைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சீரமைப்பு.
2. சீரிய கழிவு நீர் அகற்றும் முறை.
3. செம்மையான சாலைப் பராமரிப்பு.
4. தீவிரமான மாசுக் கட்டுப்பாட்டுப் பணி.

**நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்!**

'எக்ஸ்னோரா', மிகச் சிறிய அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டு, தற்போது நூற்றுக்கணக்கான கிளைகளைக் கொண்டு, நகரின் பல பகுதிகளில், ஆயிரக்கணக்கானவர்களை, சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்தி, ஆற்றி வருகின்ற சமுதாய நலப் பணிகளுக்கும், மக்களிடையே, குறிப்பாக நமது மாநகர மக்களிடையே, ஏற்படுத்தி வரும் விழிப் புணர்ச்சிக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். மக்களிடையே சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சியை, முழுமையாக ஏற்படுத்த, 'எக்ஸ்னோரா' மேலும் சில பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதன் பணிகளின் எல்லைகள் இன்னும் விரிவடைய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

'எக்ஸ்னோரா' அமைப்பின் மகளிர் பிரிவும், பலவேறு சமுதாயப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு, பணியாற்றி வருகிறது என்பதை அறியும்போது, நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். மகளிர் பிரிவிலுள்ள அனைவருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பாரதி கண்ட புதுமைப் பெண்கள்**

**சமுதாயத்திலுள்ள பெண்கள் அனைவரும், ஏதாவது ஒரு வகையில் சமுதாய நலப் பணிகளில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் போது தான், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோர் கண்ட ஒரு உன்னதமான தமிழகத்தை, பாரதி கண்ட புதுமைப் பெண்களைக் கொண்ட தமிழகத்தை, விரைவில் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை, எனக்குப் பூரணமாக உள்ளது.** மேலும் 'எக்ஸ்



## மகளிர் முன்னேற்றத்தில்...

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதிலும், பெண்ணுரிமைக்கு மரியாதை தருவதிலும், தனக்கென்று ஒரு தனி இடம் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடு.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா - அவர் பங்கயர் கைநலம் பார்த்தல்லவோ இந்தப் பாரினில் அறங்கள் வளருதம்மா" என்று பெண்களின் சிறப்பைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடிப் புகழ்கிறார். சுவாமி விவேகானந்தர், ராஜா ராம்மோகன் ராய், அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா ஆகியோர், பெண் சமத்துவத்திற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள், நமக்கு நடைமுறையில் இன்று பலவேறு வெற்றிகளை ஈட்டித் தந்து கொண்டிருக்கின்றன. —'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.

## சுய வேலைவாய்ப்பளித்திடும் சிறுசேமிப்பு!

வீடும், நாடும் வளர்ந்திட சேமித்து வாழவேண்டும். இந்த கருத்தினை மக்களிடையே பரப்பி, அவர்கள் சேமிக்க உதவிட எஸ்.ஏ.எஸ், பி.பி.எப்., எம்.பி.கே.பி.ஒய்., (பெண் முகவர்கள்) என்று பலவேறு முகவர்களை நியமித்து தமிழ்நாடு அரசு தமிழகம் முழுவதும் 20555 பேருக்கு சுயவேலைவாய்ப்பு அளித்து வருகின்றது. இவர்கள் பணிதான் என்ன? சிறுசேமிப்பு திட்டங்களின் சிறப்பினை பல்வேறு தரப்பட்ட மக்களிடம் கூறி, அவர்களிடம் முதலீடுகளைப் பெற்று அஞ்சலகங்களில் செலுத்தி அதற்கான பத்திரங்களை பெற்று தருவதுதான். இந்த பணிக்காக மத்திய அரசு குறிப்பிட்ட திட்டங்களுக்கு 1 சதவிகித் தரகுத்தொகை முகவர்களுக்கு தருகின்றது. தமிழ்நாடு அரசு தன் பங்காக கூடுதலாக 1 சதவிகித ஊக்கத்தொகை அளிக்கின்றது. தாங்கள் வசூல் செய்யும் முதலீட்டிற்காக 2 சதவிகித தரகு மற்றும் ஊக்கத் தொகையினைப் பெறும் முகவர்களுக்கு, இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தின் மூலம் ஸ்கூட்டர் முதலான பல்வேறு பரிசுகளும், மாவட்ட அளவிலான பரிசுகளும் வழங்கப்படுகின்றது. எம்.பி.கே.பி.ஒய் பெண் முகவர் ரூ.25,000 வசூல் செய்தால் 4 சதவிகிதமும் ரூ.25,000-க்கு மேல் வசூலுக்காக 5 சதவிகிதமும் தரகுத் தொகையும் மேலும் தரகுத் தொகையுடன், பாதி அளவிற்கான தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையும் பெறுகின்றார்கள். சிறுசேமிப்புத் துறை, முகவர்கள் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி ஆலோசனைகள் வழங்கியும் வருகின்றது.

னோரா' போன்ற சமுதாய நல இயக்கங்கள், பெரிய மாநகரங்களில் மட்டும் செயல்படாமல், சிறிய நகரங்களிலும் உருவாக வேண்டும், முனைப்போடு செயல்பட வேண்டும் என்ற எனது எதிர்பார்ப்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உயர்ந்த இலட்சியம் அடைய...**

'எக்ஸ்னோரா' அமைப்பின் நிறுவனத் தலைவர், திரு. M.B. நிர்மல் அவர்கள், வங்கி ஒன்றில் பணியாற்றிக் கொண்டே, சென்னை மாநகரின் நடுத்தர வர்க்கத்து மக்களிடையே, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மற்றும் தூய்மைக் கேடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, உன்னத சமுதாயப் பணி ஆற்றி வருகிறார். அவர் நமது அனைவரின் பாராட்டுதல்களுக்கும், வாழ்த்துக்களுக்கும் உரியவர் ஆவார். வயதில் சிறியவரானாலும், அவர் வெறும் வாய்ச் சொல் வீரர் அல்ல, ஒரு உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்காக, ஒரு இயக்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்தி வருகிறார்.

'எக்ஸ்னோரா' அமைப்பின் சார்பில், சென்னை மாநகரத்தின் மேம்பாட்டிற்கான, யோசனைகள் அடங்கிய புத்தகம் ஒன்று, என்னிடம் சற்று முன்பு வழங்கப் பட்டது. அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களைப் பரிசீலனை செய்து, அவற்றை முடிந்த வரை செயல் படுத்துவோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழல் தொடர்பான விழிப்புணர்வை, மகளிரிடையேயும், மாணவ, மாணவியரிடையேயும் ஏற்படுத்துவதற்கு, 'எக்ஸ்னோரா' முயற்சி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, இந்த விழா 'எக்ஸ்னோரா' இயக்கத்தின் வளர்ச்சிக்கு, மேலும் வழி வகுக்கும் என்ற, எனது எண்ணத்தினைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாண்புமிகு முதல்வருக்கு 'எக்ஸ்னோரா' பாராட்டு

அமைதிக் காலத்தை விட, போர்க் காலத்தில் தான் ஒரு தளபதியின் திறமை அளவிடப்படும். அதேபோல பிரச்சினைகள் சூழும்போது அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வதில் தான் ஒரு அரசின் திறமை அங்கீகரிக்கப்படும். சென்ற ஆண்டு குடிநீர்ப் பிரச்சினை உருவெடுத்து உயிர்ப் பிரச்சினையாக உலுக்கியபோது - சென்னை நகரை நகரத்துக்கு நீர் தரும் ஏரிகள் அனைத்தும் வற்றிய நிலையில் மக்கள் தண்ணீருக்காகக் கண்ணீர் விட்டபோது எங்கிருந்தெல்லாம் கொண்டுவர முடியுமோ அங்கிருந்தெல்லாம் தண்ணீர் கொண்டு வந்து எப்படியெல்லாம் தண்ணீர் விநியோகிக்க முடியுமோ அப்படியெல்லாம் விநியோகித்து, சென்னையின் போக்குவரத்தையே தண்ணீர் லாரிகளும், டாங்கர்களும் ஆக்ரமித்துக் கொண்டு விட்டனவோ என்று எண்ணுகின்ற வகையில் பிரச்சினையை வெற்றிகரமாகச் சமாளித்தீர்கள். அந்த முயற்சிக்காக, தண்ணீர் ராசி பெற்றிருக்கும் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே! தங்களை, இந்த நேரத்தில்! 'எக்ஸ்னோரா இன்டர்நேஷனல்' இதய பூர்வமாகப் பாராட்டி மகிழ்கிறது.



## ரூ.400 கோடி செலவில்

# புதிய வீராணம் திட்டம்

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, 'எக்ஸ்னோரா' அமைப்பின் மகளிர்ப் பிரிவின் சார்பில் பாராட்டு விழா நடந்தது. அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றும் போது தெரிவித்ததாவது:

இங்கே பேசிய நிர்மல் அவர்கள் அண்ணா சாலையில் கூவம் கரையோரமாக, சர்வீஸ் பாதை போடும் திட்டம் குறித்துக் குறிப்பிட்டார். அதை அரசு பரிசீலிக்கும்.

இந்த மேடையில் சகோதரி மனோரமா பேசிவிட்டு அமர்ந்திருக்கிறார். 'எக்ஸ்னோரா'வில் ஒரு பிரிவிற்குத் தலைமையேற்று செயல்படுகிறார். அவர் இங்கே பேசிவிட்டு அமர்ந்திருப்பதைப் பார்க்கும் போது எனக்கு எவ்வளவோ பெருமையாக இருக்கிறது. காரணம் சமீபகாலமாக திரைப்படக் கலைஞர்கள் ஏதோ சமுதாயத்தை ஒட்டி உறவாடாமல் விலகியிருப்பதைப் போல இருக்கிறார்கள். ''அய்வரி டவரில்'' இருப்பது போலக் கருதுகிறார்கள். இதை மாற்றிக் காட்டியவர்கள் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். திரைப்படக் கலைஞர்களும், நடிகர் நடிகைகளும் நாட்டுப்பற்றில் அக்கறை காட்ட வேண்டுமென்று உணர்த்தியவர் புரட்சித்தலைவர் அவர்கள்தான்.

அதே சமயம் சிலர்கூட தவறான எண்ணத்துடன் இருக்கிறார்கள். கலைஞர்கள் அரசியலில் ஈடுபட்டால் தான் சமுதாயச் சேவை செய்ய முடியும் என்று கருதுகிறார்கள். அரசியலில் இல்லாமலேயே கலைப்பணியும் செய்து கொண்டு, நாட்டு மக்களுக்காகவும் உழைக்கவும், தொண்டாற்றவும் முடியும் என்று சகோதரி மனோரமா அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அவரைப் பார்க்கும்போது எனக்கு ஏற்படும் பெரு மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

**பெண்கள் சொந்தக்காலில் நிற்க வேண்டும்**

மனோரமாவைப் போல மகளிருக்கு எடுத்துக்காட்டாக அனைவரும் முன்வர வேண்டும். எத்தனையோ பேர் வாய் கிழியப் பேசலாம். ஆனால் என் மனதில் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை ஒன்று இருக்கிறது. பெண்கள் தங்கள் வாழ்க்கையில் எவரையும் சாராமல், சொந்தக் காலில் நிற்க . வேண்டுமென்பதுதான். இதற்காக நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பல திட்டங்களைப் பெண்களுக்காக அறிமுகம் செய்துள்ளேன். அவைகள் எல்லாமே முக்கியத்துவம் பெற்றதுதான். ஆனாலும் அதில் நான் மிகவும் நேசிக்கும் திட்டம். ஒரு இலட்சம் பெண்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி தந்த திட்டம்தான்.

அவர்கள் சுயமாகத் தொழில் பயிற்சி பெற்று, மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, சொந்தக் காலில் நிற்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது.

காலம் காலமாக ஒரு எண்ணம் நம்மிடையே இருக்கிறது. நிறைய ஆண் பிள்ளைகள் பிறந்தால் நல்லது. அவர்கள் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற எண்ணம் சிலருக்கு இருக்கிறது. அதற்காக ஆண் பிறக்கும் வரை பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டேயிருப்பார்கள். அதற்காகத்தான் ''குடும்பக் கட்டுப்பாடு திட்டம்'' கொண்டு வரப்பட்டுள்ளது. குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் இல்லாவிட்டால் நாடு முன்னேறாது. குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில், தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்ற பெருமை தமிழகத்திற்கு உள்ளது.

**பெண் குறைந்தவளா?**

ஒரு பெண் ஒரு ஆணுக்குக் குறைந்தவள் அல்ல. பெண் பிறந்தால் அந்தச் சிசுவைக் கொல்லும் பழக்கம் சில இடங்களில் இருந்தது. இதற்காகத் தொட்டில் குழந்தைகள் திட்டத்தை அறிமுகம் செய்தேன். அப்படிப்பட்ட பெண் குழந்தைகளை அந்தத் தாய்மார்கள், சமூக



# சாதனைச் சரித்திரம் படைக்கும் திட்டம்

பெண்கள் முன்னேற்றத் திட்டங்களுக்கு எல்லாம் மகுடம் வைத்தது போல, ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுயவேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை நாங்கள் அறிவித்து இருக்கின்றோம்.

இதன்மூலம் கிராமங்களிலும், நகரங்களிலும் வசிக்கும் ஏழைப் பெண்கள், தாங்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப ஒரு தொழிலைத் தேர்வு செய்து, அதன் மூலம் சுயவேலைவாய்ப்புப் பெற அரசு உதவி செய்கிறது. "தனிமரம் தோப்பு ஆகாது" என்ற பழமொழிக்கிணங்க, பெண்கள் ஒன்று சேர்ந்தால் அவர்களின் பலம் பன்மடங்காகும். அதன் பயன் இந்த மாநிலத்தை வாழ வைக்கும் என்பது, நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு, கல்வியறிவும், அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை. பெண்களை முழுவதும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக மாற்ற, அறிவொளி இயக்கத்தை இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, ஒருபுறம் திருமண உதவி, மகப்பேறுகால உதவி, இலவச சேவை போன்றவற்றை வழங்குவதோடு, மற்றொருபுறம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளையும் இந்த அரசு உருவாக்கித் தந்து வருகிறது.

ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எங்களின் இந்த உன்னத முயற்சி, தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்று நம்புகிறேன்.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.

நலத்துறை வைத்துள்ள தொட்டிலில் கொண்டு வந்து போட்டு விட்டால், அதை அரசு தத்து எடுத்துக் கொள்கிறது. அந்தக் குழந்தையின் பெயரில் ரூ.5,000-க்கு வைப்பு நிதி வைக்கப்படுகிறது. அந்தக் குழந்தை வளர்ச்சிக்காக மாதந்தோறும் சிறு தொகை ஒதுக்கப்படுகிறது. அந்தப் பெண் 21 வயது அடைந்ததும், ரூ.20 ஆயிரமாக வழங்கப்படும். அந்தப் பெண் விரும்பினால் ஒரு தொழிலைச் சுயமாகச் செய்யலாம். அல்லது திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் அரசின் கடமை அதோடு நின்று விடாமல், அந்தப் பெண்ணுக்கு நல்ல வாழ்வு அளிக்க நல்ல கணவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பையும் அரசு ஏற்கிறது.

### ரூ.5,000 வைப்பு நிதித் திட்டம்

இன்னொரு திட்டம் ஒன்று அல்லது இரண்டு பெண்குழந்தைகளை மட்டுமே பெற்று ஆண் குழந்தை இல்லாமல், குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால் ரூ.5,000 வைப்பு நிதி வைக்கப்படுகிறது. அதன் முதல் பிறந்தநாளில் ரூ.800 மதிப்புள்ள மோதிரம் வழங்கப்படும். அதன்பிறகு படிப்பிற்காக சிறு தொகை அவ்வப்போது வழங்கப்படும். அந்தப் பெண் 21 வயதான பிறகு, 20,000 ரூபாய் வழங்கப்படும். விரும்பினால் தொழில் செய்யலாம். இல்லாவிட்டால் திருமணம் செய்து கொள்ளலாம். இப்படிப் பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இதில் அனைத்திலும் இழையோடும் கொள்கை, "பெண் சுயமாகத் தன் காலில் நிற்க வேண்டும்" என்பதுதான்.

### அமைச்சர்களுக்குப் பாராட்டு

ஒரு பெண் திருமணம் செய்து கொள்கிறாள் என்றால் பிள்ளைகளைப் பெற்று, குடும்பம் நடத்துவதற்காகத்தான். ஆனால் அவள், தன் காலில் நிற்க வேண்டும் என்பதுதான் முக்கியம். ஆண்களைச் சார்ந்து நிற்கக் கூடாது. ஆண்கள் எப்படி திருமணம் என்றால், குடும்பம் நடத்துவது, குழந்தைகள் பெற்றுக் கொள்வது என்பதுபோலத் தான் பெண்களும் திருமணம் செய்து கொள்வது ஆகும். இப்படி நான் சொல்வதால், ஆண்கள் இதைத் தவறாக நினைக்கக் கூடாது. ஆண்களோடு பெண்களும் சரி நிகர்ச் சமானம் என்பதால் தான் இதைச் சொல்கிறேன். குடும்பம் என்றால், ஆண்கள் எப்படி நினைக்கிறார்களோ, பெண்களும் அதற்காகத் தான் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

### மனநிறைவாக இருக்கிறது

இங்கே பேசிய நிர்மல் எங்கள் மந்திரிகளைப் பாராட்டினார். எனக்கு அது மனநிறைவாக இருந்தது. எவ்வளவோ கஷ்டப்பட்டு நாங்கள் செயல்படும்போது, அதிலுள்ள நிறைகளைப் பற்றிக் கூறாமல், குறைகளைப் பற்றியே சிலர் கூறுகிறார்கள். நாங்கள் மனிதர்கள்தான், இங்கே நிர்மல் பாராட்டியது மன நிறைவாக உள்ளது.

அமைச்சர் மதுசூதனன் இரவெல்லாம் தூங்காமல், நாள் கணக்கில் சென்னை நகரில் தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பாடுபட்டிருக்கிறார். கடந்த ஆண்டில் ஏற்பட்ட மிக மோசமான குடிநீர்ப் பற்றாக்குறை, மீண்டும் ஏற்படக் கூடாது என்று கருதுகிறோம். நெய்வேலியில் இருந்து லாரிகளில் தண்ணீர் கொண்டு வந்தது குறித்து நிர்மல் கூறினார். லாரிகளில் மட்டுமல்ல, இரயிலிலும் தண்ணீர் கொண்டு வந்தோம்.

குடிநீர்த் தட்டுப்பாட்டை எப்படியோ சமாளித்தோம். இயற்கை அன்னை கண் திறந்தாள். பெரு மழை பெய்தது. குடிநீர் ஏரிகள் நிறைந்துள்ளன. பழைய நிலைமை ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான் புதிய வீராணம் திட்டத்தை அறிவித்துள்ளோம். கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995 இறுதிக்குள், சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர் வந்து விடும் என்று ஆந்திர முதல்வர் கூறியிருக்கிறார்.

இந்தத் திட்டத்திற்கு ரூ.2000 கோடி வரை செலவாகும். விநியோக அமைப்பை, நாம் சீரமைத்து வருகிறோம். சென்னை நகரில் உள்ள மக்களுக்காக பாதுகாப்பாக இன்னொரு திட்டமும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் புதிய வீராணம் திட்டத்தை அறிவித்துள்ளோம். இந்தத் திட்டம் சாதாரணமானது அல்ல. 800 கோடி ரூபாய் செலவு பிடிக்கும் திட்டம். உலக வங்கியின் மதிப்பீடுகளெல்லாம் முடிவடைந்து, வரும் மே மாதத்தில் ஆய்வுப் பணிகள் முடிந்து, பணி தொடங்கும். 1995 இறுதிக்குள் இந்தத் திட்டம் நிறைவேறி, சென்னை நகருக்குப் புதிய வீராணம் திட்டத்தின் மூலம் 40 மில்லியன் காலன் தண்ணீர் கிடைக்கும்.

கிருஷ்ணா நதி நீர்த்திட்டம், சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் 3 ஏரிகளில் உள்ள தண்ணீர் ஆகியவையோடு, இது கூடுதலாக இருக்கும்.

# சமூகத் தொண்டு நிறுவனம் சாதனைக்கு வழங்கிய மாபெரும் பாராட்டு!

'எக்ஸ்னோரா' அமைப்பின் மகளிர்ப் பிரிவின் சார்பில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குப் பாராட்டு விழா, 19.2.94 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது.

விழாவினையொட்டி, கலைவாணர் அரங்கம் மின்விளக்குகளாலும், விழா மேடை மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மகளிர்ப் பிரிவின் தலைவி திருமதி சுலோச்சனா ராமசேஷன் அனைவரையும் வரவேற்றார்.

திரைப்பட நகைச்சுவை நடிகை திருமதி மனோரமா அவர்கள் பேசுகையில், 'சந்தியா பெற்றெடுத்த சந்தனச் சிலையே, 'புரட்சித் தலைவியே' என்று தொடங்கி, ஆயுள் உள்ளவரை இந்தத் தமிழகத்தை நீங்கள் ஆளவேண்டும் என்றும், மேலை நாட்டைப் போன்று முதல்வர் தமிழகத்தை உருவாக்கி வருகிறார் என்றும், நீண்ட நெடுநாள் நீடூழி வாழ வேண்டும் என்றும் தம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

விழாவுக்குத் தலைமை வகித்த இந்த அமைப்பின் நிறுவனரும், தலைவருமான திரு. எம்.பி. நிர்மல் அவர்கள் பேசுகையில், ''தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்த புரட்சித்தலைவியைப் பாராட்டுகிறோம். புரட்சித்தலைவியைப் பாராட்டுவது, எக்ஸ்னோராவுக்குப் பெருமை'' என்றார்.

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், ''புரட்சித் தலைவி ஆட்சியின் வெற்றிகளுக்குக் காரணம், கோவில் பராமரிப்புப் பணி. இறைவன் நம்பிக்கை புரட்சித்தலைவியின் பக்கம் ஆண்டவன் இருக்கிறான். புரட்சித் தலைவி ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு கோவில்கள் பராமரிக்கப்படுகின்றன. ஆலயங்கள், மசூதிகள், கிறிஸ்தவக் கோவில்கள் புதுப்பிக்கப்படுகின்றன'' என்றார்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில், ''புரட்சித் தலைவியின் ஆதரவும் அன்பும் இந்த அமைப்புக்குக் கிடைத்திருப்பது சிறந்த வலிமையாகும், நல்ல சமிக்ஞை ஆகும்'' என்றார்.

பிறகு, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரை ஆற்றி, சிறப்பாகத் தொண்டாற்றியவர்களுக்குப் பரிசு வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டி, டாக்டர் காந்திமதி அவர்கள் வாழ்த்துக் கவிதை படித்தார்.

திரு. டி.கே. ராம்குமார் அவர்கள் திட்ட அறிக்கையையும், திரு. வி.என். சுப்பிரமணியன் அவர்கள் சென்னை மாநகரை மேம்படுத்தும் யோசனைகள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்கள். எக்ஸ்னோராவின் அடையாறு கிளையின் தலைவி திருமதி பத்மா நரசிம்மன் அவர்கள், இந்த அமைப்பு குறித்த திட்ட அறிக்கை ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, இந்த அமைப்பின் தலைவர் திரு. எம்.பி. நிர்மல் அவர்கள் கண்ணாடிப் பேழையில் வைக்கப்பெற்ற வெள்ளிக் குத்து விளக்கை நினைவுப் பரிசாக வழங்கினார்.

வருகிற 24-ந்தேதி, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா, தமிழகமெங்கும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அதற்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில், அனைவரும் எழுந்து நின்று பலத்த கரவொலி எழுப்பினர்.

திரு. வி. மோகன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். திரு. வி. சுபாஷ் சந்திரன் நன்றி நவின்றார்.

அன்றைய விழா, மாண்புமிகு முதல்வர் அவர்களின் சாதனைகளைக் கோடிட்டுக் காட்டும் எழில்மிகு திருவிழாவாக விளங்கியது என்றால் அது மிகையல்ல!

—பி.வி.கிரி



• பெருந்தன்மையோடு கூடிய பொதுவாழ்வு வெற்றியையன்றி வேறெதையும் தந்திடாது.

நல்ல எண்ணங்களைத் தூவினால்தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.



## தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படைத் தாக்குதல்:

### மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வினை ஏற்படுத்தித் தருக!

### மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் கோரிக்கை!

இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய இரு மாவட்டங்களுக்கும் சேர்த்து, 218 கோடி ரூபாய் செலவில், திட்டங் களைத் துவக்கி வைத்து, பல திட்டங் களுக்கு அடிக்கல் நாட்டி, இன் றைக்கு இராமநாதபுரத்தில் நடை பெற்றுக் கொண்டிருக்கும், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, பெருந்திரளாகக் கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதில், நான் மிக்க மகிழ்ச்சியும் பேருவகை யும் அடைகின்றேன். குறிப்பாக, நான் தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முதன்முதலாக வருகை தந்து, எனது அன்பிற்குரிய உங்கள் அனைவரை யும் சந்திப்பது, எனக்கு மிக்க மன நிறைவை அளிக்கின்றது.

**வீரத்தின் விளைநிலம்**

இந்த மாவட்டம் வீரத்தின் விளை நிலம்; வெற்றியின் உறை விடம்; விவேகத்தின் இருப்பிடம். சமுத்திரத்தின் கரையில் தவழும் இந்த மாவட்டம், சரித்திரத்தின் வரிகளில் இன்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இதி காசச் சிறப்பு, அனைத்தும் நிறைந்த இம்மாவட்ட மக்களின் பேராண்மை, இன்றும் போற்றிப் புகழப்படும் பெருமை உடையது. சங்கத் தமிழை யும், அழியாத ஆன்மீகத்தையும், கண்ணெனப் போற்றிக் காத்த வர்கள், இந்தப் புண்ணியப் பூமியை ஆண்ட சேதுபதி மன்னர்கள். இம்மாவட்டத்தில் அமைந்துள்ள கோபுரங்களும், மசூதிகளும், தேவால யங்களும், சேதுபதி மன்னர்களின் சரித்திரச் சிறப்புகளுக்கு, சான்றாக, சின்னங்களாக இருந்து வருகின்றன.

வீரம் விளைந்த மறவர் சீமை, இந்த மண். முதல் சுதந்திரப் போர் என்று, சரித்திரச் சிறப்பு பெற்ற, சிப்பாய்க் கலகத்திற்கு முன்பே, 1795-இல் Rebel முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி, ஆங்கிலே யரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, முதல் குரல் கொடுத்தார்; வீரத் துடன் எதிர்த்தார்; ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு, பல ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்



**இராமநாதபுரம் மாவட்டம், பசும் பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் அரசு திட்டப் பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கு விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை (17.2.1994).**

பட்டார். ஆனாலும் இறுதி வரை, நெஞ்சுறுதியுடன் போராடினார். ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று, முதல் குரல் கொடுத்த முத்துராமலிங்க சேதுபதியை, நமக்கு அளித்த பெருமை படைத்த பூமி, இராமநாதபுரம்.

**கண்கொள்ளாக் காட்சி**

வீரத்தில் மட்டும் அல்ல; விவேகத்திலும் குறைந்தவர்கள் அல்ல சேதுபதிகள், என்பதை நிரூபித்துக் காட்டியவர், மன்னர் பாஸ்கர சேதுபதி. 1891-ஆம் ஆண்டு, அமெரிக்க நாட்டில், சிகாகோ நகரத்தில் நடைபெற்ற, அனைத்து உலகச் சமயப் பேரவையில், இந்தியத் திருநாட்டின் பண்பாட்டையும், இந்து சமயச் சிறப்பையும், அகில உலகமும் அறிய வேண்டும் என்பதற்காக, இளந்துறவி சுவாமி விவேகானந்தரை, தனது சொந்தச் செலவில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்து, நம் நெஞ்சங்களில் எல்லாம் நீங்கா இடம் பெற்றவர், மன்னர் பாஸ்கர சேதுபதி. அதோடு மட்டுமல்லாமல், தமிழையும் ஆராதனை செய்தவர்கள், இந்த மன்னர்கள். 1901-இல், நான்காவது தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நடத்த, வள்ளல் பாண்டித்துரைத் தேவர், அனைத்து உதவிகளையும் வழங்கியது, வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி ஆகும்.

உலகிலேயே மிகப் பெரிய கோயில் பிரகாரத்தைக் கொண்டது, இராமேஸ்வரம் திருத்தலம், தொன்மை வாய்ந்த, இந்த புராதனத் திருக்கோயிலின் சிறப்புகளை, உலகமே நன்கு அறியும்.

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள ஏர்வாடி தர்கா, மத நல்லிணக்கத்திற்கு ஒரு சின்னமாக விளங்குகின்றது. அரேபியாவிலிருந்து கண்ணனூர் வழியாக, சுல்தான் இப்ராஹீம் வந்து சேர்ந்தார். அவரது தர்கா கட்டப்பட்டு, 800 ஆண்டுகளுக்கும் மேல் ஆகின்றது. ஆண்டுதோறும் இங்கே கொண்டாடப்படும், 'சந்தனக் கூடு விழாவில்' அனைத்துச் சமயத்தவரும் கலந்து கொண்டு, சகோதர மனப்பான்மையுடன் கூடி மகிழ்வது, கண்கொள்ளாக் காட்சியாகும்.

**அன்னை சந்தியா சத்துணவுக் கூடம்**

இத்தனைச் சிறப்புகள் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் எனக்குப் புதிய இடம் அல்ல. என்னை ஆளாக்கி விட்ட, என் அன்னைத் தமிழகத்துக்கும், என் அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களுக்கும், என் வாழ் நாள் முழுவதும் தொண்டாற்றி, நன்றிக் கடன் செலுத்த வேண்டும் என்று நான் முடிவெடுத்து, எனது அரசியல் ஆசான், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கண்ட, மகத்தான மக்கள் இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டு, மக்கட் பணி, புரியத் தொடங்கிய நாள் முதல், நான் பல முறை இராமநாதபுரத்துக்கு, பல்வேறு தருணங்களில் வந்து சென்றுள்ளதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். என்னைப் பொறுத்தவரை, ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு முறை, இதே இராமநாதபுரம் மாவட்டத்துக்கு நான் வந்து சென்றது, என் நெஞ்சில் இன்றும் பசுமையாக உள்ளது. 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி அன்று, இதே மாவட்டத்தைச் சேர்ந்த தேவிப்பட்டினத்தில், நான் அனுதினமும் வணங்கும் எனது தாயாரின் நினைவாக, தேவிப் பட்டினம் வாழ் குழந்தைகளுக்காக, எனது சொந்தச் செலவில், 'அன்னை சந்தியா சத்துணவுக் கூடம்' என்ற சத்துணவுக் கூடத்தினை நான் துவக்கி வைத்தது, என் நெஞ்சில் இன்றும் பசுமையாக உள்ளது, இம்மாவட்டத்து மழலைச் செல்வங்களுடன், ஒன்றாய்க் கூடி உணவருந்தி மகிழும் நல்வாய்ப்பினை, இந்த மாவட்டம் எனக்கு அன்றைய தினம் வழங்கியதை, நான் இன்று அன்போடு நினைவு கூர்கிறேன்.

அதன் பின்னர், தேர்தல் பணியின் பொருட்டும், இயக்கப் பணி

களுக்காகவும், இம்மாவட்டத்திற்குப் பல முறை நான் வந்து, உங்கள் அனைவருடைய அன்பு மழையிலும் நனைந்திருக்கின்றேன். அப்படி, நான் ஒவ்வொரு முறையும், இந்தப் பகுதிக்கு வருகை தந்த போதெல்லாம், தங்கள் வீட்டுப் பிள்ளையை வரவேற்பது போல, நீங்கள் உள்ளார்ந்த அன்போடு, என்னை வரவேற்று மகிழ்ந்திருக்கிறீர்கள். அன்று போலவே, அதே பாச உணர்வை, இன்றும் நீங்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை, உங்களுடைய உணர்ச்சி பொங்கும் முகங்கள், எனக்குத் தெள்ளத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருக்கின்றன. 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்றார் திருவள்ளுவர். இராமநாதபுரம் தந்த நான், இன்று இம்மாவட்டத்து மக்கள், அனைவரும் நலம் பெறும் வண்ணம், 165 கோடி ரூபாய்க்கான அரசுத் திட்டங்களை, எனது அன்புக் காணிக்கையாக உங்களுக்கு வழங்க வந்துள்ளேன்.

தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் விரைந்து கொண்டு செல்ல, உங்கள் அரசு எடுத்து வரும், பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை, பாராட்ட மனம் இல்லாவிட்டாலும், மக்களுடைய முன்னேற்றத்திற்குத் துணை புரிகின்ற திட்டங்களுக்கும், ஊறு விளைவிக்கின்ற வகையில், மக்கள் நலன் நாடாத சிலர், தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருப்பது, எனக்கு வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கின்றது. கட்சி ரீதியான மனமாச்சரியங்களையும், குறுகிய ஆற்றாமையை வெளிப்படுத்தி, குந்தகம் விளைவிக்க, மக்கள் நல்வாழ்வுப் பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் தானா தேர்ந்தெடுக்க வேண்டும்?

எதை எதிர்ப்பது, எதை ஆதரிப்பது, என்ற அடிப்படை அரசியல் நாகரிகத்தினைக் கூட பின்பற்றாமல், அரசின் அனைத்துச் செயல்பாடுகளையும், தேவையின்றி எதிர்ப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருபவர்களுக்கு, மக்கள் மேல் எத்தகைய பற்று உள்ளது, மக்கள் நலப் பணிகளைச் செயல்படுத்துவதில், எத்தகைய ஆர்வம் உள்ளது என்பதை, மக்கள் தான், நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். தமிழக மக்கள் நல்லவர்கள், வல்லவர்கள். ஆம்! நல்லவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை வழங்குவதிலும் வல்லவர்கள். தங்களுக்குத் தேவையான அரசைத் தேர்ந்தெடுப்பதிலும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் செயல்பாடுகளை எடை போடுவதிலும், தமிழக மக்கள் நடுநிலை தவறாதவர்கள். எங்கள் அரசின் செயல்பாடுகளை, முழுமையாக ஆதரிக்கும் வண்ணமும், மக்கள் விரோதச் சக்திகளை, முற்றிலும் புறக்கணிக்கும் வண்ணமும், கடந்த இரண்டு இடைத் தேர்தல்களிலும், மக்கள் தங்களுக்குக் கிடைத்த இரு வேறு வாய்ப்புகளில், தங்கள் அரசியல் முடிவுகளை, தெளிவாகவே தெரிவித்திருந்தார்கள். எனது அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களின், தன்னிகரில்லாத் தீர்ப்புக்குத் தலை வணங்கி, போற்றுதல்களுக்கும், புகழுரைக்கும் மயங்காமலும்; தூற்றுபவர்களையும், துயர் விளைவிப்பவர்களையும் பொருட்படுத்தாமலும் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கும், உங்களுக்காகப் பணியாற்றுவதையே, முழு முதற் கடமையாக்கொண்டு, நானும் எனது சக அமைச்சர்களும் செயல்பட்டு வருகின்றோம்.



வாழ் மக்கள், என் மீது கொண்டிருக்கும், 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்று கூறும் வண்ணம், உங்களுடைய ஈடு இணையற்ற பாசத்திற்கும், அளவிட முடியாத நேசத்திற்கும், நான் எனது உளப்பூர்வமான நன்றியினை, உங்கள் அனைவருக்கும், இந்த விழாவின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**அன்புக் காணிக்கை**

பத்தாண்டுகளுக்கு முன்னர், 'தேவிப் பட்டினம்' மக்களுக்கு, எனது சொந்தச் செலவில் சத்துணவுக் கூடத்தினை ஏற்படுத்தித்

**இரண்டு பிரச்சினைகள்**

இந்த மாவட்டத்தில் இரண்டு

பிரச்சினைகள், எப்போதுமே என் மனதை உறுத்திக் கொண்டு இருக் கின்றன. ஒன்று, இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், குடிநீர் கிடைக்காமல் தவிக்கும் மக்களுக்கு, நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என்கின்ற ஓர் ஆதங்கம். இன்னொன்று, ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும், மீனவப் பெரு மக்கள், யாருடைய அச்சுறுத்தல் களும், தொல்லைகளும் இன்றி, நிம்மதியாக மீன் பிடித்து, அமைதி யாகத் தொழில் புரிவதற்கு, உகந்த சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கு, இலங்கைக் கப்பற் படையினர் தாக்குதல்களையும், அத்துமீறல்களை யும், கட்டுப்படுத்த வேண்டும் என்பது மற்றொன்று.

பணியை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

கடலோர மாவட்டமாக விளங் கும், இம்மாவட்டத்தின் தன்மை யைக் கருதி, நரிப்பையூரில் 10 கோடி ரூபாய் மதிப்பில், கடல் நீரைக் குடிநீர் ஆக்குகின்ற திட்டத் திற்கு, இன்ற நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்த மாவட்டத்து மக்களுக்கு, எந்த வகையிலாவது நல்ல குடிநீரை வழங்க வேண்டும், என்கின்ற எங்கள் உறுதியின் வெளிப்பாடு தான், கடல் நீரை நன்னீராக்கும், இந்தப் புரட்சி கரமான திட்டம். நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டு, செயல் படுத்தப்படும் இத்திட்டம், எதிர் காலத்தில் மிகப் பெரிய அளவில்,

இம்மாநில மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, பாடு படுவோம் என்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

**மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு:**

ஆழ்கடலில் சென்று மீன் பிடித்து, தங்கள் வாழ்க்கையைப் பல்வேறு இன்னல்களுக்கும், இடை யூறுகளுக்கும் இடையே தளராத மனதோடு நடத்தி வரும் என் அன்பிற்குரிய மீனவப் பெருமக்கள், ஆழ் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது, இலங்கை கப்பற்படையின ரின் திடீர் தாக்குதல்களுக்கு ஆளாகி, தங்கள் உயிரையும், உடைமைகளை யும் இழக்க நேரிடும் போது, மிகுந்த மன வேதனையுடன், இந்த விரும்பத் தகாத நிகழ்ச்சிகளுக்கு, ஒரு முற்றுப்



கடந்த 2½ ஆண்டுகளாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங் களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்துள்ளோம். 4½ கோடி ரூபாய் செலவில், 270-க்கும் மேற் பட்ட கிராமங்கள் பயன் பெறும் வகையில், பல திட்டங்களைச் சற்று முன், நான் துவக்கி வைத் துள்ளேன். ஒரு குடம் குடிநீருக் காகப் பல-மைல் தூரம், எனது அன்பிற்குரிய தாய்மார்களும் சகோதரிகளும் நடந்து சென்று, அல்லல்படுகின்ற ஒரு நிலைமையை நிரந்தரமாக மாற்றி அமைக்க, உங்கள் சகோதரி ஆற்றி வரும்

விரிவாக்கம் செய்யப்பட்டு, நிலத் தடி நீர் கிடைக்காத கடலோர கிராமங்களுக்கெல்லாம், நல்ல குடிநீரை வழங்குகின்ற ஒரு நிலையை உண்டாக்கும், என்று உறுதியாக நம்புகிறேன்.

இத்தகைய குடிநீர்த் திட்டங் களை, சூரிய வெப்பச் சக்தியைக் கொண்டு இயக்குவதற்கு, பல நிறுவனங்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றன. முறை சாரா எரி சக்தியைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்வதில், மற்ற மாநிலங் களுக்கு முன்னோடியாக விளங்கு கின்ற நாம், நிச்சயமாக சூரிய வெப்பச் சக்தியைப் பயன்படுத்தி,

புள்ளி வைக்க வேண்டும் என்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசம்மராவ் அவர்களுக்கு, கடிதம் எழுதியும், பின்னர் நேரி லும், எனது ஆழ்ந்த மனத் தாங் களைத் தெரிவித்துள்ளேன். நமது மீனவர்கள் மீது தாக்குதல்கள் நடைபெறும் போதெல்லாம், அகில இந்திய அளவில், அனைவரின் கவனத்திற்கும் அதைக் கொண்டு சென்று, மத்திய அரசை வற்புத்திய காரணத்தால்தான், இன்று இலங்கை அரசும் மத்திய அரசும், மாநில அரசின் துணையுடன், ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும், தமிழக மீனவர்களின் உரிமையை நிலை



நாட்டவும், அவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கவும், ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்த வழி வகுத்துள்ளது. வெறும் எழுத்துக்களால் ஆன ஒப்பந்தத்தையும், வார்த்தைகளால் ஆன ஆறுதல்களையும், நாம் எதிர்பார்க்கவில்லை. மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையாக உள்ள இந்தப் பிரச்சினைக்கு, நல்லதொரு தீர்வினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று, மீண்டும் இந்தத் தருணத்தில் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்**

ஒருப்புறம் மீனவ மக்களின் உயிருக்கும் உடமைக்கும், பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுத்துள்ள, உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு, உங்கள் அரசு, மீனவ மக்களின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்காக, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இராமேஸ்வரத்தில் அப்பகுதி வாழ் மீனவ மக்களின் நலன் கருதி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ............... Bunk ஒன்றை விரைவில் திறக்க உள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமின்றி, நாட்டுப் படகுகள் வைத்திருக்கும், இப்பகுதி வாழ் மீனவர்களுக்கு, மின் விசைப் படகுகள், மீன் பிடி வலைகள், இன்ஜின்கள் ஆகியவை, 3 கோடி ரூபாய் மதிப்பில், வழங்குகின்ற திட்டத்தையும் இன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.

ஒரு கோடி ரூபாய் செலவில், மீனவப் பெருங்குடி மக்களுக்கு, 382 இலவச வீடுகள், கட்டி வழங்கும் திட்டத்திற்கும், கடலில் காணாமல் போகும் படகுகளை, கண்டறிவதற்கான 2½ இலட்சம் ரூபாய் மதிப்பில், ஒரு நிலையத்தை ஏற்படுத்தவும்; 15 கோடி ரூபாய் செலவில், 'உவர் நீரிலிருந்து, இறால் மீன் பண்ணைகள்' அமைக்கும் திட்டத்திற்கும், அடிக்கல் நாட்டியுள்ளேன்.

**இயற்கை அன்னையின் கருணை!**

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும், தமிழக மக்களின் நலனையும் மட்டுமே, தாரக மந்திரமாகக் கருதி, நாங்கள் செயல்படுகின்ற காரணத்தினால் தான், இயற்கை அன்னையும் கடந்த சில ஆண்டுகளாக, எங்கள் மீது கருணை காட்டி வருகிறாள். வறண்டு கிடந்த வைகை ஆற்றிலே, வெள்ளம் கரை புரண்டு ஓடுவதை, பல ஆண்டுகள் கழித்து, மக்கள் இங்கே பார்த்திருக்கிறார்கள். நமது பூமியும், வானம் பார்த்த பூமியாக, வறண்ட பூமியாக இல்லாமல், வளமான பூமியாக மாற வேண்டும், என்ற நமது வேண்டுகோளுக்கு, இயற்கை அன்னை தொடர்ந்து செவி சாய்ப்பாள் என்பதில், எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

தமிழகத்தின் பல மாவட்டங்களுக்கு, நான் சமீப காலமாக சென்று பார்வையிட்ட போது, எல்லா நீர் நிலைகளும், ஏரிகளும், குளங்களும், நிரம்பி இருக்கின்ற காட்சியைக் காணும் போது, ''நீர் உயர......'' என்று ஔவையார் கூறியது, என் நினைவிற்கு வருகின்றது. தொடர்ந்து தமிழகம் வளமை அடையும் என்பதற்கு இந்த நல்ல சூழ்நிலை ஓர் எடுத்துக்காட்டு.

**நீர்ப்பாசனத் திட்டம்**

நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றை, இம்மாவட்டத்தில் செயல்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்று 16 கோடி ரூபாய் செலவில், கமுதி - மலட்டாறுக்கு குறுக்கே அணை கட்டுவதற்கும், பிடாரிசேரி - உப்போடை மீது அணை கட்டுவதற்கும், அடிக்கல் நாட்டியுள்ளேன். இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், ஆகிய இரண்டு மாவட்டங்களின் நீர்ப் பாசன வளர்ச்சிக்காக, 61 கோடி ரூபாய் செலவில், உலக வங்கி நிதி உதவியுடன், நீர்ப் பாசன மேம்பாட்டுத் திட்டம் ஒன்று, விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில்; வரகனூர் மற்றும் பார்த்திபனூர் இடைய உள்ள, பாசனக் கால்வாய்களும்; இராமநாதபுரம் மாவட்டத்தில், பார்த்திபனூர் ரெகுலேட்டர் [illegible] 5 [illegible] கால்வாய்களும், சீரமைக்கப்படும்.

இந்த இரண்டு மாவட்டங்களின், மின் தேவையைக் கருத்தில் கொண்டு, பரமக்குடிக் காவனூரில் 230 கிலோ வாட் திறனுள்ள, உப மின் நிலையம் ஒன்றையும்; சுமார் 19 கோடி ரூபாய் செலவில், அமைக்க திட்டமிட்டுள்ளோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வளர்ச்சிப் பணிகள்**

தொன்மையும் பழமையும் வாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது இம்மாவட்டம். உலகின் பல்வேறு மூலைகளில் இருந்து, மக்களைக் கவர்ந்து இழுக்கும், இராமேஸ்வரம் பகுதியின் மேம்பாட்டிற்காக, 17 இலட்சம்

ரூபாய் மதிப்பில், பலவேறு வளர்ச்சிப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

புகழ் பெற்ற, அருள்மிகு இராம நாதசுவாமி திருக்கோயிலுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பில் தங்கத்தேர் அமைக்கும் பணியும், அம்மன் சன்னதிக்கு முன் மண்டபம் அமைக்கும் பணியும், மேற்கொள்ளப்பட உள்ளன என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் இளைய தலைமுறையினர் விளையாட்டுத் துறையில் சிறப்பினை எய்துவதற்காக, பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் உங்கள் அரசு இராமநாதபுரத்தில் 'சீதக்காதி விளையாட்டு அரங்கம்' ஒன்றினை, 60 இலட்சம் ரூபாய் செலவில், அமைக்க உள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விரு மாவட்டங்களையும் சேர்ந்த, 50,999-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 25 கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நலத் திட்ட உதவிகளை, இன்று பெறுகின்ற மக்கள், அவர்களது வாழ்க்கையின் வளர்ச்சிக்கு, அவற்றை அடிப்படையாகக் கொண்டு, உழைத்து முன்னேறி, எல்லா வளங்களும், நலங்களும் பெற வேண்டும் என்ற, பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு சத்தியமூர்த்தி அவர்கள்**

சீரோடும், சிறப்போடும் நடைபெறும் இந்த விழாவினை, கண்ணுங்கருத்துமாக ஏற்பாடு செய்துள்ள, இம்மாவட்டத்து அமைச்சர்கள், அன்புச் சகோதரர் திரு சத்தியமூர்த்தி, மற்றும் அன்புச் சகோதரர் திரு தென்னவன் ஆகியோருக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடன் துணை இருந்து பணியாற்றிய அரசு அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். அன்புச் சகோதரர் திரு சத்தியமூர்த்தி, ஆரம்ப காலத்திலிருந்தே, இந்த மாபெரும் இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டு, அயராது தொண்டாற்றி வருகிறார். கொண்ட கொள்கையில் உறுதியுடனும், ஏற்றுக் கொண்ட தலைமையின் மீது நம்பிக்கையுடனும், தொய்வின்றிச் செயல்பட்ட காரணத்தினால் ஒரு சாதாரண நிலையில், தன்து பொது வாழ்க்கையைத் தொடங்கிய அன்புச் சகோதரர் திரு சத்தியமூர்த்தி, இன்று அமைச்சராக உயர்ந்து நம்மிடையே அமர்ந்து இருக்கிறார். பார்ப்பதற்கு எளியவராகவும், பழகுவதற்கு இனியவராகவும், கடமையில் கண்ணும் கருத்துமாகவும் இருக்கும், அன்புச் சகோதரர் திரு சத்தியமூர்த்தி, தான் ஏற்றுக் கொண்ட வணிகவரித் துறையைப் பற்றி நுணுக்கமான முறையில் அடிப்படை விவரங்களை எல்லாம் அறிந்து வைத்துள்ளார்.

இயக்கத்திற்குச் சோதனைகள் ஏற்பட்ட நேரங்களில் எல்லாம், இவர் மனம் தளராமல், தடுமாற்றம் இல்லாமல், உறுதியான கொள்கைப் பிடிப்புடன், தலைமை மீது அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்து, நிதானத்துடன் செயல்பட்ட காரணத்தினால் தான், இன்று உயர்ந்த பதவி அவரைத் தேடி வந்துள்ளது.

**மாண்புமிகு திரு மு. தென்னவன் அவர்கள்**

அதே போல, அன்புச் சகோதரர் திரு தென்னவன், இயக்கத்தின் பால் ஆழமான ஈடுபாடும், தலைமையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையும், உறுதியும் கொண்டு, பல ஆண்களாக மாவட்டச் செயலாளராக, இயக்கத்தில் பணியாற்றி வருகிறார். தெளிந்த மனதுடனும், துணிந்த நெஞ்சத்துடனும், அச்சம் இல்லாத கடமை உணர்வுடனும், தனது பணிகளை ஆற்றி வருகிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட எந்தப் பணியையும், திறம்படச் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர், அன்புச் சகோதரர் திரு தென்னவன் அவர்கள். பல ஆண்டுகளாக இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக அனைவரும் பாராட்டும் வண்ணம், தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இயக்கத்திற்குச் சோதனை ஏற்பட்ட நேரங்களில் இவரது மனதை மாற்ற எத்தனையோ பேர் முயற்சி செய்தும், தனது உறுதியில் இருந்து, ஓர் இம்மி அளவு கூடப்

---

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்:

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலவரி முதலியன தள்ளுபடி!

கடந்த 1993-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், பெருமழை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த 10 தாலுக்காக்களில் உள்ள 430 கிராமங்களில், பயிர் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்ட காரணத்தால், அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு, நில வரி மற்றும் இதர வரிகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும், என அம்மாவட்டத்து விவசாயிகள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை ஒன்றினை வைத்தனர்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்து வேளாண் பெருங்குடி மக்களின் நியாயமான கோரிக்கையைப் பணிவுடன் பரிசீலனை செய்து, அதனை முற்றிலும் ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பயிர் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்ட, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த 10 தாலுக்காக்களில் உள்ள விவசாயிகளுக்கு நிலவரி முதலியவற்றை, 23 இலட்சம் ரூபாய் அளவுக்குத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்த நிலவரி தள்ளுபடியினால், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோயில், நாங்குநேரி, ராதாபுரம், அம்பாசமுத்திரம், தென்காசி, செங்கோட்டை, சிவகிரி மற்றும் வி.கே. புதூர் ஆகிய 10 தாலுக்காக்களில் உள்ள மொத்தம் 430 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன் அடைவார்கள்.

பிறழாமல் நின்றவர், திரு. தென்னவன்.

அழகு தமிழில், அடுக்கடுக்கான வார்த்தைகளை வைத்து, ஆணித் தரமாகப் பேசக் கூடிய அருமையான பேச்சாளர், தன் இயக்கத்தில் பிரச்சாரப் பணிகளுக்காக, தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். சுவைப்படவும், தெளிவாகவும் சொற்பொழிவாற்றி, கேட்போரைக் கவர்ந்து இழுக்கும் பேச்சு ஆற்றல் மிக்க இவர், சட்டமன்றத்திலே உரையாற்றும் போது, இவர் பேச்சைக் கேட்க வேண்டுமே என்பதற்காக, வெளி நடப்பு செய்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட, உள்ளே வந்து உட்கார்ந்து வரலாறும் உண்டு. இம்மாவட்டத்து அமைச்சர்கள் இருவரும், உழைப்பில் களைத்தவர்கள் அல்ல; கடமையில் இளைத்தவர்கள் அல்ல.

இயக்கத்தின் மீதும், தலைமையின் மீதும், அளவிட முடியாத உறுதியையும், நம்பிக்கையையும் வைத்துச் செயல்படுபவர்கள். இவர்களது உழைப்பும், விசுவாசமும் தான், இவர்களது வாழ்க்கையின் உயர்வுக்கு, இவர்களை அழைத்துச் சென்று இருக்கிறது என்பதை, இன்று வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர், உணர வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு**
**திரு எஸ். கண்ணப்பன் அவர்கள்**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைசசர் அருமைச் சகோதரர் திரு கண்ணப்பன் அவர்கள், எந்த அளவிற்கு, தான் பொறுப்பு வகிக்கும் துறைகளைப் பற்றி, நுனி விரல்களில் விவரங்களை வைத்து இருப்பவர் என்பதைப் பற்றியும் அவர் கொள்கையில் உறுதியுடனும், தலைமை மீது ஆழ்ந்த பற்றுடனும் செயல்படும், ஒரு சிறந்த செயல் வீரர் என்பதைப் பற்றியும், நான் முன்பே குறிப்பிட்டு இருக்கிறேன். அவரது எளிமையும், திறமையும், உள்ள உறுதியும், அயராத உழைப்பும், களியாத மனமும், தலைமை மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையும் தான், அவரது உயர்வுக்கு வழி வகுத்துள்ளது. பழகுவதற்கு இனியவராகவும், அனைவருடனும் பக்குவமாக நடந்து கொள்ளும் தன்மையும் உடைய அன்புச் சகோதரர் திரு கண்ணப்பன், வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தினருக்கு, எல்லா வகையிலும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறார், என்பதை மீண்டும் எடுத்துரைப்பதில், நான் பெருமிதம் அடைகின்றேன்.

இன்னல்களும் இடையூறுகளும் வரும் போது, மனம் தளராத திரு கண்ணப்பன் போன்ற, உறுதியான மனம் படைத்தவர்களுக்கு, எத்தகைய பிரச்சினையும், ஒரு போதும் கலக்கத்தைக் கொடுத்து விட முடியாது. எடுத்த காரியங்களைத் திறம் படச் செய்து முடிக்கும் செயல் திறன் படைத்த காரணத்தால், இன்று தனது துறையில் பல புதிய அற்புதங்களைச் செய்து, மற்றவர்களுக்கு முன்னோடியாக விளங்குகிறார், என்பதை எண்ணிப் பார்க்கும் போது, நான் பெருமிதம் கொள்கிறேன்.

**நெஞ்சார்ந்த நன்றி**

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தத் தென்பாண்டிச் சீமைக்கு, வருகை தந்துள்ள உங்கள் அன்புச் சகோதரிக்கு, ஓர் எழுச்சி மிகுந்த வரவேற்பினையும், மனமார்ந்த பாராட்டுதல்களையும் கொடுத்து, மக்கள் பணியை நாங்கள் அயராது மேற்கொள்வதற்காக, உற்சாகத்தினையும் வழங்கும் உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும், அவர்களுடைய வாழ்வில், எல்லா நலன்களும், வளங்களும் பெற வேண்டும் என்ற, எனது மனம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மதுரை மாவட்டம்: —சில செய்திகள்

★ மதுரை விமான நிலையம் சென்னை, பம்பாய், கோயம்புத்தூர், திருவனந்தபுரம் மற்றும் திருச்சி ஆகிய விமான நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

★ மதுரை மாவட்டத்தில் மொத்தம் 197 திரையரங்குகள் உள்ளன. இவற்றில் 136 திரை அரங்குகள் நிரந்தரமானவை.

★ மதுரை மாவட்டத்தில் மொத்தம் 1201 நியாய விலைக் கடைகள் உள்ளன. இதில் 1172 கடைகள் கூட்டுறவுச்சங்கங்களாலும், 28 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. ஒரு அங்காடி அரிமா சங்கத்தால் நடத்தப்படுகிறது.

★ மதுரை மாவட்டத்தில் 1421 தொடக்கப் பள்ளிகளும், 363 நடுத்தரப் பள்ளிகளும், 127 உயர்நிலைப் பள்ளிகளும், 108 மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இவற்றைத் தவிர ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும், 26 கலைக் கல்லூரிகளும் இயங்குகின்றன.






# இராமநாதபுரம் - பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டங்களில் மாண்புமிகு முதல்வர்

இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் மாவட்டங்களில் ரூ.218 கோடி மதிப் புள்ள அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.2.'94 அன்று தொடங்கி வைத்தார்.

அன்று காலை தனி விமானம் மூலம், சென்னை யிலிருந்து மதுரைக்கு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம், இராம நாதபுரத்திற்கு வருகை தந்தார்.

பல்லாயிரக் கணக்கில் கூடியிருந்த மக்கள், வாழ்த்து முழக்கமிட்டு, முதல்வர் அவர்களை வரவேற்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்களின் வருகையையொட்டி, இராமநாதபுரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. தென்னை ஓலையால் பின்னப்பட்ட அலங்கார வளைவுகள் நகரின் பல்வேறு இடங்களில், அழகுறக் காட்சியளித்தன.

பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு முதல்வர் ஆகியோரது கட்-அவுட்டுகள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன. வரவேற்பு வாச கங்கள் அடங்கிய வண்ண வண்ணச் சுவரொட்டிகள் ஆயிரக்கணக்கில் ஒட்டப்பட்டிருந்தன.

முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியை வரவேற்கும் வாசகங்களடங்கிய இராட்சதப் பலூன்கள் விண்ணில் பறந்து கொண்டிருந்தன. "புரட்சித்தலைவி அவர்களே வருக" "புரட்சித் தலைவி வாழ்க" போன்ற வாசகங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மேடை எதிரே காட்சி யளித்தன. இராமநாதபுரத்தைச் சுற்றிக் குட்டித் தீவுகள் உண்டு. அதைப்போல செயற்கையான குட்டித் தீவுகள் மேடை அருகே அமைக்கப்பட்டிருந்தன.

இராமநாதபுரம் ஆயுதப்படை மைதானத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தபோது, அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த மக்கள் விண்ணதிர வாழ்த்து முழக்கமிட்டு வரவேற்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள், கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

ரூ.218 கோடி மதிப்புள்ள அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், 50 ஆயிரத் திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, விழாப் பேருரையாற்றினார்.

விழாவுக்கு மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எல். கிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. பி. சத்தியமூர்த்தி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எம். தங்கவேலு இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து அன்று பிற்பகல் 3 மணிக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். முன்னதாகக் காவல்துறை உயர் அதிகாரிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றனர்.



## புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல்வர்:

# ரூ.248 கோடி செலவிலான வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைத்தார்!

***(7.2.1994 அன்று புதுக்கோட்டை மாவட்டம்-அரசு திட்டப் பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆற்றிய சிறப்புரை)***

தமிழகத்திலுள்ள சிறிய மாவட்டங்களில் ஒன்றாக விளங்கினாலும், பெரிய அளவில் கீர்த்தியினையும், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினையும் கொண்டு விளங்கும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்து, 248 கோடி ரூபாய் செலவில், அரசின் வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, மலர்ந்த முகங்களோடும், தெளிந்த மனங்களோடும் வீற்றிருக்கும், என் அன்புக்குரிய புதுக்கோட்டை வாழ் பெருமக்களாகிய, உங்கள் அனைவரையும் காண்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சியும், அளவிலா மனநிறைவும் அடைகின்றேன்.

புராதன காலம் முதற்கொண்டே, தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு வளர்ச்சிகளையும், மாற்றங்களையும், புதுக்கோட்டை மாவட்டப் பகுதி சந்தித்து வந்துள்ளது. சங்ககாலம் முதல், பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள், பல்லவர்கள், பின்னர் புதுக்கோட்டை மன்னர் பரம்பரை என்ற, தமிழக வரலாற்றின் முக்கியமான அத்தியாயங்களைப் புதுக்கோட்டை சந்தித்துள்ளது. அதன் பயனாக, அழகிய திருக்கோயில்கள், கலை நுணுக்கம் மிகுந்த அரசு மாளிகைகள், நுண்ணிய சிற்பங்கள், எழில் மிகு கட்டடங்கள் ஆகியவற்றைத் தன்னேரில்லாத் தமிழக வரலாற்றின் தகைமைக்கும், தனிப் பெரும் சிறப்புக்கும் சான்றுகளாகப் புதுக்கோட்டை மாவட்டம் தன்னகத்தே பெற்று விளங்கி வருகின்றது.

எழிலும், அமைதியும், ஒருங்கே குடி கொண்டுள்ள இம்மாவட்டத்திற்குப் பல்வேறு காலகட்டங்களில் நான் வந்துள்ள போதெல்லாம், நீங்கள் என்னைப் பரிவோடும், பாசத்தோடும், உள்ளார்ந்த



அன்போடும், உவகைப் பெருக்கோடும், பாராட்டியுள்ளீர்கள்; சீராட்டி மகிழ்ந்துள்ளீர்கள். தமிழகத்து ஆட்சிப் பொறுப்பையேற்ற பின்னர், புகழ் பெற்ற புதுக்கோட்டை மாநகருக்கு, முதன்முதலாக வருகை தந்து, இந்தப் பிரம்மாண்டமான விழாவில் கலந்துகொண்டு, பாசத்திற்குரிய உங்களையெல்லாம் காண்பதில், நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

உங்களைப் போன்றே என்மீது, அன்பினையும், நம்பிக்கையினையும் வைத்திருக்கும், தமிழகத்தின் கோடிக் கணக்கான பெரியோர்கள் மற்றும் தாய்மார்களின் ஆதரவினைப் பெற்று, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த எங்களது அரசு, அது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு என்று அனைவரும் கூறும் வண்ணம், கடந்த 2½ ஆண்டுகளாக, வேகத்தோடும், விவேகத்தோடும் செயல்பட்டு வருகின்றது. திராவிட இன விடிவெள்ளி, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்; சிந்தனைச் சிற்பி, அறிவுடைமையின் மறு வடிவமாம் பேரறிஞர் அண்ணா; மனித நேயப் புனிதர், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய உத்தமத் தலைவர்கள், நமக்கு ஏற்படுத்தித் தந்த உண்மை வழியில், உங்களது அன்புச் சகோதரியின் அரசு, மக்கள் நலத்திட்டங்களை முறையோடு செயலாக்குவதை, முழு முதற் கடமையாக கொண்டு, அனுதினமும் செயல்பட்டு வருகின்றது.

கடந்த 2½ ஆண்டுகளாக, நானும் எனது சக அமைச்சர்களும், தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, மெய் வருத்தம் பாராது, கண் துஞ்சாது, தமிழகம் வளம்பெற வேண்டும், தமிழக மக்கள் நலம்பெற வேண்டும், என்ற ஒரே உணர்வோடு, ஓர் இலட்சியப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றோம். இந்தப் புனிதப் பயணத்தை நீங்கள் நிச்சயம் மேற்கொள்ள வேண்டும், நீங்கள்தான் எங்களுக்குச் சிறந்த பாதுகாவலர்கள் என்று, தமிழக மக்களாகிய நீங்களே, உங்களுக்காக உழைக்க, எங்களுக்கு அனுமதி வழங்கினீர்கள்.

இருப்பினும், மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாத சிலரும், மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிமையை உணராத சிலரும், கூட்டுச் சேர்ந்துகொண்டு, வலிமை மிக்க சிங்கத்தினைத் தேனீக்கள் கொட்டுவது போல, நமது இலட்சியப் பயணத்திற்கு இடையூறு விளைவித்தனர்; இன்னல்களைக் கொடுத்தனர். தாய் நாட்டைக் காக்கவேண்டும் என்று, நெஞ்சில் துணிவினையும், தடந்தோளில்



படைக் கலனையும் ஏந்தி, போரிடச் செல்லும் படைவீரன், சுட்டெரிக்கும் வெயிலையும், வாட்டுகின்ற கடும் குளிரினையும் பொருட்படுத்தாமல், முன்னேறிச் சென்று, எதிரிகளை. வென்று, தாய்நாட்டைக் காக்கின்றான். அதுபோலத் தந்தை பெரியாரின் கொள்கைகளைக் கேடயமாகவும், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களை அரணாகவும், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் துணிவினை, போர் வாளாகவும் கொண்டு, தமிழக மக்களை, மக்கள் விரோத சக்திகளிடமிருந்து காக்க, நாம் போராடிக் கொண்டிருக்கும் போது; கடிக்கின்ற கட்டெறும்புகளும், கொட்டுகின்ற தேனீக்களும், நம்மை என்ன செய்ய முடியும்?

எனவே, எங்களது இலட்சியங்களிலும், கொள்கைகளிலும், எங்களுக்குக் கிட்டப் பார்வையும் இல்லை, தூரப் பார்வையும் இல்லை. மாறாக, தமிழகத்தை விரைந்து முன்னேற்ற வேண்டும் என்ற, "தொலை நோக்குப் பார்வை" ஒன்றுதான், எங்களிடம் உண்டு என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஒரு மாநிலம், வலுவான பொருளாதாரத்தைக் கொண்டு இருக்க வேண்டுமென்றால், தொழில் துறையில் நல்ல வளர்ச்சியும் அடைய வேண்டும். மின்சார உற்பத்தியில் முதலிடத்திலும் விளங்க வேண்டும். தொழில் பெருக்கத்தினையும், மின்சார உற்பத்தியினையும் அடிப்படையாகக் கொண்டுதான், மாநிலத்திலுள்ள இதர துறைகள், வளர்ச்சியடைய முடியும். இதனை உணர்ந்த தமிழக அரசு, பதவியேற்ற நாள் முதலாகவே, அரசுத் துறையிலும், தனியார் துறையிலும், கூட்டுத் துறையிலும், பெரும் தொழில்களை நிறுவியும், புதிய மின் உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தியும் வந்துள்ளது. சென்னை மணலியில் நிறுவப்படும், 2000 கோடி ரூபாய் மதிப்புடைய, 'ஆரொகெம்' இரசாயனத் தொழிற்சாலை; ஜெயங்கொண்டத்தில் 7,500 கோடி ரூபாய் மதிப்பில், 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் மின் நிலையம்; திருச்சி மாவட்டம் புகளூரில், உலக வங்கியின் உதவியோடு நிறுவப்படவுள்ள, 525 கோடி ரூபாய் மதிப்புடைய, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின், இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணி ஆகியவை, தமிழகத் தொழில் துறை, அதன் வளர்ச்சியில், ஒரு முக்கியமான காலகட்டத்தை எட்டியுள்ளது என்பதை, நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இவை மட்டுமின்றி, 30 கோடி ரூபாய் மதிப்பில், பர்கூர் அருகேயுள்ள, மாதேப்பள்ளியில் நிறுவப்பட்டிருக்கும், கிரானைட் வளாகம் ஒன்றும்; சிவகங்கையிலுள்ள, 20 கோடி ரூபாய் மதிப்புடைய, கிராபைட் வெட்டி எடுக்கும் தொழிற்சாலையும்; சென்னை பேசின் பாலம் பகுதியில் சில நாட்களுக்கு முன்பு, என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட, 376 கோடி ரூபாய் மதிப்புள்ள 120 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு 'மின் சுழலி' அமைந்த மின் உற்பத்தி நிலையமும்; தமிழ்நாடு மின் அணுவியல் கழகத்தின் சார்பில், கூட்டுத் துறையில், சுமார் 100 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள, 9 புதிய தொழில்

முயற்சிகளும், தமிழகத் தொழில் துறை, எந்த அளவுக்கு விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது என்பதை, உலகுக்கு எடுத்துக்காட்டும், நற்சான்றுகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை, இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன்.

இவை மட்டுமின்றி, அரசு பலவேறு நிலைகளில் அளிக்கும் உதவியோடு, தனியார் துறையில், 8,500 கோடி ரூபாய் முதலீட்டில், 27 புதிய தொழில் திட்டங்கள் தொடங்கப்பட, நானே தொழில் முனைவோர்களுடன் கூட் டங்கள் நடத்தி, 3 நாட்களுக்குள் அனு மதி வழங்கினேன். இவையனைத்தும், தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் விரைந்து கொண்டு செல்லும் என்பதில், எனக்குச் சிறிதளவும் ஐயம் இல்லை.

ஒரு புறம் அதிக முதலீட்டில், பயன்கள் மெல்ல உருவாகும், நீண்ட காலத் திட்டங்கள், நமது மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையென்றாலும், கோடிக் கணக்கான ஏழை மக்கள், பசியின்றியும், பிணியின்றியும், குறைந்த பட்ச, அடிப்படை வசதிகளோடு கூடிய, நல்வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டும்; அதற்கு அரசு, இயன்ற அளவுக்கு, சமுதாய நலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தி வருகின்றோம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் அடி யொற்றி நடக்கின்ற, உங்கள் சகோதரி யின் தலைமையிலான உங்கள் அரசு, சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள், மகளிர், குழந்தைகள், ஆதரவற்றோர், நலிந்தோர், ஆகியோரின் நலன்களைக் காக்கும்வண்ணம், இலவச 'மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்'; 'ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம்'; ஆதரவில்லா பெண் குழந்தை களுக்கான 'அரசுத் தொட்டில் திட்டம்'; கட்டடத் தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஒரு கோடி ரூபாய் செலவில், சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ஆகிய திட்டங்களைச் சமுதாயத்திலுள்ள பலவேறு தரப்புகளைச் சார்ந்த, ஏழை மக்களின் நலன்களையும், உரிமைகளை யும் காக்கின்ற வகையில், இந்த அரசு நிறைவேற்றி வருகின்றது என்பதை, இந்த நேரத்தில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவையனைத்திற்கும் மேலாக- தமிழகம் கடந்த 2½ ஆண்டுகளாக அடைந்துவரும் வளர்ச்சி, எந்த அளவுக்கு அனைவராலும் போற்றப்படுகின்றது. பாராட்டப்படு கின்றது என்பதற்கு, ஒரே ஒரு உதார ணத்தை மட்டும், இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

1991-92-ஆம் ஆண்டில், மத்திய திட்டக் குழு தமிழகத்திற்கு வழங்கிய திட்ட ஒதுக்கீடு, 1605 கோடி ரூபாய் மட்டுமேயாகும். ஆனால், 1,651 கோடி ரூபாயைத் திட்டங்களுக்குச் செலவிட்டு, தமிழகத்தின் திறமையை வெளிப்படுத்தி னோம். அதனையடுத்து, 1992-93-ஆம் ஆண்டிற்கு, 1,766 கோடி ரூபாய்க்கான திட்ட ஒதுக்கீட்டினைப் போராடிப் பெற்றோம். மத்திய திட்டக் குழுவின் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும் வகையில், அந்த நிதியாண்டிலேயே, 1,935 கோடி ரூபாய் திட்டப் பணிகளை மேற்கொண்டு, தமிழகத்தின் வளர்ச்சிக்கு வழி வகுத் தோம். அதிக நிதி ஒதுக்கீடு கோரி வாதாடிய போது, நம்மைக் கண்டு சந் தேகப்பட்டவர்கள், நமது சாதனையைக் கண்டு, வியந்து பாராட்டினார்கள்.

அதன் பின்னர், 1993-94 ஆண்டிற் காகத் தமிழகத்தின் உற்பத்திப் பெருக்கம், நிதி ஆதாரங்களின் உயர்வு, பொருளா தார முன்னேற்றம், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மத்திய திட்டக் குழு, தமிழகத்திற்கு 2,101 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டினை அனுமதித்து, தமிழகத்தின் வளர்ச்சியை மனம் திறந்து பெரிதும் பாராட்டியது. 1994-95-ஆம் ஆண்டிற்கு, 2,750 கோடி ரூபாய், திட்ட ஒதுக்கீட்டினைப் பெற்றுள்ளோம். மூன்றாண்டுகளுக்குள், தமிழகத்தின் திட்ட ஒதுக்கீடு, 1,605 கோடி ரூபாயி லிருந்து, 2,750 கோடி ரூபாயாக உயர்ந் துள்ளது. மத்திய திட்டக் குழு, நமது மாநிலத்திற்கென, குறித்துக் காட்டிய தொகையை விட, அதிக அளவு செலவு செய்து, நாம் தொடர்ந்து சாதனை புரிந்து வருவதைக் கண்டு, மனதார பாராட்டி வருகின்றது என்று சொன் னால், அது நிச்சயமாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒவ்வொருவரும், பெருமைப்படக் கூடிய செய்தியாகும்.

தமிழக அரசு, மனிதாபிமான இலட்சி யங்களின் அடிப்படையில், ஏழை மக்களின் சுமையைத் தாங்குகின்ற வகையிலும், அவர்களின் துன்பங்களைக் குறைக்கின்ற வகையிலும், சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. ஆனால், மத்திய அரசு அத்தியாவசியப் பொருள்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, பெட்ரோல், டீசல் ஆகிய வற்றின் விலைகளை உயர்த்தியுள்ளது. இது நமக்கெல்லாம் மிகுந்த வருத்தத் தையும், வேதனையையும் அளிக்கின்ற செயலாகவுள்ளது. சமீபத்தில், மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த விலைவுயர்வுகள், குறிப்பாக- பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப் படும், ரேஷன் அரிசியின் விலை உயர்வு, ஏழை மக்களை எந்த அளவுக்குப் பாதிக் கும் என்பதை உணர்ந்து தான், அந்த விலை உயர்வினை ரத்து செய்ய வேண் டும், என மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

ஏழைகளையும், ஆதரவற்றோரையும், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள் ளோரையும் பாதிக்காத வண்ணம், நமது பொருளாதாரக் கொள்கைகளையும், செயல்பாடுகளையும், வகுத்துக் கொண்டு செயல்படவேண்டும் என்ற, எனது கருத்தின் அடிப்படையில், இந்த விலை வாசி உயர்வினை, மத்திய அரசு விலக்கிக் கொள்ள வேண்டுமென்று, மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, அத்தி யாவசியப் பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தினைக் கட்டுப்படுத்தும் வகையில், பலவேறு கட்டுப்பாட்டு நடவடிக்கை களை, உணவு மற்றும் நுகர்வோர் நலப் பாதுகாப்புத் துறையின் மூலம், செயல் படுத்தி வருகின்றோம். அரிசி, சமையல் எண்ணெய், பருப்பு ஆகிய, அன்றாடம் தேவைப்படும் பொருள்களை, விற்பனை செய்யும் அங்காடிகள், கட்டாயமாக விலைப்பட்டியல், பொருட்களின் இருப்பு ஆகியவற்றை, அன்றாடம் அங்காடி முன்பு, பட்டியலிட்டுக் காட்டவேண்டும் என்பதை, எங்களது அரசு நடைமுறைப் படுத்தி வருகின்றது. செயற்கையான விலை ஏற்றங்களை, விற்பனை புரிவோர் அமல்படுத்தினால், அவர்கள் மீது தக்க

பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கின்றோம். ஆனால், பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு போர் புரியத் தொடங்குவது இல்லை. அதுபோலத்தான் பழமையான கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனால், கையாளக்கூடாது.



மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத் திறன் முழுவதும் காட்டி, காகிதப் பூமாலை தொடுத்தால், பயன் என்ன? மாலைக்கு முதற் பொருள் மணமுள்ள மலர்; அதுபோல, பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனுமுள்ள கருத்துக்கள்.

— அறிஞர் அண்ணா

நடவடிக்கை எடுக்க, இந்த அரசு தயங் காது என்பதை, இந்த நேரத்தில் தெரி வித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று 248 கோடி ரூபாய் மதிப் புள்ள, அரசு நலத் திட்டங்கள், புதுக் கோட்டை மாவட்டத்திற்காகத் தொடங்கி வைக்கப்படுகின்றன. அவற்றில், நிறை வேற்றப்பட்ட திட்டங்களைத் துவக்கி வைக்கும் வகையில், 51 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும்; அடிக்கல் நாட்டும் வகையில், 164 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும், 30,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, அரசு நலத் திட்ட உதவிகளை, 33 கோடி ரூபாய் அளவில் வழங்கியும், இன்று நான் பல வேறு திட்டங்களைத் துவக்கி வைத் துள்ளேன்.

இவற்றில், குறிப்பாகப் புதுக் கோட்டை நகரத்தில், 66 கிலோவாட் மின் அழுத்த நிலையத்தை, 110 கிலோ வாட் மின் அழுத்த நிலையமாக உயர்த் தும், 2.2 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டமும்; கொடிக்குளத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் துவக்கப்படும், 33 கிலோவாட் மின் அழுத்த நிலையமும்; மாவட்டம் முழுவதும் 6 கோடி ரூபாய் மதிப்பில், ஏரிகள் பராமரிப்புப் பணியும்; 3½ கோடி ரூபாய் செலவில், சிறு பாசன குளங்களுக்கான பராமரிப்புப் பணியும்; 5 கோடி ரூபாய் செலவில், கிராம, நகராட்சி மற்றும் ஊரகச் சாலை அபிவிருத்திப் பணிகளும்; புதுக்கோட்டை மாவட்டத்தின் வசதிகளை வெகுவாக உயர்த்தி, அதன் துரித வளர்ச்சிக்கு, விரைந்து அடிகோலும் என்ற நம்பிக்கை யினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத் திற்கான புதிய திட்டங்கள் என்ற வகை யில், ஒரு கோடி ரூபாய் மதிப்பில், பொன்னமராவதி நகரக்குடிநீர் வழங்கும் திட்டமும்; 54 கோடி ரூபாய் மதிப்பில், இம்மாவட்டத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்க இருக்கும், முன்னோடி வங்கிப் பயிர்க் கடன் திட்டமும்; 20 கோடி ரூபாய் மதிப்பில், புதுக்கோட்டை யில் நிறுவப்பட இருக்கும் புதிய மின் நிலையமும்; இம்மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், விரைந்த முன்னேற்றத்திற்கும், வழிவகுக்கும் என்பதை, இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அரசின் நலத் திட்ட உதவிகளை, இன்று இங்கு பெற வருகை தந்திருக்கும், 30,000-க்கும் மேற்பட்ட பயனாளிகள், அரசின் உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி, தங்களது வாழ்வில் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டும், என்ற எனது பேரவாவினைத் தெரி வித்துக் கொள்கிறேன். நேரமின்மை யால், பயனாளிகளில் குறிப்பிட்ட சில ருக்கு மட்டும், நான் மேடையில் எனது கைகளால், அரசின் உதவிகளை வழங்க வுள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பயனாளிகள் இருக்கும் இடத்திற்கே சென்று, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள்.

புதுக்கோட்டை மாவட்டமே எழுச்சி பெறும் வகையில், இந்த விழாவினை மிகச் சீரிய முறையில், சிறப்பாக நடத் திட, அனைத்து ஏற்பாடுகளையும் மிகவும் நன் முறையில் செய்த, இந்த மாவட்டத்து அமைச்சரான, மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர், சகோதரர் ரகுபதி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த விழா ஏற்பாடுகளில் அவருக்கு உறுதுணையாக இருந்து பணி யாற்றிய அரசு அலுவலர்களுக்கும், எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சகோதரர் ரகுபதி அவர்கள் அமைதி யானவர்; அனைவருடனும் பழகுவதற்கு இனியவர்; மக்களுக்குச் சேவை புரிவதில் வல்லவர், அன்புச் சகோதரர் ரகுபதி ஒரு திறமையான வழக்கறிஞர்; இனிமையான நற்பண்புகள் உடைய ஒரு நல்ல மனிதர். தலைமையின் மீது அசைக்க முடியாத பற்றும், நம்பிக்கையும் கொண்ட ஒரு செயல் வீரர். செய்யும் எந்தவொரு பணி யையும், நேர்த்தியாக, திறம்படச் செய்யும் கடுமையான உழைப்பாளி. பொது வாழ்வில், அவசரப்படாமல், நிதான மாக, அயராது உழைத்து முன்னேறும் விதத்தில், வளர்ந்து வரும் இளைய தலை முறையினருக்கு, இவர் ஒரு எடுத்துக் காட்டு.

ஆரம்ப காலத்தில் ஒரு சாதாரணத் தொண்டனாக பொது வாழ்க்கையில் ஈடுபட்ட அன்புச் சகோதரர் ரகுபதி, படிப்படியாக உயர்ந்து, தனது கடுமை யான உழைப்பினால், அனைவரின் ஆதரவையும் பெற்று, சட்டமன்ற உறுப் பினராகி, இன்று அமைச்சராக நம் மிடையே அமர்ந்திருக்கிறார். இந்த உயர்வுக்குக் காரணம் அவரது திறமை, எளிமை, சலியாத மனம், ஓயாத உழைப்பு, அனைத்திற்கும் மேலாக, தலைமை மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை.

அன்புச் சகோதரர் ரகுபதியின் பண்புகளையும், குணநலன்களையும் ஆராயும்போது, என் மனதில் தோன்று கின்ற ஒரு கருத்தையும் வெளிபடுத்துவது, பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபடும் இன்றைய இளைய சமுதாயத்தினர், வெகு விரைவில் எப்படியேனும் ஒரு பதவியை அடைந்துவிட வேண்டும் என்று, அவசரப்படுகிறார்கள். அது உடனே கிட்டாத போது, மனச் சோர்வு அடைந்து, சலனத்திற்கும், தடுமாற்றத் திற்கும் இடம் அளித்து விடுகிறார்கள். எதிர்பார்த்த உயர்வு எதிர்பார்த்த வேகத் தில் கிடைக்கவில்லையே என்ற மன அழுத்தத்தினால், பணியில் உற்சாகமில் லாமல், சுறுசுறுப்பாகச் செயல்படும் தன்மையையும் இழந்து விடுகிறார்கள். எப்படியேனும் பதவியை அடைந்துவிட வேண்டும் என்பதற்காக, வேறு சிலர், கொள்கைப் பிடிப்பு இல்லாமல், இன் னொரு தலைமையை நாடி சென்று விடுகிறார்கள்.

ஆனால் புதிய இடத்தில், ஏற் கெனவே இருக்கின்ற தொண்டர்கள், இவர்களை ஏற்றுக் கொள்ளாமல், வெறுத்துத் தள்ளுகின்ற சூழ்நிலையில், இவர்கள் மீண்டும் ஏமாற்றத்தைத்தான் தழுவுகிறார்கள். வாழ்க்கையில் முன் னேற்றங்களையும், உயர்வுகளையும், அதற்குரிய உழைப்பையும் திறமையையும் வெளிப்படுத்தித் தான், பெற நினைக்க வேண்டுமே தவிர, எப்படியாவது, வேகமாகக் குறுக்கு வழிகளில் அடைய வேண்டும் என்று நினைப்பது தவறு.

கொண்ட கொள்கைகளில் உறுதி யுடனும், தலைமையின் மீது விசுவாசத்



துடனும், பயன்களை எதிர்பார்க்காமல், தனது கடமைகளைச் செவ்வனே ஆற்றி வந்தால், நிச்சயம் வாழ்க்கையில் உயர்வு கிடைக்கும் என்பதற்கு, அன்புச் சகோதரர் ரகுபதி, ஒரு இலக்கணமாகத் திகழ்கிறார் என்று கூறுவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைய இளைய சமுதாயத்தினர், பின்பற்ற வேண்டிய குணநலன்கள், அவரிடம் மிகுதியாகவே அமைந்துள்ளன.

ஆரம்ப காலம் முதல், இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு, பல்வேறு நிலைகளில் பொறுப்புக்களையேற்று, பல ஆண்டுகள் தொடர்ந்து, மாவட்டச் செயலாளராகவும் பணி புரிந்தார் ரகுபதி. ஒரு கால கட்டத்தில், இவர் கடுமையாக உழைப்பார். ஆனால் இவரது உழைப்பின் பயன்கள், அதே மாவட்டத்தைச் சேர்ந்த வேறு சிலருக்குப் பதவிகளாகவும், உயர்வுகளாகவும் கிடைக்கும். தனது உழைப்பின் பயன்கள் தனக்குக் கிடைக்கவில்லையே என்று சலிப்படையாமல், தனது கடமையைப் பொறுமையோடும், கடமையுணர்வோடும் ஆற்றி வந்தார் சகோதரர் ரகுபதி. வேறு யாராவது இவரது இடத்தில் இருந்திருந்தால், எப்போதோ சலிப்படைந்து, பொறுமையிழந்து, தவறான முடிவுகளை எடுத்திருப்பார். ஆனால் சகோதரர் ரகுபதி, எத்தனை சோதனைகள் வந்தாலும், இன்னல்கள் வந்தாலும், அவற்றை எதிர்கொண்டு, தனது கடமையினை எவ்விதத் தடுமாற்றமும் இன்றி, செவ்வனே ஆற்றி வந்தார்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். இருந்த காலத்தில், அவர் மீது உண்மையான பற்று வைத்து, அவரைப் பின்பற்றி வந்தார். அவரது மறைவுக்குப் பின்பு, இயக்கத்தில் ஏற்பட்ட, குழப்பமான சூழ்நிலையில், ஒரே தலைமையின் மீது, உறுதியுடன் பற்று வைத்து, எந்தத் தடுமாற்றமும் இன்றி, தனது கடமைகளைத் தொடர்ந்து செய்தார். மிரட்டல்களும், அச்சுறுத்தல்களும், அவரது கொள்கைப் பிடிப்பையும், மன உறுதியையும், ஒரு இம்மி அளவு கூட மாற்ற முடியவில்லை.

இன்று அன்புச் சகோதரர் ரகுபதியைப் பார்த்து ஆதங்கப்படும் இளைஞர்கள், அவரது உயர்வு, ஒரே நாளில் கிடைத்தது அல்ல என்பதையும், பல சிக்கலான காலகட்டங்களிலும் எந்த விதமான பயனும் எதிர்பார்க்காமல், கடமை உணர்வோடு செயல்பட்டதால் கிடைத்த நியாயமான உயர்வு என்பதையும், மறந்துவிடக் கூடாது.

சகோதரர் ரகுபதி அவர்கள் இன்றும் தொடர்ந்து அயராமல், ஆர்வத்தோடு உழைத்துவருகிறார். தான் ஏற்றுக் கொண்ட தலைமைக்கும், தனது இயக்கத்திற்கும், தமிழக அரசுக்கும், நல்ல பெயரைப் பெற்றுத் தருவதில், கண்ணும் கருத்துமாகவும், தீவிரமாகவும் உள்ளார். அவசரப்படக் கூடிய இளைஞர்கள், சகோதரர் ரகுபதியைப் பார்த்து, அவரை ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நானே நேரடியாகச் சென்று, மக்களைச் சந்தித்து, மக்களுக்குத் தேவையான திட்டங்களைத் துவக்கி வைத்தும், பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் வருவதை, நான் நடைமுறைப்படுத்தி வருகின்றேன். இவ்வாறு, மக்களைச் சந்தித்து, அவர்களுடைய தேவைகளை அறிந்து, அவர்களுக்கு உதவுவது, எனக்கு மிக்க மன நிறைவையும், எனது கடமையினை மென்மேலும் சிறப்புற ஆற்ற, தேவையான உற்சாகத்தினையும் வழங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது உரையினைக் கேட்பதற்காகவும், பெருமளவில் இந்த விழாவிற்கு வருகைதந்து, எங்களது பணிகள் மென்மேலும் சிறப்படைய, எங்களை உற்சாகப்படுத்திய புதுக்கோட்டை மாவட்டத்துப் பெருமக்கள் அனைவருக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

# புதுக்கோட்டை மாவட்ட

# அனைத்து மகளிர் காவல் நிலையம்:

தமிழகத்தில் 11-வது அனைத்து மகளிர் காவல் நிலையத்தைப் புதுக்கோட்டையில் துவக்கி வைப்பதில், நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்

காவல் நிலையங்களுக்குப் பொதுமக்கள் சென்று, தங்களுடைய பிரச்சினைகளையும், இன்னல்களையும் எடுத்துரைக்கத் தயங்கிய காலமும், தமிழ்நாட்டில் ஒரு காலத்திலிருந்து வந்தது. ஆனால், அத்தகைய நிலைமை தற்போது தமிழ்நாட்டில் இல்லை. தங்களுடைய பிரச்சினைகளையும், தங்களுக்கு ஏற்படும் இன்னல்களையும் எடுத்துக் கூறி, சட்டத்தின் துணை கொண்டு, எவ்வாறு நியாயம் பெறுவது என்ற கேள்விக்கு விடை தேடி, பொது மக்கள் காவல் நிலையங்களைத் தைரியமாக அணுகுகின்ற சகஜ நிலைமையைத் தற்போது நாம் காண முடிகிறது.

சட்டத்தை அமல்படுத்துவதிலும், சட்டத்தை மீறுபவர்களை நீதிமன்றத் தண்டனைக்கு உட்படுத்துவதிலும், கண்டிப்பினைக் காட்டும் காவல் துறையினர், சமூகத்தில் பாது காவலர்களாக, மக்களுடைய இன்னல்களையும் உற்ற நண்பர்களாகப் பணியாற்ற வேண்டிய சமூகத் தேவைகளையும், நமது காவல் துறையினர் நன்கு அறிந்துள்ளனர்.

காவல் துறையினர் மற்றும் பொது மக்களிடையே, நிலவ வேண்டிய நல்லிணக்கச் சூழ்நிலை, நல்லுறவு போன்றவை, கடந்த சில ஆண்டுகளாக, நன்முறையில் இருப்பதைச் சுட்டிக்காட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன்.




(புதுக்கோட்டையில், மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை:)

குறிப்பாக, மகளிருக்கு எதிராக நிகழும், பல்வேறு சமுதாயக் கொடுமைகளிலிருந்து, தக்க நீதி மன்ற நிவாரணத்தைப் பெற்றுத் தரவேண்டிய, மாபெரும் பொறுப்பும் கடமையும், காவல் துறையினருக்கு இன்று மிக அதிகமாக உள்ளது. தற்போது தமிழ்நாடெங்கும், மாவட்டந்தோறும், மாநகராட்சி தோறும் நிறுவப்பட்டு வரும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்; மகளிருக்கு இழைக்கப்படும் வரதட்சிணைக் கொடுமை, வன்முறை, பலாத்காரம், ஜீவாதார உரிமைகள் பறிப்பு போன்ற அநீதிகளிலிருந்தும், சமுதாயக் கொடுமைகளிலிருந்தும் காப்பாற்றி, தக்க நீதியினைப் பெற்றுத் தர, தங்களை முழுமையாக அர்ப்பணித்து, சேவை புரிந்து வருகின்றன. ஒரு சமுதாய சேவை என்ற உணர்வுடன், அந்தப் பணிகளை ஆற்றவேண்டும் என்று,

அனைத்துப் பெண் காவலர்களையும் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

காலத்தின் தேவைகளும், பொது மக்களின் எதிர்பார்ப்புகளும், தமிழகக் காவல் துறையின் பணிச் சுமைகளையும், கடமைகளையும், மிக அதிக அளவில் உயர்த்தி உள்ளன. நகர்ப்புற வளர்ச்சியும், பெருகி வரும் வன்முறைக் கலாச் சாரமும், காவல் துறையின் பணியை மேலும் சிக்கலாக்கிக் கொண்டிருக் கின்றன.

துணிவும், கடமை உணர்வும் உடையவர்களாகவும்; இவற்றோடு, காவலர்கள், உடல் வலிவும் உள்ள உறுதியும் படைத்தவர்களாகவும் இருந்தால்தான், இன்றைய சமு தாயத்தில் உள்ள சவால்களை எதிர் கொண்டு, சமாளித்து, வெற்றி கொள்ள முடியும். எனவேதான், காவல் துறையை நவீனமயமாக்கி, வலுவுள்ள ஒரு இயக்கமாக அதனை மாற்றுவதில், நான் மிகுந்த தீவிரம் காட்டி வருகிறேன். காவல் துறை யினர் தங்களது பணியில் சோர்வு அடையாமல் இருக்கவும், சமுதாயத் தில் தங்களுக்கு உரிய அந்தஸ்தைப் பெறுவதற்கும், பொது மக்களும் ஒத் துழைப்புத் தரவேண்டும் என்பதை யும், இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். காவல் துறையை நவீனப்படுத்துகின்ற அதே நேரத் தில், அதை மனிதாபிமானம் உள்ள ஒரு இயக்கமாக மாற்றுவதற்கு நான் நடவடிக்கை எடுத்துவருகிறேன். காவலர்கள், சோதனைகள் பல நிறைந்த தங்களின் பணிகளைச் செவ்வனே ஆற்றிட, புதிய உற்சாகத் தையும் ஆர்வத்தையும், அவர்களது மனதில் வளர்ப்பது, நமது கடமை ஆகும். பல கரங்கள் ஒன்றுசேர்ந்து ஒலிக்கும்போது, எப்படி அதிக ஓசை எழுகிறதோ, அதே போலத் தான், அரசு இயந்திரமும், காவல் துறையும், பொதுமக்களும், ஒரு மித்த கருத்துடன் இணைந்து செயல் படும்போது, அங்கே காவல்துறை யின் சேவை, ஒரு புதிய பரிமாணத் தைப் பெறுகின்றது.

அனைத்து மகளிர் காவல் நிலை யங்கள், தமிழ்நாட்டில் நன்முறை யில் செயல்படுகின்ற விதத்தைக் கண்டு, இதுபோன்று அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, மற்ற மாநிலத்தவர்கள் தங்கள் மாநிலங் களிலும், அயல் நாட்டவர் தங்கள் நாட்டிலும், அமைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். சர்வ தேசச் செய்தி நிறுவனங்கள்கூட, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பாடுகளையும், சாதனைகளையும், பெருமையுடன் மகிழ்ந்து பாராட்டிவருகின்றனர். எந்தவொரு உயரிய நோக்கத்துடன், நான் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அமைக்க வேண்டும் என்று விரும்பினேனோ, அந்த எண்ணம் ஈடேறுவதைக் கண்டு, நான் மகிழ்ச்சி அடை கின்றேன்.



அதே நேரத்தில், மற்றவர்களுக்கு எல்லாம் முன்னோடியாக, நாம் விளங்க வேண்டும் என்றால், தொடர்ந்து அதே உத்வேகத் துடனும், புத்துணர்ச்சியுடனும், நாம் செயல்படவேண்டும் என்று, இந்தக் காவல் நிலையத்தில் பணிபுரிய உள்ள ஆய்வாளரையும், பெண் காவலர்களையும் கேட்டுக்கொள் கிறேன். காவல் நிலையங்களைத் தேடிவரும் தாய்மார்களை, ஒரு மனு தாரர் என்று கருதாமல், தன் உடன்பிறவாச் சகோதரியாகக் கருதி, ஒரு சகோதர வாஞ்சையுடன் செய லாற்ற வேண்டும் என்று, அவர் களை நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அவர்கள் செயல்படு வார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, பல வேறு வளர்ச்சிப்பணிகளைத்துவக்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும், 30,000/-க்கு மேற்பட்டவர்களுக்கு, அரசு நலத்திட்ட உதவிகளையும், சற்று முன் வழங்கிவிட்டு வந்துள் ளேன். அதைத் தொடர்ந்து புதுக் கோட்டை மாவட்டத்தின் வளர்ச் சிக்கு, குறிப்பாகப் புதுக்கோட்டை மாவட்ட மகளிரின் வளர்ச்சிக்கு, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், ஒரு ஊன்றுகோலாக, உதவும் கரமாக அமையும் என்ற, எனது எதிர்பார்ப்புகளைத் தெரி வித்து, இவ்விழாவினைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள, காவல்துறை அலுவலர்கள் அனைவருக்கும், எனது பாராட்டுதல்களைத் தெரி வித்து, விடை பெறுகிறேன்.

> கடலுக்காக அல்ல; கடற்கரை யிலே இருக்கின்ற மக்களுக்காக அலை காற்றடிக்கின்றது. விளக்கு ஏற்றினால், தன் எதிரிலே இருக் கின்ற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர, அதன் அடி யில் இருக்கின்ற நிழலைப் போக்க முடியாது! அதுபோல, நம்மிடத் திலே இருக்கின்ற திறமை நமக் காக அல்ல; நாட்டு மக்களுக் காக! அந்த வகையில் நாம் ஒவ் வொருவரும் பணியாற்றுவோம்!
>
> — பேரறிஞர் அண்ணா

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



# தென்னக எரிவாயுத் தொகுப்புக்குத் தமிழகம் தன்பங்கைச் செலுத்தும்!

**மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும். முறைசாரா மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்கப்படும்.**

**சூரிய ஒளியின் வெப்பத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.**

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழ்நாட்டில் பெருகிவரும் தொழில்வளம் மேலும் சிறப்புற உதவும்வகையில் சென்னையிலுள்ள பேசின் பாலம் அருகே, ரூ.376 கோடியில் எரிவாயு மின்திட்டம் அமைக்கப்படவிருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இதற்கென்று 31.1.94 அன்று நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்று அடிக்கல் நாட்டினார். விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை- மின்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் மற்றும் தமிழக அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

ஆண்களும் பெண்களுமாகப் பல்லாயிரவர் இவ் விழாவிற்குத் திரண்டு வந்திருந்தார்கள்.

பேசின் பாலம் எரிவாயு மின்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள்- பொதுப்பணித்துறையிலும் நெடுஞ்சாலைத் துறையிலும் சிறப்பாகப் பணியாற்றிய பொறியாளர்களுக்கு 'அண்ணா விருது' வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அந்தச் சிறப்புமிகு விழாவில் பேசியதாவது:

சென்னை மாநகரத்தின் அதிகபட்ச மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம், 30 மெகாவாட் திறன் கொண்ட, எரிவாயு 'மின்சுழலி' அமைந்த, இந்தப் புதிய மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்து, எனது அன்பிற்குரிய வடசென்னைப் பகுதிவாழ் மக்களாகிய உங்களையெல்லாம் காணும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன். முறைசாரா மின் உற்பத்தித் துறையில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறதென்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்



கொள்கிறேன். அத்தகைய வளர்ச்சிப் பணிகளில், மேலும் ஒரு மைல்கல்தான் இங்கே, இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள மின்சக்தி உற்பத்தி நிலையம். இந்த மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நாளையே தொடங்குமென்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் உற்பத்திப் பெருக்கமும், அதன் சீரான விநியோகமும், தமிழகத்தின் அடிப்படை மின் தேவையை நிறைவு செய்வதோடு, மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கும், உற்பத்திப் பெருக்கத்திற்கும் வழி வகுப்பதுடன், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமையுமென்பதைப் பூரணமாக அறிந்த இந்த அரசு, அந்த உயரிய இலக்கை நோக்கிப் பீடு நடை போட்டுச் செல்கிறதென்பதைத் தான் இன்றைய விழா எடுத்துக்காட்டுகிறது.

**செயல் வேகம் காட்டும் அரசு**

மின் உற்பத்தியில் தேக்க நிலையை அடைந்துவிட்ட நிலையில், தமிழகத்தின் வளர்ச்சிக்கு மின் உற்பத்திப் பெருக்கம் மிக இன்றியமையாதது என்ற கருத்தைப் பொதுத் தேர்தலுக்கு முன்பே நான் பல முறை, பல கூட்டங்களில் வலியுறுத்தி எடுத்துரைத்து வந்துள்ளேன். எங்களது தேர்தல் அறிக்கையிலும், ''மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும்'' என்றும், குறிப்பாக, ''முறைசாரா மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்கப்படும்'' என்றும், சூரிய ஒளியின் வெப்பத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுமென்பதனையும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

உங்கள் சகோதரியின் தலைமையிலமைந்த இந்த அரசு, உங்கள் அரசு, தேர்தல் காலத்தில் கொடுத்த பல்வேறு வாக்குறுதிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வந்துள்ளது. சென்னையில், குறிப்பாக, சமீப காலமாக முறைசாரா மின் உற்பத்தித் துறையின் மூலம், பல புதிய திட்டங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் கண்கூடாகக் கண்டு வருகிறீர்கள். சொல்லில் காட்டுகிற வேகத்தைவிட, செயலில் வேகம்காட்டி, பல புதிய திட்டங்களைத் தீட்டி, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் பீடு நடை போட வைப்பதையே எங்கள் தலையாய கடமையாகக் கொண்டுள்ளோம்.

பல ஆண்டுகளாகவே, மின் உற்பத்திப் பெருக்கத்திற்குச் சரியான திட்டங்கள் தீட்டப்படாமலும், மேற்கொள்ளப்படாமலும் இருந்த காரணத்தால், மின் உற்பத்தியில் தொய்வும், மின்வெட்டினால் தொழிற்சாலைகளில் உற்பத்தி முடக்கமும் ஏற்பட்டு, வேலைவாய்ப்புகளும் குறைந்து, தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு வந்த சூழ்நிலையை நான் நன்கு அறிந்திருந்தேன்.

எனவேதான், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உங்கள் அரசு, ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடன், மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்கும் வகையில் வரவு செலவுத் திட்டத்தில் மின் உற்பத்திக்குப் படிப்படியாக நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்து, சோர்ந்துபோன மின் உற்பத்தியைத் தூக்கி நிறுத்த அரும்பாடு படவேண்டியதாக இருந்தது.

திறமை வாய்ந்த பொறியாளர்களையும், கடுமையாக உழைக்கின்ற பணியாளர்களையும் தன்னகத்தே கொண்டு உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, நல்ல பல திட்டங்களைத் தீட்டித் தந்து, அவற்றிற்குரிய நிதி ஆதாரங்களை ஏற்படுத்திக் கொடுத்ததினால், ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் இன்று மின்சார வாரியம் விரைந்து நடைபோடத் துவங்கியுள்ளது. இந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில், மின் உற்பத்தித் துறையில் நாம் பல சாதனைகளைப் புரிந்து, மின் வெட்டே இல்லா

ஒரு புரட்சிகரமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளோம் என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதமடைகிறேன்.

தமிழகத்தின் மின் உற்பத்தியில் தொய்வு ஏற்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், சமயநல்லூர் அனல் மின் நிலையம் விலை பேசப்பட்டது என்பது சரித்திர உண்மை. ஆனால், அந்த நிலைக்கு முற்றிலும் மாறாக, பேசின் பிரிட்ஜ் பகுதியில், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க அனல் மின் நிலையம் நிறுத்திவைக்கப்பட்டு, அதே இடத்தில் (Gas Turbine) மின் நிலையம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். சுற்றுப்புறச் சூழலைப் பேணிப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் அதே நேரத்தில், தமிழகத்தின் வளர்ச்சிக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாமல், மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு இந்த அரசு சற்றும் தொய்வின்றிப் பாடுபடுகிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.

**காரணம் என்ன?**

புகை வண்டிகளின், மூலம் சென்னைக்கு வருபவர்களுக்குப் பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்தின் Cooling Tower கள்தான், சென்னை நகரத்தை ஒரு காலத்தில் அடையாளம் காட்டிக்கொண்டிருந்தன. நிலக்கரியிலிருந்து நீராவியை உற்பத்தி செய்து, அதன் மூலம் மின்சாரம் உற்பத்திச் செய்யும் Turbineகள் இயங்கி வந்த சூழ்நிலைகள் மாறி, காலப்போக்கில் இந்த மின் நிலையம், சென்னை நகரின் சுற்றுப்புறச் சூழ்நிலையின் நன்மையைக் கருதி, எழிலார்ந்த சென்னையின் அமைப்பினைக் கருதியும், இயந்திரங்களின் உற்பத்தித் திறனும் குறைந்து விட்டதைக் கருத்தில் கொண்டும் மூடப்பட்டது.

புதுமைக்குப் பழமை வழி விட வேண்டும் என்கின்ற இயற்கை நியதியினடிப்படையிலும், காற்றும், நீரும் மாசு படுவதைத் தவிர்க்கும் வகையிலும், சென்னை நகரின் அதிகபட்ச மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், இந்தப் பதிய மின் உற்பத்தி நிலையம் இங்கே அமைக்கப்படவுள்ளது.

**வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறோம்**

எங்களது தேர்தல் அறிக்கையில், ''மத்திய அரசின் சார்பில், பெரிய அனல் மின்நிலையங்களைத் தமிழ் நாட்டில் அதிக அளவில் அமைக்க வற்புறுத்துவதோடு, தனியாருக்கும் அனல் மின்நிலையங்கள் அமைக்க அனுமதி அளித்து, மின் தட்டுப்பாடே இல்லாத தமிழகத்தை உருவாக்கிடுவோம்'' என்றும், ''சூரிய வெப்பத்திலிருந்தும், கடல் அலைகளின் வெப்ப நிலை வேறுபாடுகளில் இருந்தும், நகரங்களில் வீணாகும் குப்பைக் கூளங்களில் இருந்தும் மின்சாரத்தைத் தயாரிக்கும் முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்'' என்றும், ''எரிவாயுவைப் பயன்படுத்தி, மின் உற்பத்திக்கு வழி வகுக்கப்படும்'' என்றும் கூறியிருந்தோம்.

அன்று தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றும், படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், மின் உற்பத்தியிலும், மின் விநியோகத்திலும், தமிழ்நாட்டில் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். மரபு சாரா எரிசக்தி கொண்டு மின்சாரம் தயாரிக்கும் வகையில், அண்மையில் கரூர் நகரில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் சார்பில், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள தேவர்குளத்தில், 55 கோடி ரூபாய் செலவில், 15 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் காற்றாலைத் திட்டத்தினைத் துவக்கி வைத்தேன். இந்தியாவிலேயே காற்றாலைகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் துறையில், இந்தத் திட்டம்தான் மிகப்பெரியது என்ற சிறப்பினை உடையது என்பதையும் குறிப்பிட்டேன்.

**உலகிலேயே முதல் திட்டம்**

அதே போன்று, வங்கக் கடலில், தூத்துக்குடிக்கு அருகிலுள்ள குலசேகரன்பட்டினம் கடற்பகுதியில், கடலில் நிலவும் வெப்ப வேறுபாட்டைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்வதற்கு ஒரு மின் உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்த, Sea Solar Power நிறுவனம் என்ற ஒரு அமெரிக்க நிறுவனத்துடன் உடன்பாட்டுக் குறிப்பு Memorandum of Understanding எனது முன்னிலையில் சில நாட்களுக்கு முன்பு கையெழுத்திடப்பட்டது. 800 கோடி ரூபாய் செலவில், 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் இந்த நூதனமான திட்டம், உலகிலேயே தமிழ் நாட்டில்தான் முதன்முறையாக அமைக்கப்படவுள்ளதென்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கப்பல் மிதப்பதைப் போன்று அமைக்கப்படும் இந்த மிதக்கும் மின் உற்பத்தி நிலையம் முழுவதும், அமெரிக்காவில் வடிவமைக்கப்பட்டு, Sea Solar Power நிறுவனத்தின் மூலம், தமிழ்நாட்டுக் கடற்கரைப் பகுதியில் நிறுவப்படும். முறைசாரா எரிசக்தி கொண்டு மின்சாரம் தயாரிக்கும் துறையின் பரிணாம வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக, உலகத்திலேயே மற்ற நாடுகளுக்கும் முன்னோடியாக, இந்தியாவில் தமிழகம் இந்தப் புதிய முயற்சியில் இறங்கியுள்ளதென்பது, நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு தமிழரும், ஒவ்வொரு இந்தியரும் பெருமைப் பட வேண்டிய ஒரு விஷயமாகும்.

## பழங்குடியினர் மேம்பாட்டிற்காக...

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக, தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றில் பழங்குடியினர் துணைத் திட்டமும் அடங்கும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் கீழ் 1993-94-ஆம் ஆண்டில், ரூ.28.50 இலட்சம் செலவில், சேலம் மாவட்டம், ஆத்தூர் சின்னகல்ராயன் தாலுக்காவில் உள்ள 20 சிற்றூர்களுக்கு மின் வசதி அளித்திட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் ஆணையிட்டுள்ளார். தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.**

நிலக்கரி போன்ற மரபு சார்ந்த, எரிசக்திப் பொருட்கள் கிடைக்கும் அளவானது பெருமளவு குறைந்து வருகின்ற சூழ்நிலையில், மாறுதல்களை ஏற்கும் துணிவுடன், முறை சாரா எரி சக்திகளை உபயோகப்படுத்துவதற்கு, மற்ற உலக நாடுகள் முன் வருவதற்குத் தமிழ்நாடு ஒரு முன்னோடியாக, வழிகாட்டியாக அமையப் போகிற தென்பது, வியப்பாக இருந்தாலும், அது ஒரு வரலாற்று உண்மை.

**பயன்படும் குப்பைகள்**

சென்னை மாநகரில் நாள்தோறும் அகற்றப்படும் 500 டன் குப்பைக் கூளங்களை ஓரிடத்திற்குக் கொண்டு சென்று அழிப்பதில், மாநகராட்சி நிர்வாகம் பெரும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. அந்தக் குப்பைக் கூளங்களையும் உபயோகமுள்ளதாக்கி, அவற்றி லிருந்து மின்சாரத்தைத் தயாரிக்கும் ஒரு செயல் திட் டத்தை, சென்னை மாநகராட்சி விரைவில் செயல்படுத்த வுள்ளதென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். குப்பைக் கூளங்களைக்கூட விட்டு வைக்காமல், அவற்றை யும் நமது வளர்ச்சிக்குத் துணையாகப் பயன்படுத்துவதில், தமிழகம் ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கி வருகின்றது. விரைவில், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி களிலும், குப்பைக் கூளங்களிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமென்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் துறையிலும், அரசின் கூட்டுத் துறையிலும் மின் நிலையம் அமைப்பதற்கு, முதன் முதலாகத் தமிழ்நாடு தான் மத்திய அரசின் அனுமதியைப் பெற் றுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். தனியார் துறையில் கிடைக்கின்ற மூலதனத்தைப் பயன்படுத்தி, தமிழகத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வழி வகுத்து வருகிறோம். ஜெயங்கொண்டம் லிக்னைட் மின் உற்பத்தி நிலையம், மிகப்பெரிய அளவில், 7,500 கோடி ரூபாய் செலவில், 1,500 மெகாவாட் மின்சாரத்தைத் தயாரிக்கும் வண்ணம் அமைக்க, நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

மேலும், கூடுதலாக 2,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் புதிய மின் நிலையங்களைத் துவக்கிச் செயல்படுத்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ள தென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக மொத்தம், 3,500 மெகாவாட் கூடுதல் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, தமிழக அரசு திட்டங்களைச் செயல் படுத்தவுள்ளது.

**உற்பத்தி அதிகரித்த சாதனை**

இந்த அரசு, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த 30 மாத காலத்திற்குள், மின் உற்பத்தியின் அளவு, 4077 மில்லியன் யூனிட்டுகள் அதிகரித்துள்ளது. நாங்கள் பதவியேற்கும்போது இருந்த மின்சார உற்பத்தியின் அளவுடன், இதனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட 20 சதவீதம் அளவிற்கு, மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. மின் துறையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க வேண்டுமென்கின்ற எண்ணத்தில், "எரிசக்தித் துறை" Energy Department என்ற ஒரு புதிய துறையை உருவாக்கி, மின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வருகின்றோம்.

இங்கே தொடங்கப்பட்டுள்ள இந்த மின் உற்பத்தி நிலையம், மின்சார உற்பத்தியைத் தொடங்கும்போது, இந்தப் பகுதியில் மேலும் பல புதிய தொழிற்சாலைகள் ஏற்பட அது வழிவகுக்கும் என்பதிலும், கடின உழைப்பை நம்பியிருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் பெருகும் என்பதிலும் ஐயமில்லை.

வளர்ச்சிப் பணிகளுக்கும், மேம்பாட்டுத் திட்டங் களுக்கும் விரைந்த தொழில் வளர்ச்சிக்கும், அடிப் படையாக விளங்குகின்ற சட்டம்-ஒழுங்கைப் பேணிக் காப்பதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்குகின்றது. தமிழகக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காகவும், மனிதாபிமானம் மிக்க ஒரு துறையாக அதனை மாற்றவும் இந்த அரசு பல நட வடிக்கைகளை எடுத்துவருகிறது. காவல்துறையினர் என்றால், மக்களின் நம்பிக்கையை முழுமையாகப் பெற்று, அவர்களின் அமைதியான வாழ்க்கைக்கு உத்திர வாதமளிக்கின்ற, உற்ற நல்ல நண்பர்கள் என்ற நல்ல தொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதில் நான் தீவிரமாக உள்ளேன்.

சாதனை புரிய நினைப்பவர்கள், குறை கூறுபவர் களைப் பற்றியும், குற்றம் கூறுபவர்களைப் பற்றியும் கவலைப்படக்கூடாது. மக்களின் நலன் ஒன்றையே தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படும் எங்களுக்கு மக்கள் கொடுக்கும் ஆதரவும், மக்கள் என் மீதும், தமிழக அரசின் மீதும் வைத்திருக்கும் நம்பிக்கையும்தான், எங்களின் நிலையான சொத்துக்கள். அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தினால்தான் எந்தவொரு நாட்டிலும் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த முடியும். நாட்டின் பொருளா தாரம் முன்னேற்றமடைய முடியும்.

ஏழை, எளிய மக்கள் பயன் பெறுகிற வகையில், இந்த அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகின்றது. இலட்சக்கணக்கான பேர்களுக்கு அரசின் நலத் திட்ட உதவிகள், நேரில் சென்றடையும் வண்ணம்

## தெருவோரச் சிறுவர்கள் நலனுக்காக...

அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலமாகத் தெருவோரச் சிறுவர்களின் நலனுக்காக மைய அரசு ஒரு திட்டம் துவக்கியுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் தெருவோரச் சிறுவர்களின் நலனுக்காக இயங்கும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் அச்சிறுவர்களுக்காக அந்தத் திட்டத்தைச் செய லாக்க விரும்புபவர்கள் சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநரிடம் விண்ணப்பிக்கலாம்.

வரும் விண்ணப்பங்களை பரிசீலிக்கவும் மைய அரசுக்கு பரிந்துரை செய்யவும் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படவுள்ளது. மேலும் விவரங்களுக்குச் சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநர், சென்னை-600 010 அவர்களை அணுகுமாறு அரசு சார் பற்ற நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

பல நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். புதியதாக அறிவிக்கப்பட்ட, "15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்" இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் பாராட்டைப் பெற்று, மற்ற சில மாநிலங்களும் நாம் செயல்படுத்தி வரும் இந்தத் திட்டத்தை, அவர்களும் செயல்படுத்த முன்வந்துள்ளார்கள்.

இந்த விழாவினைச் சீரோடும், சிறப்போடும் ஒரு பெரிய மாநாடு போன்று பிரம்மாண்டமான அளவில் ஏற்பாடு செய்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த விழா ஏற்பாடுகளில் அவருக்கு உறுதுணை யாக இருந்து பணியாற்றிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், சகோதரர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் சகோதரர் திரு இ. மதுசூதனன் அவர்களுக்கும், அவர் களுடன் இணைந்து பணியாற்றிய அரசு அலுவலர் களுக்கும், எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மின்துறை அமைச்சரின் ஆற்றல்**

தனது பொறுப்பின் கீழுள்ள அரசுத் துறைகளைப் பற்றிய எல்லா விவரங்களையும் அத்துப்படியாக வைத்திருப்பவர். அன்புச் சகோதரர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள். சட்டமன்றப் பேரவையில் சில எதிர்க்கட்சி உறுப் பினர்கள் கேள்வியைக் கேட்டு, இவரைத் திணறடிக்க முயற்சிக்கும் போதெல்லாம், துறைகளின் விவரங்களை அடுக்கடுக்காக எடுத்துரைத்து, பக்குவமாகப் பதில்களை விரைந்து, மின்னல் வேகத்தில் கொடுத்து, அவர்களை இவர் மடக்கிவிடுவார். பொதுவாக- குறிப்பிட்ட ஒரு துறையின் விவரங்களையெல்லாம் நுணுக்கமாகத் தெரிந்தவர்களை A to Z தெரிந்து வைத்திருப்பவர் என்று சொல்லுவார்கள்.

ஆனால், அன்புச் சகோதரர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள், தனது துறைகளைப் பற்றி A to Z வரை மட்டுமின்றி, Z to A வரை திருப்பிச் சொல்கின்ற அளவிற்கு, அத்தனை அடிப்படை விவரங்களையும் வெகு நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருப்பவர். A to Z வரை சொல்லச் சொன்னால், ஒருவர் எளிதில் சொல்ல முடியும். ஆனால் Reverse-ல் Z to A வரை திருப்பிச் சொல்லுங்கள் என்றால், அதையும் வேகமாகச் சொல்ல வேண்டுமென்றால், அது எத்தனைப் பேரால் முடியும்? மிகவும் கடினமான காரியமல்லவா? ஆனால், சகோதரர் கண்ணப்பன் அவர்கள், தான் பொறுப்பு வகிக்கும் துறைகளைப் பற்றி, Z to A வரை வேகமாகத் திருப்பிச் சொல்லக்கூடிய அளவிற்கு, எல்லா விவரங்களையும் விரல் நுனிகளிலேயே வைத்திருப்பவர்.

சகோதரர் கண்ணப்பன் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் துறை மற்றும் மின்சாரத்துறை ஆகியவை முன் எப்போதும் கண்டிராத அளவிற்கு மிகவும் சிறப்பாகச் செயல் படுகின்றன என்று அனைவரும் பாராட்டுகின்றனர்.





**கபில்தேவ் உலகச் சாதனை:**

**மாண்புமிகு முதல்வர் வாழ்த்து**

விக்கெட்டுகளை வீழ்த்துவதில் புதிய உலகச் சாதனை படைத்ததை யொட்டி கபில்தேவுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வாழ்த் துச் செய்தி அனுப்பியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

"டெஸ்ட் கிரிக்கெட்டில் 432 விக்கெட்டுகளை வீழ்த்தி புதிய உலகச் சாதனை படைத்த உங் களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்தியாவுக்கு நீங்கள் பெருமை தேடித் தந்து இருக்கிறீர்கள். உங் களுக்குத் தமிழக மக்களின் சார்பில் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள் கிறேன். நீங்கள் தொடர்ந்து சாத னைகள் புரியவும், நல்ல உடல் நலத்துடனும், வளமையுடனும் வாழ அருள்புரியவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்".

தனது இடைவிடாத முயற்சியாலும், கடுமையான உழைப்பாலும், பல புதிய மின் உற்பத்தித் திட்டங் களுக்கு, சகோதரர் கண்ணப்பன் அவர்கள் உருக்கொடுத்து இருக்கிறார் என்றால், அந்தப் பெருமையில் பெரும்பகுதி அவரையே போய்ச்சேரும்.

காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் துறையில், இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்திலிருப் பதற்கு, சகோதரர் கண்ணப்பன் அவர்களின் கடுமை யான உழைப்பும், திட்டமிட்டுச் செயலாற்றும் திறமை யும்தான் காரணமென்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

திரு கண்ணப்பன் அவர்கள், கொண்ட கொள்கையில் உறுதியும், ஏற்றுக்கொண்ட தலைமையின் மீது ஆழ்ந்த பற்றும் கொண்டவர். மிகச் சாதாரண பொறுப்பு களுடன், தனது பொது வாழ்க்கையைத் தொடங்கிய சகோதரர் கண்ணப்பன், படிப்படியாக உயர்ந்து கழகத்தின் ஒன்றியச் செயலாளராகப் பணியாற்றி, மாவட்டச் செயலாளராக உயர்ந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, இன்று ஒரு அமைச்சராக நம் முன்னே அமர்ந்திருக்கிறார்.

அவரிடம் காணப்படுகிற ஒரு நல்ல குண நலப் பண்பைச் சுட்டிக்காட்டுவது எனது கடமையென்று கருதுகிறேன். பொது வாழ்க்கையில் ஈடுபடுகின்றவர்கள், சில நேரங்களில் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகலாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், ஒரு முடிவை எடுத்த பின்னர், அந்த முடிவிலிருந்து சற்றும் மாறாமல், உறுதியுடன் இருப்பவர்கள் ஒருசிலர்தான். ஏற்கெனவே எடுத்த முடிவில் உறுதியில்லாமல், சலன மனதுடன் தடுமாற்றம் கொண்டு, தங்களது முடிவுகளை மாற்றிக்கொள்பவர்கள் வாழ்க்கையில் எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாது. இது சரித்திரம் காட்டுகின்ற நிதரிசனமான உண்மை. அன்புச் சகோதரர் திரு எஸ். கண்ணப்பன் எடுத்த முடிவில் என்றும் மாறாத மன உறுதியுடன் மேற்கொண்ட முடிவில் உறுதியாக நிற்பவர். இந்த உறுதிதான் அவரது உயர்விற்குக் காரணம். சகோதரர் கண்ணப்பன் அவர்கள் இன்று ஒரு அமைச்சராக இருந்தாலும், அவரது இந்த உயர்வு, ஒரே நாளில் ஏற்பட்டதல்ல. கொண்ட கொள்கையில் உறுதியுடன் கடுமையாக உழைத்ததால், படிப்படியாக முன்னேறி இன்று ஒரு உயர்ந்த இடத்தை அடைந்துள்ளார். தொடர்ந்து இவர் இப்பொழுதும், தினமும் பல பணி நேரம் கடுமையாக உழைத்து வருகிறார். அதே நேரத்தில், பழகுவதற்கும் இனியவராக அனைவரிடமும் பக்குவமாக நடந்துகொள்கிறார். அன்புச் சகோதரர் கண்ணப்பன் அவர்கள், வளர்ந்து வரும் இளைய சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறார் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

**இரண்டு கோரிக்கைகள்**

எனக்கு முன்னால் வாழ்த்திப் பேசிய இத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர், சகோதரர் திரு தா. பாண்டியன் அவர்கள், இரண்டு முக்கியமான கோரிக்கைகளை இந்த மேடையில் தெரிவித்துப் பேசினார்கள். ஒன்று, Southern Gas Grid; மற்றொன்று Peninsular River Waters Grid.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின்பு, இந்த ஆட்சி அமைந்த பின்பு, பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மத்திய அரசை இந்த இரண்டு கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்குமாறு வற்புறுத்தி வந்துள்ளேன். சகோதரர் திரு தா. பாண்டியன், இங்கே தெரிவித்தது போல், நிதி நெருக்கடி ஒரு காரணமாக இருந்தால், அதையும் சமாளிப்பதற்கு இந்த மாநிலம், தமிழகம், தன்னுடைய பங்கைச் செலுத்தத் தயார் என்று ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த மேடையில், உங்கள் முன்னிலையில் மீண்டும் இந்த இரண்டு கோரிக்கைகளையும் மத்திய அரசுக்கு எடுத்து வைக்கிறேன்.

Southern Gas Grid; Peninsular River Waters Grid (தென்னக எரிவாயுத் தொகுப்பு - தீபகற்ப (தென்னக) நதிகள் இணைப்பு) இந்த இரண்டு திட்டங்களையும் மைய அரசு நிறைவேற்றித் தருமானால், There will be an economic revolution in Tamil Nadu. The whole economy of Tamil Nadu will be transformed என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் மத்திய அரசையும், பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களையும், என்னுடைய இந்த இரண்டு கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்குமாறு தமிழக மக்கள் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். Southern Gas Grid; Peninsular River Waters Grid. என்ற இரண்டு திட்டங்களுக்கும் அனுமதி கொடுத்தால் மட்டும் போதும் நானே இதை துவக்குவதற்கு, நானே முயற்சி எடுத்து, தென்னக மாநில முதலமைச்சர்களை ஒன்றுகூட்டி, முன்நின்று எடுத்துச் செய்வேன் என்பதை மத்திய அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று, தமிழ்நாட்டில், மின்சாரத் துறையில் பல புதிய, புதுமையான திட்டங்கள் தீட்டப்பட்டு விரைவுடன் செயல்படுத்தப்பட்டு வருவதைக் கண்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்கள் மட்டுமின்றி, அயல்நாட்டைச் சேர்ந்தவர்களும்கூட நம்மைப் பாராட்டி வருகின்றனர்.

ஒளிமயமான ஒரு எதிர்காலத்தை நோக்கி, தமிழகம் வெற்றி நடை போடுவதற்கு, உறுதுணையாக விளங்குகின்ற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொறியாளர்கள், பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் ஆற்றி வருகின்ற பணிகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, மின் உற்பத்தித் துறையில் தமிழகம் தொடர்ந்து பல புதிய சாதனைகளைப் படைக்க, நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டுமென்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.''

-இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்.

---

மது அருந்துவதால் மயக்கம், புலம்பல், பைத்தியம், தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி. வலிப்பு, பக்கவாதம், தொண்டைக் கொதிப்பு, இரைப்பைப் புண், கல்லீரல் வீக்கம், மூத்திர நோய், இருதய நோய், இரத்தக் குழாய் தடித்தல், சுவாசகாசம் பாதிப்பு, என்புருக்கி நோய், குடல்புண், கண்களில் உஷ்ணக் கொதிப்பு, விஷசுரம், பரங்கிநோய் முதலியவை வரும்.

மருத்துவ நிபுணர் சர். விக்டர் ஹார்ஸ்லி.






# காசிமேடு காவல் நிலையம்

## மாண்புமிகு முதல்வர் திறந்து வைத்தார்



**சென்னை பேசின்பாலம் எரிவாயு மின் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 31.1.94 அன்று நடந்தது. அவ்வமயம், காசிமேடுப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள காவல் நிலையத்தைத் (எண்:2) திறந்து வைத்தார்.**

உள்துறைச் செயலாளர் திரு. கே. மலைச்சாமி, காவல்துறைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபால், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு. ஆர். இராசகோபாலன் ஆகியோர் பங்கேற்ற இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் புத்தகத்தில் காவல்துறையினருக்குப் பாராட்டும் அறிவுரையும் எழுதிக் கையெழுத்திட்டார். 1992-93-இல் அதிக மதிப்பெண் பெற்ற காவல் துறையினரின் பிள்ளைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகளும் ரொக்கப் பரிசுகளும் அளித்தார்.

## சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு

2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்

2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்

3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா

10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்

600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்
  1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685
சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/684/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



**கோ-ஆப்டெக்ஸ்**

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு



பதிவு எண். M. 8876
Licence No.TN/MS(C)/PP-23







